



பெரியார் மாவட்டச் சிறப்பிதழ்





# தமிழரசு



இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து, 16.4.84 அன்று, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.







# பெரியார் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தோற்றம் | — | 17-9-1979 |
| பரப்பளவு | — | 8170 சதுர கிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | — | 2068492 |
| வருவாய்க்கோட்டங்கள் | — | 3 |
| வளர்ச்சிக் கோட்டங்கள் | — | 2 |
| நகராட்சிகள் | — | 5 |
| வட்டங்கள் | — | 7 |
| நகரியம் | — | 1 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | — | 20 |
| பேரூராட்சிகள் | — | 60 |
| ஊராட்சிகள் | — | 343 |
| வருவாய்க் கிராமங்கள் | — | 510 |
| குக்கிராமங்கள் | — | 3996 |



## பெரியார் மாவட்டச் சிறப்பிதழ்

### ஈரோடு பத்திரிகைகள்

தந்தை பெரியார் அவர்கள் 1932ல் ரஷ்ய நாட்டுக்குச் சென்று திரும்பியபின், அவருடைய 'குடியரசு' பத்திரிகை கம்யூனிஸ்ட் நெடி மிக்கதாயிற்று. எனவே அப்போதைய அரசால் அது தடை செய்யப்பட்டு, அதன் வெளியீட்டாளராக இருந்த அவரது தமையனார் ஈ.வி. கிருஷ்ணசாமி சிறைபிடிக்கப்பட்டார்.

அதன் பிறகுதான் தந்தை பெரியார் 'புரட்சி' என்றொரு பத்திரிகையைத் துவக்கினார். நாளடைவில் அதுவும் தடைசெய்யப்படவே 'பகுத்தறிவு' பத்திரிகை துவக்கப்பட்டது. சில காலத்தில் அந்த ஏடும் தடை செய்யப்பட்ட பிறகுதான் 'விடுதலை' உதயமாயிற்று.

இப்போது ஈரோட்டிலிருந்து 'தினமலர்', 'குறளியம்' 'கோழி நண்பன்' ஆகிய ஏடுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இன்று, மே நாள்;
தந்தை பெரியார் அவர்கள்
தான், ரஷ்யாவுக்குச் சென்று
வந்ததும், தொழிலாளர்
நலனில் பெரிதும் ஆர்வங்-
கொண்டு முதன் முதலாக
மே நாள் கொண்டாடினார்.
அவர் வழி நடந்த
புரட்சிக் கவிஞர் பாரதிதாச-
னாரின் பிறந்த நாள், 29-4-84
அன்று தமிழக மெங்கும்
கொண்டாடப்பட்டது.
இருவருக்கும் நாம்
அஞ்சலி செலுத்துவோம்.




தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — சித்திரை 19
மலர் : 14 இதழ் : 21
1-5-1984

# கலைத் தொழில் வளர்க! கலைஞர்கள் வளர்க!

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.



இந்த விழா ஓராண்டுக்கு முன்னதாக் நடைபெற்றிருக்க வேண்டும். அவ்வாறு நடைபெறாது போனதற்குத் தமிழகத்தில் தோன்றிய வறட்சிதான்காரணம். அதன் பின்னர் வெள்ளம் ஏற்பட்டது. சாதாரண மக்கள் தங்களது வாழ்க்கைக்குப் போராடிக் கொண்டிருந்த சமயத்தில் இந்த நிகழ்ச்சியை நடத்துவது பொருந்தாது என்ற எண்ணத்தின் காரணமாக விழா நடைபெறவில்லை. கடந்த ஆண்டுக்குரிய பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சி இந்த ஆண்டு நடைபெறும் வகையில் பணிகளைச் செய்வோம்.

சிறந்த நடிகர், நடிகையரைத் தேர்ந்தெடுப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பது, அந்தப் பொறுப்புகளை ஏற்றுள்ள குழுவினருக்குத்தான் தெரியும். ஒவ்வொரு நடிகரும் ஏதாவது ஒரு காட்சியில் பாராட்டத்தக்க அளவில் நடிக்கத்தான் செய்கிறார். அவர்கள் அனைவருக்கும் பரிசு தரவேண்டும் என்று நினைத்தால் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டிய நிலை வந்துவிடும்.

பரிசுக்குத் தேர்ந்தெடுக்கும் போது விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவர்களாகப் பணி ஆற்ற வேண்டும். அந்த வகையில் நீதிபதிகள் இங்கே தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

கலை என்பது மற்றவர்களை ஈர்ப்பது மட்டுமல்ல, மற்றவர்கள் மகிழ்ச்சி கொள்ளச் செய்வதும் ஆகும். சாதாரணக் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை மையமாக வைத்து, கதை எழுதி அதனை மக்கள் மன்றத்தில் ஏற்றுக் கொள்ளச் செய்வது என்பது எளிதான பணியல்ல. முன்பு நாங்கள் சொல்லிய கருத்துக்களை விடத் தீவிரமான கருத்துக்களைச் சொல்கின்ற இளைஞர்கள் இன்று திரைப்படத்துறையில் தோன்றியிருக்கிறார்கள்.

கலப்புமணம் குறித்து நாம் பேசுகிறோம்; எழுதுகிறோம். அதைப் பற்றி அமரர் அண்ணா, தந்தை பெரியார் பாணியில் சொல்வதென்றால் அது ஒரு வகையில் அமையும். காந்திய வழியில் சொல்வதென்றால் அது வேறொரு வகையில் அமையும். இந்த இரண்டு பாதைகளில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதில் இயக்குநர்கள் - கதாசிரியர்கள், கலைஞர்கள், தயாரிப்பாளர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும்.

'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் பாரதிராஜா கையாண்ட பாணியைக் கண்டு நான் அதிசயப்படுகிறேன்; திகைப்படைகிறேன்.

கலப்புமணம் செய்து கொள்பவர்கள் தங்களது அடையாளச் சின்னங்களைக் கழற்றி எறிந்து விட்டு மனிதன் என்ற நிலையில் ஒன்றுபடுகின்றனர். தன் உள்ளத்தில் மனிதன் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எதையும் ஏற்படுத்தாது அந்த உச்ச கட்டக் காட்சியை அமைத்திருக்கிறார்கள். அந்தக் காட்சி அனைத்து மதத்தவர்களும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் உள்ளது. அதனைத் தமிழகமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வகையில் சிறந்த சீர் திருத்தவாதியாக - பழமையை எதிர்க்கும் தைரியசாலியாக, துணிச்சல்மிக்க அரசியல்வாதியாக பாரதிராஜா, விளங்குகிறார். அவரது துணிச்சலை என் நினைவு இருக்கும்வரை நான் பாராட்டிக் கொண்டே இருப்பேன்.

முன்பெல்லாம் புராண நாடகங்கள் நடத்திவந்தார்கள். அதனால் சமூக நாடகங்கள் நடத்தப்படும் போது நவீன நாடகம் என்று சொல்வார்கள். சமூக நாடகம், சீர்திருத்த நாடகம் என்றும் விளம்பரப்படுத்துவார்கள்.

அந்தக் காலத்தில் 1930ல் தேசபக்திமிக்க நாடகங்கள் நடத்தப்பட்டன. 'கதர்பக்தி' என்ற ஒரு நாடகம். அதை அரசு தடை செய்தது. அதில் சிவப்பு விளக்குப் பெண் ஒருத்தி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறாள். கதர்த் துணியை விற்கும் கதாநாயகனின் பிரசங்கம் கேட்டு அவள் திருந்துகிறாள். இனிமேல் தவறு செய்யவே மாட்டேன் என்று சூளுரைத்தபடி, நாட்டுத் தொண்டு செய்ய எண்ணி - கள்ளுக்கடை மறியலில் ஈடுபடுகிறாள்.

கள்ளுக்கடை மறியல் காட்சியில் அவள் நடிக்கும்போது - போலீஸ்காரர்கள் தடியடி செய்வார்கள். அந்தப் பெண்ணை இழுத்துச் செல்வார்கள். அந்தச் சமயத்தில் அவள் வெள்ளை ஏகாதியத்திய அரசைப் பற்றிக் கடுமையாகப் பேசுவாள். அந்நிய.

ஆட்சியினால் நமது மக்கள்பட்ட தொல்லைகளை - அனுபவித்த கொடுமைகளை அந்த நாடகம் எடுத்துரைத்தது. கள்ளுக்கடை மறியல் காட்சியைப் பார்ப்பதற்காகவே பெரும்பான்மையான மக்கள் அந்த நாடகத்துக்கு வருவார்கள்.

''தடியடிக் காட்சி வேண்டும் என்றா கேட்கிறீர்கள்! இப்பொழுது நீங்களே தடியடியை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்ற முறையில் போலீசார் பொதுமக்கள் மீது தடியடி நடத்தினார்கள்.

அக்காலத்தில் மக்களுக்கு சுதந்திர உணர்ச்சி நிறைய இருந்தது. அதனால் அதற்கு ஏற்றபடி நாடகக் காட்சிகளும் அமைக்கப்பட்டன. மக்களின் உணர்வுகளுக்கு ஏற்றமுறையில் கருத்து நிறைந்த திரைப்படங்கள் எடுக்கப்பட வேண்டும்.

இங்கே திரு. ராமானுஜம் ஒரு கருத்தைச் சொன்னார். இங்கு தயாரிக்கப்படும் படங்களை வட இந்தியாவில் குப்பை என்று தள்ளிவிடுகின்றனர். அதனால் மத்திய அரசுக்குப் படங்களை அனுப்பப்போவதில்லை என்று சொன்னார். இது சரியில்லை. நீங்கள் படத்தை அனுப்பவில்லை என்றால் அவர்களுக்கு என்ன நஷ்டம்? உங்களுக்குத்தான் நஷ்டம். அதனால் உங்களது உரிமைகளைப் பாதுகாக்க நீங்கள் சட்டபூர்வமாகப் போராட வேண்டும். மைய அரசுக்கு அனுப்ப மாட்டோம் என்ற கருத்தை மறு பரிசீலனை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் காம்பவுண்டு வரியை அறிமுகம் செய்தபோது இங்கு பலர் எதிர்த்தார்கள். அது அவர்களுக்கும் லாபத்தைத் தந்தது; எங்களுக்கும் லாபத்தைத் தருகிறது. நான் இந்தத் தொழிலில் இருந்தேன் என்பதற்காக இதைச் செய்யவில்லை - இந்தத் தொழில் வளர வேண்டும் என்பதற்காக இதைச் செய்கிறேன்.

நான் இனிமேல் படங்களில் நடிக்கப் போவதில்லை. அந்த சகாப்தம் முடிந்துவிட்டது. நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வேன். முன்பு நான் செய்தது தொழில். தற்போது செய்வது தொண்டு. தேவைப்பட்டால் படத்தை இயக்கும் பணியைச் செய்வேன்.


கமலஹாசன்


ஸ்ரீதேவி


கார்த்திக்


ராதா


பாரதிராஜா


மணிவண்ணன்


விசு


இளையராஜா


ஜேசுதாஸ்


எஸ்.ஜானகி


வைரமுத்து


பி.கண்ணன்


கே.ஏ. தங்கவேலு


மனோரமா


ஆர். பாஸ்கரன்


கே.சாரங்கபாணி

இயக்கம் என்பதும் இயக்குநர் என்பதும் மிக மிகப் பொருள் பொதிந்த சொல். இயக்கம் இல்லை என்றால், மனிதன் இல்லை.

பாலுமகேந்திரா அவர்கள் ஒரு பேட்டியில் தெரிவித்த கருத்தை நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

''உங்களுக்கு இதுவரை எந்தப் பரிசும் கிடைக்கவில்லையே'' என்று நிருபர் கேட்கிறார். அதற்கு அவர், ''நான் தமிழகத்துக்குப் பரிசு வாங்கிக் கொடுக்க விரும்புகிறேன்'' என்று கூறியிருக்கிறார். ஒவ்வொரு கலைஞரும் இப்படித்தான் இருக்க வேண்டும்! புகழை நாம் தேடிச் செல்லக் கூடாது. புகழ் நம்மைத் தேடி வரவேண்டும். பரிசை எண்ணிப் படம் எடுக்கக்கூடாது. கடுமையாக உழைத்தால் பரிசும் புகழும் தாமே தேடிவரும்.

அண்ணன் சாரங்கபாணி அவர்கள் நடிப்பில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியவர். அவர் கதாநாயகனாக நடித்த ஒரு படத்தில் கதாநாயகியைத் தொட்டுப் பேசச் சொன்னபோது, தொடமாட்டேன் என்று சொன்னார். அதனால் தயாரிப்பாளர்கள் பெரும்பாடுபட்டார்கள்.

தீவிர காங்கிரஸ்காரரான இவர் எந்தக் குறைக்கும் ஆளாகாதவர். மற்றவர்களுடன் இவர் பழகிய விதம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அவரைத் தேர்ந்தெடுத்து ராஜா சாண்டோ நினைவுப் பரிசை வழங்குவது பொருத்தமான செயல் ஆகும். அவருக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

படத்தயாரிப்பாளர்கள் - கதாசிரியர்கள் - ஆகியோர் ஒருவர்க்கொருவர் மதிப்பளித்து - பொறுப்புகளை ஏற்று ஒற்றுமையுடன் பாடுபட்டால் படம் வெற்றிபெறும். ஆகவே அனைவரும் ஒற்றுமையாக இருந்து பணியாற்ற வேண்டும்.

கலைஞர்கள் உடலைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். உள்ளத்தைத் தெளிவாக வைத்துக் கொள்ளவேண்டும். கலைஞர்கள் வளரவேண்டும். கலைத் தொழில் வளரவேண்டும்!',

**[13.4.84ல் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற கலைஞர்கள்-திரைப்பட விருது வழங்கும் விழாவில் முதல்வர் ஆற்றிய உரையிலிருந்து.]**




## குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டத் தலைமையிடம் | ■ | பஞ்சாயத்து யூனியன் எல்லை | |
| வட்டத் தலைமையிடம் | ● | அகல இருப்புப்பாதை | |
| பஞ்சாயத்து ஒன்றிப்பு தலைமையிடம் | ○ | தேசீய நெடுஞ்சாலை | |
| பஞ்சாயத்து ஒன்றிப்பு பெயர் | குண்டடம் | மாநில நெடுஞ்சாலை | |
| மாநில எல்லை | | இதர சாலைகள் | |
| மாவட்ட எல்லை | | நதியும், ஓடையும் | |
| வட்ட எல்லை | | | |

# மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்!' என்று மனம் கனிந்து கூறிய வள்ளலார் பிறந்த மண், தமிழகம்.

பசித்தவர்க்கு இரங்குகின்ற அருளுள்ளம் கொண்டவர்கள் தமிழகத்தில் தொன்று தொட்டு வாழ்ந்திருக்கிறார்கள். பாரதப் பெரும்போர் - பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடந்தது என்றாலும், இருவரின் படைகளுக்கும் உணவளித்தான் சேரமன்னன் உதியன் சேரலாதன். அதன் காரணமாகப் பெருஞ்சோற்று உதியன் என்றும் அவன் வழங்கப் பெற்றான்.

அந்த நாள் மரபு இந்த நவீன காலத்திலும் மாறிடவில்லை என்பதைத் தமிழகம் இன்று மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது. கட்டை வண்டியில் பயணம் சென்ற காலம் மாறி, இன்று ஜெட் விமானப் பயணம் நடைமுறையில் உள்ள காலத்திலும், சில அரும்பண்புகள்-அடிப்படைப் பண்புகள் மாற்றம் பெறாமல் நின்று நிலவி வருகின்றன.

மழலையர்களே நாட்டின் முக்கிய அங்கங்கள் என்பதை நாடு நன்கு உணர்ந்து வந்திருக்கிறது.

புறநானூற்றுக் காலத்தில் பரிசில் நாடிச் சென்ற பெரும் புலவர்கள் தமது வறுமையை எடுத்துச் சொல்லும் காலத்தில் சிறு குழந்தைகள் உணவில்லாமல் வருந்துகின்ற காட்சியைத்தான் வகைபடக் கூறியுள்ளனர்.

குமண வள்ளலைப் பார்த்துத் தனது வறுமை நிலையை எடுத்துச் சொல்ல முனைந்த பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பாடிய செய்யுள் இதோ :

'ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்ப தேம்புபசி உழவா



பா அல் இன்மையின்தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉம் தன்மகத்து முகம்நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்என்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே-நற்போர்க் குமண''....

மழலைக் குழந்தை படும் அவதியின் காரணமாகத் தான் குமண வள்ளலை நாடிச் சென்றார் புலவர் என்பதை இந்தச் செய்யுள் காட்சியாக்கிக் காட்டுகிறது.

இன்று புகைவண்டி நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும் உணவு விடுதிகளின் வாசற்புறத்தும் பிச்சை எடுக்கும் இரவலர் பலர் கைக்குழந்தைகளுடன் வந்து ''பச்சைக் குழந்தையைப் பாருங்க ஐயா! மனம் இரங்கி பிச்சை போடுங்க ஐயா'' என்று கேட்பதை நாம் காண்கிறோம். சிசுக்களைப் பார்த்தாவது மனம் இரங்குவர் மக்கள் என்ற நம்பிக்கைதான் இதற்கு அடிப்படை.

பிஞ்சுக் குழந்தைகளின் வாழ்வில் பெரும் நன்மைகளை உருவாக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சத்துணவு வழங்கும் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்.

கிராமப்புறங்களில் 2 வயது முதல் 10 வயது வரை உள்ள பிள்ளைகளுக்கு இலவசச் சத்துணவு வழங்கும் திட்டத்தை 1982 ஜூலை முதல் நாளன்று துவக்கினார். ஏறக்குறைய 55.96 இலட்சம் குழந்தைகள் அன்றிலிருந்து சத்துணவு உண்

கே. எம். இராஜு,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்.



ணும் வாய்ப்புப் பெற்றனர். கிராமப்புறச் சமூக நிலைகளிலும் புதிய மாற்றங்களுக்கு இந்த மாபெரும் திட்டம் வழிவகுத்துள்ளது. 1982 செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் நகர்ப்புறங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டது. அதன் காரணமாக இன்று 67 லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப் பெறுகிறது.

2 வயது முதல் 4 வயது வரை ஒரு பிரிவினர். 5 வயது முதல் 9 வயது வரை ஒரு பிரிவினர் என, இத்திட்டத்தினால் பயனடையும் பிள்ளைகள் இரு பிரிவினராக வகுக்கப்பட்டுள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

இங்கு - கிராமப்புறங்களில் உள்ள, குழந்தைகள் நல மையங்கள் 976 மூலம் 56040 குழந்தைகள் 1982—83-ஆம் ஆண்டிலும் 57840 குழந்தைகள் 1983-84ஆம் ஆண்டிலும் பயன் பெற்றுள்ளனர்.

நகர்ப்புறங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள் 100 மூலமாக 1982-83-ல் 4348 குழந்தைகளும் 1983-84-ல் 5239 குழந்தைகளும் பயனடைந்துள்ளனர். நகராட்சிகளில் இயங்கும் குழந்தைகள் நல மையங்கள் 52ன் மூலமாக 1982-83ல் 3386 குழந்தைகளும் 1983-84ல் 3498 குழந்தைகளும் பயனடைந்திருக்கிறார்கள்.

கல்வித் துறையின் மூலம் பெரியார் மாவட்டத்திலிருக்கும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் 1400-ல் 1982-83-ல் 1,01,296 குழந்தைகளும் 1983— 84ல் 1,06,296 குழந்தைகளும் பயனடைந்துள்ளனர். தனியார் பள்ளிகள், நகராட்சிப்பள்ளிகள் ஆதிதிராவிடர் நலத்துறை - பிற்பட்டோர் நலத்துறை ஆகியவற்றின் மூலம் 1982-83-ல் 10,296 குழந்தைகளும் 1983-84-ல் 15,127 குழந்தைகளும் பயனடைந்திருக்கின்றனர். மாவட்டம் முழுதும், குழந்தைகள் நல உதவியாளர் மொத்தம் 2943 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களில் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் 43 பேர் என்பதும், விதவைப் பெண்டிர் 388 பேர் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

ஆதரவற்ற முதியோர்களுக்கும் மதிய உணவு அளிக்கும் திட்டத்தைத் தமிழக அரசு சிறப்புறச் செயலாற்றி வருகிறது. 15-1-83 முதல் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவி பெறும் நபர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தால் ஊராட்சி ஒன்றியங்களில் 5,554 பேர், நகராட்சிகளில் 696 பேர், நகரியத்தில் 2 பேர் என மொத்தம் 6252 முதியவர்கள் பயன் பெற்று வருகின்றனர். இவர்களில் விதவை உதவித் தொகை பெறுபவர், விவசாய உதவித் தொகை பெறுபவர், ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுபவர் ஆகியோரும் உண்டு.

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்று புதுயுகக் கவிஞன் பாரதி தத்துவ முழக்கம் செய்தான். அதனை நிறைவேற்றும் பெரும் முயற்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஈடுபட்டுள்ளதன் காரணமாகத் தமிழகம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கிறது.

அந்தப் பொலிவு-பெரியார் மாவட்டத்திலும் புது மெருகோடு கொலுவோச்சுகிறது என்றால் அது மிகையாகாது!



## பெரியார் மாவட்டச் சுற்றுலா இடங்கள்

பவானிசாகர் அணை

கொடிவேரி அணை

ஆசனூர் மலை

தலைமலை

பர்கூர் மலை



## ஆலயப் பெருமை

நாத்திகம் வளர உரமிடப்பட்ட பெரியார் மாவட்ட மண்ணிலே ஆத்திகர் மனங்கவரும் ஆலயங்களும் பல உண்டு. அவை வருமாறு :

அருணகிரியால் பாடப்பட்ட சென்னிமலை முருகன் கோயில்.

மாணிக்கவாசகர் பாடிய கொடுமுடி மகுடேசுவரன் கோயில்.

சத்தியமங்கலம் மலைப் பகுதியில் உள்ள பன்னாரியம்மன் கோயில்.

பாரியூர் அம்மன் கோயில்.

கல்வெட்டுப் பெருமை உடையதாகக் காவிரி நடுவே அமைந்துள்ள நட்டாற்றீசுவரன் கோயில்.

சிவன்மலை சிவன் கோயில் ஆகியவை களே அவை!

இருபக்கமும் கூர்மையுடைய கத்தியைப் போன்றது வன் முறை; தூண்டிவிடுவோரையே அது பதம் பார்த்துவிடும்!

உடைமாறுவது முக்கிய மல்ல; உள்ளம் மாறுவதும் உயர்ந்த கருத்துக்கள் உள்ளத் தில் பதிவதும்தான் முக்கியம்!

—பேரறிஞர் அண்ணா



ஈரோடு சிதம்பரனார் பூங்காவில், சிறுவர் களுக்கான உல்லாச இரயில் திட்டம் ஒரு இலட் சம் ரூபாய் செலவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.



## பெரியார் மாவட்டத்தில் உள்ள அணைகள்

பவானி சாகர்

உப்பாறு

கொரட்டுப் பள்ளம்

கொடிவேரி

பவானி கூடுதுறை

காலிங்கராயன்

ஜோடர் பாளையம்

பெரியார் மாவட்டச் சிறப்பிதழ்க் கட்டுரைகள் அடுத்த இதழிலும் தொடரும்...

# படமும் செய்தியும்



சென்னையில் (19.4.84) நடைபெற்ற நட்சத்திரக் கலை விழாவில், சென்னை மாவட்டத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்., அவர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு க. சுந்தரமூர்த்தி, இ. ஆ. ப., முதலமைச்சர் நிவாரண நிதிக்கென ரூ. 36 இலட்சம் நிதி வழங்கினார். நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்விழாவிற்கு அரசு தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப., தலைமை தாங்கினார். தமிழ்ப்பட உலகின் முன்னணிக் கலைஞர்களெல்லாம் பங்கேற்ற இவ்விழாவில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன், நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன், எம். பி., ஆகியோர் உரையாற்றினர். விழா முடிவில் பங்கேற்ற கலைஞர்களுக்கும், நிதி திரட்ட ஒத்துழைத்த அலுவலர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்க மோதிரம் அணிவித்துப் பாராட்டினார்.

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியிலுள்ள பாரதிதாசன் சாலையில் பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவாகக் கட்டப்பட்ட வட்டார நூலகத்தைச் சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர், செல்வி ஜெயலலிதா 4.4.'84ல் திறந்து வைத்தார். அப்போது அவரிடம் தமிழ்நாட்டிலுள்ள பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் சார்பில்- முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட நிதியாகப் பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது. அவ்விழாவில் பங்கேற்ற மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, திரு. செ. அரங்கநாயகம், திரு. ப. குழந்தைவேலு ஆகியோர் உடனிருக்கின்றனர்.





### பெரியார் மாவட்டம்:

# நலிவுற்ற மக்களுக்கு நலன் பயக்கும் திட்டம்

**ந**லிவுற்ற மக்களின் சமூக பொருளாதார நிலை மேம்பட ஊரக வளர்ச்சிக்கென நாட்டில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் ஒன்றாகும்.

வறுமைக்கோட்டின் கீழே உள்ள ஊரகக் குடும்பங்களுக்குச் சுயவேலை வாய்ப்பளித்து வருமானம் பெறக் கூடிய தொழில் வாய்ப்புக்களை உண்டு பண்ணத் தனிக் கவனம் செலுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோள்.

நாட்டின் பொருளாதார நிலை பல்வேறு வகையில் பரந்து வலிவு பெற்றிருப்பினும் தற்போது 50 சதவீதத்திற்கு மேல் கிராமப்புறக் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழேதான் வாழ்கின்றன.

சிறுவிவசாயிகள், குறு விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், வேளாண்மையைச் சாரா தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள் போன்ற வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதி வாய்ந்த குழுவில் அடங்குவர். இத்தகைய குடும்பங்கள் கிராமப்புறத்தில் பாதிக்கு மேல் இருப்பதால், இவர்களில் பலரைப் பொறுக்கியெடுத்து உதவி செய்திட ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளது. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களைப் பொறுக்கி அவர்களுக்கு முதலில் உதவ வேண்டியதையே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நாடுகிறது.

வேளாண்மையைச் சார்ந்தும் சாராமலும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,500 அல்லது அதற்கும் கிழே வருமானம் ஈட்டும் ஒரு குடும்பமே வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளதாகக் கருதப்படுகிறது.

ஊரகக் குடும்பங்கள் எல்லாமே பெரும்பாலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உதவி பெறத் தகுதியுடையதாக இருப்பினும், மிகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கே இத்திட்டத்தின்கீழ் உதவியளிக்க முன்னுரிமை வழங்கப்படுகிறது.

ஊரக ஏழைக் குடும்பங்கள் உற்பத்தித்திறனுள்ள சொத்துக்கள்பெற வாய்ப்பளித்து அவர்கள் வறுமைக்கோட்டைக் கடந்து மேலோங்கிச் செல்ல உதவி புரிவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் பயனடைவோர் தங்களின்வருமானம் படிப்படியாகப் பெருகி வறுமைக் கோட்டிற்கு மேல் தரமான வாழ்க்கை நிலையை எய்த வேண்டுமென்பதே இத்திட்டத்தின் சீரிய குறிக்கோளாகும். வங்கிகள் மூலம் கடனுதவியளித்து அரசு மானியம் அளிக்கவும் இத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்திலே இதுவும் ஒன்று.

ஆண்டொன்றுக்குச் சராசரியாக வட்டாரத்திற்கு 400 குடும்பங்களுக்கு வேளாண்மைத்தொழிலுக்கும் அதைச் சார்ந்த தொழிலுக்கும் மானிய உதவியும், வேளாண்மையைச் சாராத - அதாவது தொழிற்சாலை அமைத்தல், சேவை செய்தல், வாணிபத் தொழில் போன்ற தொழிலில் ஈடுபடும் 200 குடும்பங்களுக்கு மானிய உதவியும் அளிக்கப்படுகிறது.

பயனுறுவோருக்குப் பயன்படும் உள்ளமைப்பு வசதிகளை ஆதாரமாக அமைக்கும் வண்ணம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதிச் செலவினை — முதலீட்டை அதாவது மொத்தத்தில் 10 சதவிகிதத்தை இத்தகைய ஆதார உள்ளமைப்பு ஏற்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

அந்தந்த வட்டாரத்தில் கிடைக்கும் வளங்களையும் வேலை வாய்ப்பையும் பயன்படுத்தி ஊரக ஏழை மக்களின் நலனுக்காக முறையாகவட்டார அளவில் திட்டமிட்டே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்படுவதற்கான வழிமுறைகளையும், அறிவுரைகளையும் அறிந்து வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வெற்றி பயனுறு



## முதல்வரின் முத்துக்கள்

**நாட்டின் தற்காப்புக்காக உயிரையும் பணயம் வைத்துப் போராடவேண்டியது நம் ஒவ்வொருவரது கடமையுமாகும்!**

**நமக்குள் பல்வேறு பிரச்னைகள் இருக்கலாம்; ஆனால் அந்த நேரத்தில் இந்தியாவைப் பிரிக்க எந்த சக்தி வந்தாலும் அதை எதிர்த்தே ஆகவேண்டும்!**

**அரசியல் கட்சிகளில் சேருபவர்கள் எந்தத் தொழிலும் செய்யக்கூடாது என்பதல்ல; அவர்கள் செய்யும் தொழிலில் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும்!**

**சக்தி குறைந்தவர்களிடம் வீரத்தைக் காட்டுவது சரியல்ல!**

**நாம் வந்த வழியை மறந்து விட்டோமானால், போகும் வழி நமக்குப் புரியாமல் போய்விடும்!**

வோர்களின் கடன் பெறும் வாய்ப்பைப் பொறுத்தே அமைகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் வரன்முறை ( Sheduled ) வங்கிகள் போன்ற பொதுத்துறை கடன் வழங்கு நிறுவனங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான கடன் தேவையை நிறைவேற்றுகின்றன.

பெரியார் மாவட்டத்தில், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வரன்முறை வங்கிகள் 150 உள்ளடக்கிய ஒரு தொடர் அமைப்பு இயங்கி வருகிறது. இம் மாவட்டத்தில் கனரா வங்கி முதன்மை வங்கியாக இயங்குகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மாவட்ட அளவில் பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயலாக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் பல துறையினரும் ஒத்துழைப்பு நல்கி கண்காணிக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலே மாவட்ட ஊரக வளர்ச்சி முகாம் இயங்குகிறது. திட்டத்தைச் செயற்படுத்த உதவித் திட்ட அலுவலர் (வேளாண்மை), உதவித் திட்ட அலுவலர் (கால்நடை), உதவி திட்ட அலுவலர் (புள்ளியியல்) உதவித்திட்ட அலுவலர் (கூட்டுறவு), மற்றும் உதவித்திட்ட அலுவலர் (தொழில்) போன்ற 5 மாவட்ட அலுவலர்கள் துணை கொண்டு திட்ட அலுவலர் செயல்பட்டு வருகிறார்.

நிர்வாகத் தேவையான குறைந்த அளவிலான பணியாளர்கள் இம்முகாமில் உள்ளனர். வட்டார அளவில் கால்நடை, ஆதிதிராவிடர் நலம் ஆகியவற்றிற்கான விரிவாக்கு அலுவலர்கள், ஊர்நல அலுவலர்கள் போன்றோரின் துணையுடன் வட்டார வளர்ச்சி அலுவலர் செயல்பட்டு வருகிறார்.

தனது வேலை வாய்ப்பைப் பெற்று, தானே தனித்து இயங்குவதற்கு ஏதுவாக தக்க தொழில் நுட்ப அறிவையும், பயிற்சியையும் அளித்து ஊரக இளைஞர்களை ஆளாக்குவதே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் தலையாய குறிக்கோள்களில் ஒன்றாகும். இத்திட்டம் 'ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டம்' (டிரைசம்)என வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியுடையோரில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 40 பேருக்கு ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் ஈரோடு, தாராபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசுத்துறை தொழிற் பயிற்சி நிறுவனங்கள், பவானி சாகரிலுள்ள மாநில ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிறுவனம் போன்றவைகளின் மூலம் பல தொழில்களில் பயிற்சி பெற ஏற்பாடு செய்யப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள் ஊரகக் கைவினைஞர்கள்போன்ற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இனங்காணப்பட்ட அனைவரும் இப்பயிற்சி பெறத் தகுதியுடையோராவார்.

வட்டார வளர்ச்சி அலுவலர், முதன்மை வங்கியின் கிளை மேலாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் அலுவலர் ஆகியோரடங்கிய ஒரு குழுவால் வட்டார அளவில் பயிற்சியாளர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

பயிற்சி தொடங்குவதற்குமுன் மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமையின் இசைவு பெறல் வேண்டும். பெற்றபின் கால தாமதமின்றிப் பயிற்சியைத் தொடங்க வேண்டும். இப்பயிற்சியாளர்கட்குத் தொழில் துணைக் கருவிகள் வழங்கப்படுவதோடு, திங்கள் தோறும் உபகாரச் சம்பளமும் கொடுக்கப்படுகிறது.

பயிற்சி முடிந்ததும் தானே தொழில் தொடங்குவதற்குத் தேவையான கடன் வங்கியாலும் அதற்குரிய மானிய உதவி மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமையாலும் கொடுக்கப்படுகிறது.

கடந்த நான்காண்டுக் காலத்தில், பெரியார் மாவட்டத்திலே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சாதனை பின்வருமாறு :

1981-82-ஆம் ஆண்டு பயன் பெற்றோர்எண்ணிக்கை12485. வழங்கப்பட்ட மானியத் தொகை ரூபாய் 122.96 இலட்சங்கள்;

1982-83-ஆம் ஆண்டு பயன் பெற்றோர் எண்ணிக்கை 14275; வழங்கப்பட்ட மானியத் தொகை ரூபாய் 165.55 இலட்சங்கள்.

1983-84-ஆம் ஆண்டு (29-2-84 வரை) பயன் பெற்றோர் எண்ணிக்கை 13460. வழங்கப்பட்ட மானியத் தொகை ரூபாய் 104.83 இலட்சங்கள்.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காகச் சிறு, குறு விவசாயிகட்கென ஒரு புதிய தேசிய திட்டத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டமும் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் செயலாக்கப்படுகிறது. சிறுபாசனத் திட்டம், மற்றும் நிலம் சமப்படுத்துதல், நிலவளத்தை மேம்படுத்துதல், சம உயர் வரப்பு போன்ற நிலச் சீர்திருத்தம் செய்வதற்கு, சிறு குறு விவசாயிகட்குக் கடன், மானிய உதவி ஆகியவை இத்

திட்டத்தின்கீழ் அளிக்கப்படுகிறது.

1983-84ஆம் ஆண்டில் இத் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 3.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்டம் முழுவதற்கும் ரூ. 70 இலட்சம் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதில் பங்கேற்கும் வங்கிகளும் முகமைகளும் அவைகளுக்கான திட்டக் குறியீடும் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் செயல்படுத்தப்படும் மற்றொரு முக்கியமான தேசிய திட்டங்களில் ஒன்று தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமாகும். வேலையின்மையும், போதுமான வேலையின்மையும் ஊரகப்புறங்களில் பெரும் சிக்கலை உண்டாக்கி வருகிறது. இந்நிலை வேளாண்மைப் பணிகள் இல்லாத காலங்களில் மேலும் கொடுமையாகிவிடுகிறது. இதுவே நாட்டின் வறுமை நிலைக்கும், கேடான உணவு நிலைக்கும் காரணமாகிறது.

ஊரகப் பொருளாதாரச் சீர் கேட்டைத் திருத்தி உயர்த்த உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்கிப் போதுமான வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்க



ஏதுவாக ஆகும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தத் தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம் ஒரு முறையான திட்டமாகத் தற்போது செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் பின்வரும் அடிப்படை நோக்கங்களைக் கொண்டுள்ளது :

ஊரகத்திலுள்ள வேலையற்ற போதுமான வேலையற்ற ஆண் பெண் ஆகியோருக்குக் கூடுதலான சம்பாத்தியம் அளிக்கும் வேலை வாய்ப்பை உண்டாக்குவது, ஊரகப் பொருளாதாரத்தை விரைந்து வளர்ச்சியுற வழிவகுக்கும் ஊரக உள்ளமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல், ஊரக மக்கட்குச் சத்துணவுள்ள வாழ்க்கைத்தரத்தை அமைத்தல் ஆகியவைகளே அவை.

இத் திட்டத்தின்கீழ், கூலியின் ஒரு பகுதி ரொக்கமாகவும், ஒரு பகுதி தானியமாகவும் வழங்கப்படுகிறது. நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு ஒரு கிலோ தானியம் கூலியின் ஒரு பகுதியாகவும் மீதி ரொக்கமாகவும் கொடுக்கப்படுகிறது.

1982-83-ஆம் ஆண்டுக்கு ரூ. 1.71 இலட்சமும் 1983-84ஆம் ஆண்டுக்கு இதுவரை ரூ. 159 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது.



விழா

பெரியார் மாவட்டத்தில் மக்கள் மகிழ்ந்து கொண்டாடும் விழாக்கள் பவானி கூடுதுறை 18ஆம் பெருக்கு, அந்தியூர் குருநாத சுவாமி கோயில் திருவிழா, பாரியூரம்மன் கோயில் திருவிழா, தாராபுரம் வட்டம் - நாட்டராயன் கோயில் திருவிழா, சென்னிமலை தைப்பூசத் தேர்த் திருவிழா, பன்னாரியம்மன் கோயில் தீ மிதித் திருவிழா, ஈரோடு பெரிய மாரியம்மன் கோயில் திருவிழா, பவானி செல்லாண்டியம்மன் கோயில் திருவிழா, கொளா நல்லித் தேர்த் திருவிழா ஆகியவைகளாகும்.

பெரியார் மாவட்டம்:

# சித்திரக் கைத்தறி

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள் அந்தக் காலத்தில்; கூட்டுறவுச் சங்கம் வைத்துத் தொழில் வளர்த்து வருகிறார்கள் இந்தக் காலத்தில்.

பெரியார் மாவட்டத்திலே மட்டும் 183 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் குறிப்பிடத்தக்க பெருமையுடையதாகச் சில இருக்கின்றன; அவற்றில் 'ஜம்பை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம்' அதாவது 'ஜாம்டெக்ஸ்'. 'சென்டெக்ஸ்' எனப்படும் சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச்சங்கம்', 'ஈரோடெக்ஸ்' எனப்படும் 'ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்' ஆகியவை முக்கியமானவை.

**'ஜாம்டெக்ஸ்'**

ஜமுக்காளம், படுக்கை விரிப்பு, தரைவிரிப்பு, துண்டு ஆகியவற்றை அற்புதமாகத் தயாரிக்கும் 'ஜாம்டெக்ஸ்' 8-3-64-ல் பதிவு பெற்றது; 21-1-83ல் சொந்தக் கட்டடத்தில் செயல்படத் தொடங்கியது.

துவக்க காலத்திலிருந்து இதில் உறுப்பினர்களாக இருந்தோர் எண்ணிக்கை 383 என்றாலும், இப்போதிருப்போர் எண்ணிக்கை 175 ஆகும்.

மற்ற வேலைகளைப் போல் அல்ல; ஆண்டு முழுவதுமே இங்கே 175 பேருக்குத் தொடர்ந்தாற்போல எப்போதும் வேலையிருக்கும்.

28''-லிருந்து 60'' வரை அளவிலான அழகு வண்ண ஜமுக்காளம் தயாரிக்கும் இவர்கள் தமக்குத் தேவைப்படும் நூலை 'கோ-ஆப்டெக்ஸ்' மூலமே பெற்றுக்கொள்ளுகிறார்கள். தயாரிப்புகளை அவர்கள் மூலமே விற்பனைக்கும் அனுப்புகிறார்கள். சில நேரங்களில் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் மொத்தமாக விற்பதுண்டு.

20-7-65 முதல், திரு. எஸ். ஆர் பாட்டப்பன் தான் இதன் நிரந்தரத் தலைவராக இருந்து வருகிறார். ''இங்கிருந்து ஐந்து கிலோ மீட்டரில் உள்ள பவானிக்குப் போய்தான் மருத்துவ சிகிச்சை பெற வேண்டுமென்ற நிலையிருக்கிறது. கூடிய சீக்கிரமே ஜம்பையில் ஒரு மருத்துவமனை கட்ட ஏற்பாடு செய்து வருகிறோம்'' என்றார் அவர்.

மாதம் ஒன்றுக்கு, அதிகபட்சம் 80 ஆயிரம் வரை ஜமுக்காளங்கள், படுக்கை விரிப்புபோன்றவைகளைத் தயாரிக்கும் இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தார், தங்கள் உறுப்பினர்களுக்கு, இலாபம் கிடைக்கிறபோது 31 சதவிகிதம் போனஸ் தருகிறார்கள். கர்னாடகம், மகாராட்டிரம், ஆந்திரா போன்ற பிற மாநிலங்கள் வரை இவர்கள் உற்பத்திக்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது.

இப்போதுள்ள சொந்தக் கட்டடம், ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 1.80 இலட்சம் மானியமும், ரூ. 1.80 இலட்சம் கடனும் வாங்கிக் கட்டி முடிக்கப்பட்டதாம். தொழிற்கூடம், தொழிலுக்கான கருவிகள் எல்லாமே அந்தத் தொகையிலேதான் வாங்கப்பட்டிருக்கின்றன. இந்த நெசவாளர் சங்க வளர்ச்சிக்கெனத் தொழிலதிபர் பொள்ளாச்சி திரு. என். மகாலிங்கம் இருபத்தையாயிரம் ரூபாயை இதயபூர்வமாக வழங்கியிருக்கிறார்.

இங்கு வரும் நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கும் உட்படுத்தப்படுகின்றனர். மருத்துவ உதவி, விழாக்கால முன் பணமெல்லாம் கூட அவர்களுக்கு உண்டு.

திரு. பாட்டப்பன், திரு. நாச்சிமுத்து, திரு. சுத்தானந்தன்



**ஜம்பை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தின் சிறப்பு அம்சம் என்ன தெரியுமா? இங்கே உள்ள**

—இல. இராசேந்திரன்



உறுப்பினர்கள் எல்லாம் முழுக்க முழுக்க ஆதிதிராவிடர்களே!



சத்தியமங்கலம் :

அசோகச் சக்கரவர்த்தியின் பாறைச் சாசனங்களில் குறிக்கப்பட்டுள்ள சத்தியபுத்திரர் ஆட்சிப் பகுதி இது. மைசூர்ப் போர்களில் மையமாக விளங்கிய இங்கொரு கோட்டையும் உண்டு. திப்புசுல்தானால் பாங்குற அமைக்கப்பட்டு பாலமெல்லாம் அமைக்கப்பட்ட சாலையொன்று இங்கே இப்போதும் பழுதற்ற நிலையில் காணப்படுகிறது.

**'சென்டெக்ஸ்'**

கைத்தறித் துறையில் 'சென்டெக்ஸ்' என்ற பெயர் மிகவும் பிரசித்தம். சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கமே அப்படி அழைக்கப்படுகிறது. குன்றுதோறாடும் சென்னிமலைக் குமரனின் அடிவாரத்திலே அமைந்திருக்கும் இச்சங்கத்திற்கான மாபெரும் கட்டடம் அண்மையில்தான் திறந்து வைக்கப்பட்ட தென்றாலும், இந்தச் சங்கம் துவக்கப்பட்டது 7-4-1941-ல்.

துவக்கத்தில் 45 உறுப்பினர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சங்கத்தின் இப்போதைய எண்ணிக்கை 660 ஆகும்.

படுக்கை விரிப்பு, துண்டு, ஜன்னல் துணி, சோபா உறைத் துணி, பாலியஸ்டர் துணி போன்ற வகையறாக்களை கலை நுணுக்கமும், கை வண்ணமும் மிளிரும் வகையிலே தயாரித்து வருகிறார்கள் இவர்கள். 'கோ-ஆப்டெக்ஸ்' இடமும், மொத்த வியாபாரிகளிடத்திலும் தான் இதன் விற்பனை என்றில்லை; சில்லறை வியாபாரமும் இங்குண்டு.

பம்பாய், மைசூர், ஐதராபாத், லக்னோ, கல்கத்தா, பெங்களூர் போன்ற மற்ற மாநில முக்கிய நகரங்களிலே நடக்கும் கைத்தறிக் கண்காட்சிகளில் இவர்கள் முக்கியப் பங்கு வகித்துள்ளனர்; வகித்து வருகின்றனர். ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு நடத்தும் கைத்தறித் துணிப்போட்டிகளில் பலமுறை இந்தச சங்கத்தார் முதல்பரிசு பெற்றதுண்டு. உன்னதமான இவர்களுடைய தயாரிப்புகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, டென்மார்க், சுவீடன், கனடா, பிஜித் தீவு, மேற்கிந்தியத் தீவுகள் என அங்கிங்கெனாதபடி எங்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

1962-63-ல், தமிழ்நாடு கைத்தறி செவாளர் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழாவின்போது, தமிழகத்திலுள்ள அனைத்து நெசவாளர் சங்கத்திலும் இதுவே தலைசிறந்ததெனக் கூட்டுறவுத் துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு வெள்ளிக் கேடயமொன்று வழங்கப்பட்டிருக்கிறது.

1979-ல் இவர்களின் தயாரிப்புகள் இணையற்றவை என்பதற்கான 'ஐ.எஸ்.ஐ.' முத்திரை, இந்தியாவிலேயே முதன் முதலாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இந்தச் சங்கத்திற்குத்தான் அளித்திடப்பட்டது.

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தார், அரசின் உதவியோடு தமக்கென்றே ஒரு சாயச் சாலையும் நிறுவியிருக்கிறார்கள்.

இந்த நெசவாளர் சங்கம் உருவாகவும், அதன் முன்னேற்றத்திற்காகவும், அரும்பாடு பட்டு வருபவர் இச்சங்கத் தலைவர் திரு எம். பி. நாச்சிமுத்து ஆவார். அந்த நன்றி காரணமாகச் சங்கக் கட்டடத்தின் நுழைவாயிலில் அவருக்குப் பளிங்குக் கல்லாலான சிலையொன்று எழுப்பிப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள்.

சென்னை, பெங்களூர், மதுரை ஆகிய பெருநகரங்களில் விற்பனை நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இச் சங்க உறுப்பினர்களுக்கென்றே சென்னிமலையில் 2 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. கூட்டுறவுப்பண்டகசாலை, விருந்தினர் விடுதி, இலவச மருந்தகம், சமுதாய நலமன்றம் எல்லாம் அங்குண்டு.

**'ஈரோடெக்ஸ்'**

பெரியார் மாவட்டத்திலிருக்கின்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றான 'ஈரோடெக்ஸ்' எனப்படும் 'ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்'

## பொன்மொழிகள்

ஒருவன், தான் விரும்பும் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம்!

அறிவு, தன்மான உணர்ச்சி இவை இல்லையேல் பட்டம் பல பெற்றாலும் பல கோடி பணம் சேர்த்தாலும் பலனில்லை!

அறிவை நம்புங்கள்; அப்போதுதான் விஞ்ஞான அற்புதங்களைச் செய்து காட்ட முடியும்!

உலகுக்குப் பயன்படும் பாதி மனித சக்தியை நாம் பெண்ணடிமை மூலம் விரயப்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

—தந்தை பெரியார்



**விஜயமங்கலம் :**

சமணமதத்தைக் காலூன்றச் செய்த 24 தீர்த்தங்கரர்களில் ஒருவரான ஸ்ரீ சந்திர பிரப தீர்த்தங்கரர் ஆலயம் இங்குள்ளது. கொடும் பாளூர் இருக்குவேளிர் கலைநுணுக்க முறையிலே கட்டப்பட்ட மிகப் பழமையான இக்கோயிலில் 10-ஆம் நூற்றாண்டு ஓவியங்களும் உள்ளன. எம்மதத்தாரும் சம்மதிக்கும் மிகப் பழைய தமிழிலக்கண நூலான 'நன்னூல்' இயற்றிய பவணந்தி முனிவர் சிலை இங்கிருக்கிறது. அவரை ஆதரித்த தங்கமன்னன் சீயகங்கன் சிலை, பெருங்கதை காப்பியம் பாடிய கொங்கு வேளிர் சிலை ஆகியவைகளும் உள்ளன இங்கே. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை தமிழ்ச்சங்கம் ஒன்றும் இங்கு இருந்ததெனக் கற்றறிவாளர்கள் கூறுகின்றனர்.

* இராவண காவியம் 'பாடிய புலவர் குழந்தை பிறந்தது பெரியார் மாவட்டத்திலே தான்!

தின் தலைவரான திரு. ஜே. சுத்தானந்தனின் அறையில் பெரிய அளவில் திரு. எம். பி. நாச்சிமுத்து அவர்களின் படம் வைக்கப்பட்டிருப்பதன் காரணம் பற்றி யார் கேட்டாலும் ''அவர் இல்லாமல் கைத்தறித் தொழில் இல்லை; இத்தொழிலின் தந்தை அவர் (Father of Handlooms)'' என்று மிகப் பெருமையோடு குறிப்பிடுவார்.





*1947*-ல் *81* உறுப்பினர்களோடு துவக்கப்பட்ட இந்தச் சங்கத்தில் இப்போது 587 பேர் அங்கம் வகிக்கின்றனர். ரூ. 9550 பங்கு மூலதனத்தில் அன்று துவக்கப்பட்ட இச் சங்கத்தின் இன்றைய பங்கு மூலதனம் 6 இலட்சத்து 20 ஆயிரத்து 245 ரூபாயாகும்.

படுக்கை விரிப்பு, தலையணை உறை, பாலிஸ்டர் சூட்டிங்ஸ் போன்றவைகளைச் சிறப்புற உருவாக்கும் இவர்களின் தயாரிப்புகளுக்கு ஆந்திரா. கர்னாடகம் போன்ற வெளி மாநிலங்களில் நல்ல வரவேற்பிருக்கிறது.

இக் கூட்டுறவுச் சங்கத்தார் நலன் கருதி 'டிஸ்பென்சரி' ஒன்றும் வைத்திருக்கிறார்கள். மருந்துகளுக்கு, மருத்துவருக்கு என ஆண்டொன்றுக்கு ரூ. 20 ஆயிரம் ஒதுக்கப்படுகிறது.

இவர்கள் அமைத்துள்ள நூலகத்தில் ஏறத்தாழ நான்காயிரம் நூற்கள் வைக்கப்பட்டுள்ளன. காலை, மாலை தினசரிகளும் அங்கே போடப்படுகின்றன. ஓய்வு நேரத்தில் உறுப்பினர்கள் இந்த நூலகத்தினால் நல்ல பயன்பெற்று வருகிறார்கள்.

ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தமது உறுப்பினர்களுக்கென முதலில் 50 வீடுகளைக் கொண்ட தனிக் குடியிருப்பொன்றை ஏற்படுத்தியது. பின்னர், உறுப்பினர்கள் எண்ணிக்கை பெருகவே 109 வீடுகளைக் கொண்ட இன்னொரு குடியிருப்பும் கட்டப்பட்டிருக்கிறது. இப்போது 110 வீடுகளைக் கொண்ட மற்றொரு குறியிருப்பும் கட்டப்பட்டு வருகிறது.

கூட்டுறவுப் பண்டகசாலையொன்றும் அமைத்து தரமான பொருட்களைத் தம் உறுப்பினர்கள் பெறச் சிறந்ததோர் ஏற்பாடும் செய்திருக்கிறார்கள் இவர்கள்,

ஈரோடு, சென்னை, மதுரை, திருச்சி எனத் தமிழக முக்கிய நகரங்களிலே மட்டுமின்றி வெளி மாநில முக்கிய நகரங்களிலும் இவர்களுடைய விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1981-82-ல் தமிழ் நாட்டிலேயே சிறந்த கூட்டுறவு நெசவாளர் சங்கம் இதுவெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மத்திய அமைப்பொன்று தங்க மெடலே கொடுத்துப் பாராட்டியிருக்கிறது.

மாதம் ஒன்றுக்கு 15 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள தயாரிப்பு இனங்களை உருவாக்கும் இச்சங்கத்தினர் நம்பப்படத் தயாரிக்கும் துண்டுக்கென விரைவிலேயே 'ஐ.எஸ்.ஐ.' முத்திரை கிடைக்கவிருக்கிறதாம்; சங்கத் தலைவர் திரு ஜே. சுத்தானந்தன் பெருமையோடு இதை நமக்குத் தெரிவித்தார்.

பெரியார் மாவட்டம்:

# வன வளம்



பெரியார் மாவட்டம் ஈரோடு சரகத்தில் 1067.15 சதுர கிலோ மீட்டர் அளவில் வனப்பகுதி விரிந்து கிடக்கிறது.

மேட்டூர் அருகே பாலமலையிலும், பர்கூர், தாமரைக்கரை, வேளாமண்டி, நீலகிரியின் கீழைச் சரிவு ஆகிய இடங்களிலும் பரவியுள்ளன பெருங்காடுகள். சென்னிமலை வாய்ப்பாடி, ஊதியூர், தளவாய் பட்டணம், கருடன் கோட்டை ஆகிய ஊர்களில் சிறு வனங்கள் உள்ளன.

நீலகிரி கீழைச்சரிவு, பர்கூர் வனாந்தரங்களில் யானை, மான், கரடி, முயல் போன்ற வன விலங்குகள் மகிழ்ந்து திரிவதைக் காணலாம். மேட்டூர் அருகே உள்ள தண்டா பகுதியில் அண்மையில் ஒரு யானை கொல்லப்பட்டு தந்தம் களவாடப்பட்டதை வன அலுவலர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். குற்றவாளி தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

134 வன அலுவலர்கள் உள்ள ஈரோடு வனச் சரகத் தலைமை அதிகாரியாக இருப்பவர் திரு. டி. எம். அப்பாவு.

கிரியகண்டி, தண்டாறு, செல்லம்பாளையம், கொளத்தூர் ஆகிய இடங்களில் செக் போஸ்ட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. சந்தன மரங்கள், கடுக்காய், புளி, ஆவாரம், தேக்கு, சீயக்காய், நெல்லி போன்ற பயன் தருமரங்களும் இந்த வனப் பகுதிக் காட்டு மரங்களிடையே கணக்கின்றிக் காணப்படுகின்றன.

பாலமலை வனச் சரகத்தில் இருக்கின்ற குவாரியிலிருந்து கருப்புக்கல் எடுக்கிறார்கள். ஒரு கியூபெக் மீட் அளவு கல் எடுக்கப் பட்டதென்றால், அந்த வனப் பகுதியை விட்டு வெளியே கொணர ரூ. 200 பணம் கட்ட வேண்டும். இந்த வனப்பகுதிக்கு இது ஒரு இதர வருமானமுள்ள பணியாக நடந்து வருகிறது.

பெரியார் மாவட்டத்திலுள்ள மற்றொரு வனசசரகமான சத்தியமங்கலம் வனச்சரகம் எப்படியிருக்கிறது? மாவட்ட வன அலுவலரான திரு அ. கரிகாலனைச் சந்தித்துக் கேட்டோம். அவர் சொன்ன பதில்களின் விவரம் வருமாறு:

பெரிதும் மலைப் பகுதிகள் உடையதான இந்த வனச்சரகம் சுமார் ஒரு இலட்சத்து40ஆயிரம் எக்டேர் பரப்பளவில் விரிந்து கிடக்கிறது. தாளவாடி, கடம்பூர், ஆசனூர், தளமலை, மாக்கம் பாளையம், குன்றி போன்ற பகுதிகளில் பரவியுள்ள இந்த வனப்பகுதியில் பெரிதும் மூங்கில்கள், சந்தன மரங்கள் கிடைக்கின்றன. இங்குள்ள மூச்சிக்குழி என்ற பள்ளத்தாக்குப் பகுதி எப்போதும் பசுமையுடையதும் இயற்கைவளம் மிகுந்ததும் ஆகும்.

கடுக்காய், நெல்லி, புளி, சீயக்காய்ப் பட்டை, பூச்சிக் கொட்டை ஆகியவற்றுக்குஇந்த வனப்பகுதியில் எப்போதுமே பஞ்சமிருப்பதில்லை. ஆண்டுக்கு இரண்டு முறை-அதாவது ஜூலை டிசம்பரில் சந்தனக் கட்டைகள் ஏலம் விடப்படுகின்றன. பல் வேறு மாநிலங்களிலிருந்தும் இதற்காக வியாபாரிகள் இங்கு வருகிறார்கள்.

சுஜல்குட்டை, பன்னாரி, திம்பம், தாளவாடி, அருளவாடி, எத்துக்கட்டி, காமநாயக்கன் பாளையம் ஆகிய இடங்களில் தணிக்கைச் சாவடிகள் அமைத்திருக்கிறார்கள்.

தலைமை வன அலுவலர் தவிர, இப்பகுதியைக் காப்பதில் 4 வனச்சரக அலுவலர்கள், 15 வனப் பணியாளர்கள், 30 வனக் காப்பாளர்கள், 30 வனக்காவலர்கள் இச் சரகத்திலே பணியாற்றி வருகின்றனர்.

இந்த வனப்பகுதியிலே கிடைக்கும் பயன்மிகு பொருட்கள், சத்தியமங்கலம் சரகக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் குத்தகைக்குத் தரப்படுகின்றன.

அண்மையில் - சத்தியமங்கலம் வனச் சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் விற்பனை நிலையமும், சங்கக் கிடங்கு பணிமனை ஆகியவைகளும் மாண்புமிகு செய்தி மற்றும் வனத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தாளவாடி, தாளமலை பகுதிகளிலே செல்லும் நம்மால் யானை, மான், முயல், நரி, காட்டெருமை கரடி போன்ற வனவிலங்குகளைப் பலவாக எளிதில் காண முடிந்தது.

ஆசனூர் மாதிரிப் பட்டுப் பண்ணை எதிரே, அரசினர் உறைவிட நடுநிலைப் பள்ளி அருகே, வனவளம் கண்டுகளிக்க வரும் பயணிகள் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளும்பொருட்டு ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை மூலம் ஓய்வு விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

**— 'இந்திரன்'**



பெரியார் மாவட்டம்:

# வேலை வாய்ப்புகள்

"மற்ற மாவட்டங்களைப் போல அல்ல; பெரியார் மாவட்டத்தில் வேலைவாய்ப்புகள் அதிகம் உருவாகின்றன. ஆனால் அதற்கேற்ற நபர்கள் கிடைப்பது தான் சில நேரங்களில் கஷ்டமாக இருக்கிறது'' என்றார் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. எம். நாகேஸ்வரன்.

குறிப்பாகச் செவிலியர், மருத்துவப் பணிப்பெண்கள், மருத்துவ உதவியாளர், பிரசவம் பார்க்கும் பெண்கள், எக்ஸ்ரே பயிற்சி பெற்றோர், மருந்து கலப்போர் வேலைகளுக்கு நிறைய வாய்ப்பிருந்தும் அந்த வகையில் பயிற்சி பெற்றோர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் போதுமான அளவில் பதிவு செய்து கொள்ளாததை மிகவும் வருத்தத்தோடு குறிப்பிட்டார் அவர்.

1980-ல் 31,451 பேர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள்; அவர்களில் 5,998 பேர் பெண்கள். அந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் 1942. அதில் இந்த அலுவலகம் மூலம் நிரப்பப்பட்ட இடங்கள் 1685 ஆகும்.

1983ல் மார்ச் மாதம் 25ஆம் தேதி வரை 48,745 பேர் பெரியார் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பெண்கள் 11,148 பேர். இதுவரை இந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் 3084ல் 2385 இவர்கள் மூலம் நிரப்பப்பட்டுள்ளது.

தாளவாடி, சத்தியமங்கலம் பகுதிகளிலிருந்து, ஈரோடு வேலை வாய்ப்பு அலுவலகம் வரை வந்து செல்வது பலருக்குச் சிரமமாக இருப்பதால் இவர்கள் ஒன்று செய்கிறார்கள். அப் பகுதிக்குச் சென்று செயல்பட 'நடமாடும் வேலை வாய்ப்பு நிலையம்' ஒன்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.




''வேறெங்கும் இதுபோல் நீங்கள் பார்த்திருக்க முடியாது'' என்று கூறிய வேலைவாய்ப்பு அலுவலர் திரு எம். நாகேஸ்வரன் அதுபற்றி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''ஒவ்வொரு மாதமும் முதல்வாரம், கடைசி வாரம் திங்கட் கிழமைகளில் தாளவாடிக்கும், அந்த இரண்டு வார செவ்வாய்க் கிழமைகளில் சத்திய மங்கலத்திற்கும் இந்த நடமாடும் வேலைவாய்ப்பு நிலையம் செல்லும். அப்படிச் செல்லு முன்பாக எங்கள் வருகை தண்டோரா போட்டும், அந்தப் பக்கங்களில் உள்ள திரையரங்குகளில் சிலைடு போட்டும் அப் பகுதி மக்களுக்கு முன்கூட்டி அறிவிக்கப்பட்டு விடும்.''

தமிழக அரசின் ஆணைப்படி இம்மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகள் 958 பேர்களுக்கு மாதம் ரூ. 50 உதவித்தொகை, 1980 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

முன்னாள் இராணுவத்தினர் 98 பேர்களும், உடல் ஊனமுற்றோர் 458 பேர்களும், மலைவாழ் மக்கள் 79 பேர்களும், இலங்கை அகதிகள் 409 பேர்களும் பர்மா அகதிகள் நால்வரும் பதிவுசெய்து கொண்டுள்ள இந்த அலுவலகத்தில் சித்தவைத்தியத் துறைக்கென இருவரும், ஓமியோபதிக்கெனப் பதின்மூவரும், லேப் டெக்னீஷியன்களாகப் பன்னிருவரும் மட்டுமே பதிவு செய்துள்ளனர்.

''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விளையாட்டுத் துறை வளர்ச்சியில் பெரிதும் கவனம் கொண்டிருக்கிறார். பெரியார் மாவட்டத்தில் அத்துறைக்கு வேலை நிறைய இருக்கிறது. ஆனால் விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர் ஒருவர்கூட இங்கே பதிவு செய்து கொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்று'' என்ற வேலைவாய்ப்பு அலுவலர், இசைப்பயிற்சி ஆசிரியர் எவரும் பதிவு செய்து கொள்ளாததையும் நமக்கு வாடிய முகத்தோடு தெரிவித்தார்.

—ராஜா



...றநெல்லை மாவட்டங்களும் ஊர்ப் பெயரால் விளங்க - தன்னிகரற்று விளங்கிய தலைவர் ஒருவர் பெயரால், தமிழ்நாட்டில் உதித்த பெருமையுடையது எங்கள் பெரியார் மாவட்டம்.

காடுகளும், மலைகளும், ஆறுகளுமே ஒரு நாட்டின் இயற்கை அரண்களாகும் என வள்ளுவன் சொன்ன வகையில் உள்ளமாவட்டமாகும் இது. ஆம்; காவிரி ஆறும், நொய்யலாறும், திம்பம் மலைப் பகுதிகளும் பர்கூர் மலைக்காடுகளும் இம்மாவட்டத்தின் இயற்கை அரண்களாகும். விளங்கச்சொல்லுவதென்றால் காடுமலிந்த கர்நாடகம் இந்த

# பெருமை மிகு பெரியார் மாவட்டம்



மாவட்டத்தின் வட எல்லை; தமிழ் வளர்க்கச் சங்கம் கண்ட மதுரை தென் எல்லை; கனி வளம் மிகுந்த சேலம் மாவட்டமும், பயிர் வளம் மிகுந்த திருச்சி மாவட்டமும் கிழக் கெல்லை; தொழில் வளமுடைய கோவை மாவட்டமும், இயற்கைத் தாய் அரவணைப்பி லுள்ள நீலகிரி மாவட்டமும் மேற்கெல்லை!

8179 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக 17-9-1979-ல் தமிழ்நாட்டில் 16வது மாவட்டமாகத் துவங்கப்பட்ட பெரியார் மாவட்ட மக்கள் தொகை 20,68,462 ஆகும்.

நாடு நலம் பெறவும், நாட்டு மக்களுக்கு நன்மை விளைந்திடவும் நாள்தோறும் நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வரும் தமிழ்நாடு அரசுக்கு, இந்த மாவட்டம் தவமிருந்து பெற்ற செல்லப் பிள்ளை போல! மாவட்டம் பிரிக்கப்பட்ட இந்தக் குறுகிய காலத்திலேயே, மற்ற மாவட்டங்களுக்கு நிகராக எல்லா வகையிலும் உயர்வு பெற்று இனிது விளங்குவது பெரியார் மாவட்டம்.

**ஒரு சோறு பதம்**

விவசாயத் தொழிலும், நெசவுத் தொழிலும் இம்மாவட்டத்திலுள்ள பெரும்பான்மை மக்களின் இருவிழிகள். பழம்பெருமை உடைய ஊர்களை உடையதும், இலக்கணம் படைத்தவரும், இலக்கியம் படித்தவரும், பண்டை நாகரிக எடுத்துக் காட்டுகள் கிட்டக் கூடிய நொய்யல்வெளி நாகரிகச் சான்றுகள் கிட்டியதும் ஆன பல சிறப்புக்களைப்பெற்றுள்ளதும் இன்னும் பல சிறப்புகளைப் பெற்று வருவதுமான பெரியார் மாவட்டத்தின் தலைமையிடமான ஈரோடு வளர்ச்சியைச் சொன்னாலே போதும், மற்ற இடங்களின் வளர்ச்சி தன்னால் விளங்கும். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா?

வேறெங்கும் இல்லாதபடி ரூ. 2 கோடி செலவிலே உருவாக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், ரூ. 88 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம், ரூ. 22 இலட்சம் செலவில் கட்டப்பட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ரூ. 38 இலட்சம் செலவில் கட்டப்பட்ட மாவட்டக் கருவூலக் கட்டடம், ரூ. 80 இலட்



**திரு. பி.வி. ராஜாராமன், இ.ஆ.ப.,**
**பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர்**

சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மாவட்ட நீதி மன்றக் கட்டடம், ரூ. 68 இலட்சத்தில் கட்டப்பட்ட நகராட்சி நாள் அங்காடி, ரூ. 27 இலட்சம் செலவிலான வடிகால் திட்டம், ரூ. 14 இலட்சம் செலவில் சூப்பர் மார்க்கெட், கைத்தறித் துணிக்கிடங்கு, ரூ. 8.5 இலட்சம் செலவிலே விரிவாக்கப்பட்ட மாவட்டத் தலைமை மருத்துவமனை, ரூ. 20 இலட்சம் செலவில் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, ரூ. 11 இலட்சம் செலவில் சாலைகள் விரிவாக்கம், ரூ. 4 இலட்சம் செலவில் வ.உ.சி பூங்கா எழில் கூட்டல், மற்றும் புதிதாகத் துவக்கப்பட்ட ஜீவா போக்குவரத்துக் கழகம், பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு அச்சகம் என நகர வளர்ச்சித் திட்டங்கள் நாளொருமேனி பொழுதொரு வண்ணம் வளர்ந்து கொண்டே போகின்றன.

இதுவே திட்டங்களின் மொத்தப் பட்டியல் அல்ல!

**வளரும் பட்டியல்**

வீட்டு வசதி - குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம், பசுமைப் புரட்சி, வேளாண்மைக்குப் புத்துயிரூட்டும் பாசனத் திட்டங்கள், தனக்கு நேர் இல்லாத் தன்னிறைவுத் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், குழந்தைகளுக்குப் புத்துணர்வு ஊட்டும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், ஆதரவற்ற முதியோர்க்குச் சத்துணவு, வீட்டுமனைப் பட்டா - நிலப்பட்டா வழங்கிடல், சிறு-குறு



சித்தோடு பால்பண்ணை

விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், முதியோர் - விதவைகளுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம், வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கல், முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி - இலவச வேட்டி - சேலை வழங்கு திட்டம், மாணவ மாணவியருக்கு உபகாரச் சம்பளம் - தங்கும் விடுதிகள், நலிவடைந்தார்க்கு நல்ல வீட்டு வசதி, ஆதிதிராவிடர் குடியிருப்பு, குடிநீர் வசதி, கிராமக் கைத்தறித்தொழில் ஊக்குவிப்புத் திட்டம், கைத்தறித் தொழில் காக்கும் வளர்ச்சித் திட்டங்கள், பால்வளம் - எருமையின உறைவிந்து நிலையம், மலைவாழ் மக்கள் மருத்துவ வசதி, மின் உற்பத்தி, சிறுசேமிப்பு, வனவளம், பாலம் அமைத்தல்—சாலை அமைத்தல், பாசன வசதி, தோல் பதனிடும் தொழில் வளர்ச்சி, சுற்றுலா மையம் எனப் பெரியார் மாவட்டம் கண்டு வரும் அரிய திட்டங்களின் பட்டியல் பெரியதாகும்.

மக்கள் குறைகேட்கும் நாளில்...



**இணையிலா மாவட்டம்**

தீரன் சின்னமலை, கொடிகாத்த குமரன் போன்ற விடுதலைப் போர் வீரர்கள் பிறந்தது இந்த மாவட்டத்தில்தான்! உலகிலேயே மண்ணால் கட்டப்பட்ட பெருமை உடையதான பவானிசாகர் அணை இங்குதான் அமைந்திருக்கிறது!

நெல், கரும்பு, புகையிலை, மஞ்சள் என இயற்கை வளம் கொஞ்சும் மாவட்டம் இது. எங்கும் காண இயலாது என்ற அளவில் கைத்தறித் துணி வகைகள் இங்கேதான் உருவாகின்றன.

'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே, ஊரெனப் படுவது உறையூர் ஒன்றே' என்ற வகையில் - மாவட்டம் என்றாலே நினைவு வரக் கூடியது பெரியார் மாவட்டமே என்ற அளவில் திகழும் எங்கள் மாவட்டத்திற்கு வாரீர், வரலாற்றுச் சிறப்புகளைப் பாரீர்- என அன்போடழைக்கின்றேன் உங்களை!

## ஈரோடே முடிவெடுக்க வேண்டும்!

கள்ளுக்கடை மறியல் 1921-22-ல் நடந்த போது, அதில் தன் மனைவியார் நாகம்மையோடும், சகோதரி கண்ணம்மாவோடும் ஈடுபட்டமைக்காகத் தந்தை பெரியாரைக் காந்தியடிகள் பெரிதும் பாராட்டினார். இப்போராட்டம் காரணமாக அவர்கள் மூவரும் பிரிட்டிஷாரால் இரண்டுமுறை கைது செய்யப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டதுண்டு.

அப்போது, காந்தியாரால் அகில இந்திய ரீதியில் கள்ளுக்கடை ஒழிப்புக் கமிட்டி அமைக்கப்பட்டபோது, நாகம்மையாரும், கண்ணம்மாளும் அதில் தமிழகப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டார்கள்.

அந்நாளில்-காந்தியாரிடம் ''கள்ளுக்கடை போராட்டத்திற்கு என்னதான் முடிவு எடுத்திருக்கிறீர்கள்?'' என்று சிலர் கேட்டனர். அதற்கு அவர்— ''அது என் கையில் இல்லை ஈரோட்டிலுள்ள - நாகம்மையார், கண்ணம்மாள் ஆகிய இரண்டு பெண்மணிகளின் கையில்தான் அது இருக்கிறது'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

பெரியார் மாவட்டம் :

# மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்



ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்னாலே கட்டடக் கலையில் தமிழர்கள் பின் தங்கி விட்டதாகப் பேசப்படுவது முற்றிலும் தவறானது என விளக்குவதாக அமைந்துள்ளது பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஈரோட்டைத் தலைமையாகக் கொண்ட பெரியார் மாவட்டத்தைத் தோற்றுவித்ததோடு-இப்புதிய மாவட்டத்திற்கான அலுவலகங்கள் கட்ட 327 இலட்சம் ரூபாய் அளவிற்கு அனுமதி அளித்தார். இம் மாபெரும் திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தில் ஒரு கட்டடச் சிறப்பு வட்டம் ஏற்படுத்தப் பெரும்பான்மையான வேலைகள் முடிக்கப்பட்டும், பல வேலைகள் பல்வேறு நிலையில் விரைவாக நடைபெற்றும் வருகின்றன. அவ்வகைக் கட்டடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டமும், கருவூலம் முதலிய இதர அலுவலகக் கட்டடங்களும் அடங்கும்.

*10-11-81*-ல் அடிக்கல் நாட்டப்பட்டு, *12-12-83*-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், ஓர் எட்டுமாடிக் கட்டடம் ஆகும்.

## தலைக்கு வேறு, தாடிக்கு வேறா ?

காங்கிரஸ் கட்சி சார்பில், 1957ல் போட்டியிட்ட திரு பி. சுப்பராயனை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்து வந்தார் தந்தை பெரியார். அதற்காக நடந்த ஒரு கூட்டத்தில் அவரிடம் இப்படியொரு கேள்வி கேட்கப்பட்டது - 'இங்கே காங்கிரசுக்கு ஆதரவாக ஓட்டுக் கேட்கிற நீங்கள், ஈரோடு சென்றால், உங்கள அண்ணன் மகன் சம்பத்துக்கு ஆதரவாக ஓட்டுக் கேட்பீர்களா?'

அதற்கு, தந்தை பெரியார் உடனே இப்படிப் பதில் சொன்னார் - ''தலைக்கு ஒரு சீயக்காய், தாடிக்கு ஒரு சீயக்காயா? எல்லாவற்றிற்கும் ஒரே சீயக்காய் தான்!''

தமிழ்நாட்டிலேயே பெரியார் மாவட்டத்தில் தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய எட்டு மாடிக் கட்டடம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அக்கட்டடத்தோடு முன்புறம் இணைப்பு பிரகாரத்துடன் கூடிய எண்கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ள கூட்ட மன்றக் கட்டடம் மூன்றடுக்குக் கொண்டது. இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் ஈரோடு மாநகரிலேயே மிக உயர்ந்த கட்டடமாக அமைந்துள்ளது. அக்கட்டடம் **215** அடி நீளமும் **105** அடி உயரமும் கொண்டது. கட்டடத்தின் தளப்பரப்பு ஒவ்வொரு தளத்திற்கும் **12900** சதுர அடி. இது தவிர கட்டடத்தின் பின் பக்கத்தில் இணைப்புப் பிரகாரத்துடன் இணைக்கப்பட்டுள்ள, ஒவ்வொரு தளத்திற்கும் **365** சதுர அடி பரப்புகொண்ட ஆண் பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட தனிக் கழிப்பறைக்கட்டடமும்கூட ஒரு எட்டு மாடிக்கட்டடமாக அமைந்துள்ளது.

இக்கட்டடங்களுக்கு நவீன முறையில் கண்ணாடி தள்ளு கதவுகளுடன் கூடிய அலுமினியம் சன்னல்கள் பொருத்தப்பட்டுள்ளன. கட்டடத்தின் வெவ்வேறு மாடிகளுக்கு விரைவில் சென்றடைய நான்கு லிஃப்ட்கள் அமைக்கப்பட்டுள்ளன. எட்டுமாடிக் கட்டடத்தில் தரை மட்டத்திலான தளத்தில் வரவேற்பு, விசாரணை அறைகளும் மற்றும் இருபுறங்களிலும் பதிவு வைப்பு அறைகளும் அமைந்துள்ளன.

மற்ற ஏழு தளங்களிலும் ஒவ்வொரு தளத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு ஏற்றவாறு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் பார்வையாளருக்கென, கழிப்பிட வசதிகளுடன் கூடிய தனி அறை ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுக் கழிப்பிடம் தவிர ஒவ்வொரு தளத்திலும் உயர்மட்ட அலுவலர்களுக்கு அறையுடன் இணைந்த கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் உணவு அறை தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

எண்கோண வடிவத்தில் உள்ள கூடங்களும் எட்டுப்பக்கக் கூம்புவடிவத்தில் அமைந்த

கூரையுடனும் உருவாக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கூட்டமன்றக் கட்டடத்தின் 5540 சதுர அடி பரப்பளவு கொண்ட கீழ்த்தளம் வங்கியாகச் செயல்பட இருக்கிறது. ஒவ்வொன்றும் 1076 சதுர அடி பரப்பளவில் முறையே 12 உறுப்பினர் மற்றும், 29 உறுப்பினர்கள் கலந்து கொள்ளத்தக்கதாக அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது தளத்தில் முக்கியமான பெருங்கூட்ட மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. கூட்ட மன்றத்தின் தளப் பரப்பு 3240 சதுர அடி பரப்புள்ளது. இக்கூட்ட மன்றத்தில் 122 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மன்றத்தில் நவீன முறையில் அமைக்கப்பட்ட இருக்கை மற்றும் மேஜைகள், ஒலி பரப்பு அமைப்பு வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளன. முதல் மற்றும் இரண்டாவது தளங்களில் உள்ள கூட்ட மன்றங்கள், இரண்டாவது தளத்தின் வெளிக்கூடம் முதலியவை நவீன முறையில் சுவர்கள் மற்றும் கூரை அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தின் கீழ் கட்டடத்திற்குப் பின்புறம் கிடைக்கவிருக்கும் நிலத்தில் ஊர்திகள் நிறுத்தும் இடம், சைக்கிள்கள் நிறுத்துமிடம், உணவகம், குழந்தைகள் காப்பகம், கூட்டுறவுப் பண்டகசாலை மற்றும் பால் நிலையம் முதலியன கட்டப்படவிருக்கின்றன.

இக்கட்டடங்கள் மிகக் குறுகிய காலமான ஏறத்தாழ இரண்டாண்டுகாலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்கட்டடங்களுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 190.92 இலட்சமாகும். இந்த மாபெரும் எட்டு மாடிக் கட்டடம், கூட்ட மன்றம் அதைச் சார்ந்த சாலை அமைப்பு, சுற்றுச் சுவர், சுகாதார மற்றும் தண்ணீர் விநியோக வேலைகள், மின் வேலைகள், முதலிய முடிவு பெற்ற பணிகளோடு இனி கட்டப்படவிருக்கும் மேற் சொன்ன உணவகம் முதலிய கட்டடங்களுக்கான பணிகளுக்கும் சேர்ந்து இந்த மொத்த மதிப்பீட்டுத் தொகைக்குள்ளாகவே முடிக்கப்பட்டு விடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டடத்தின் நேர் எதிரே, ரூ. 80 இலட்சம் மதிப்பீட்டில் நீதி மன்றக் கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது.

—ராஜா

# ஈரோட்டில் இலவசப் பல்பொடி !

ஈரோடு தொழிற்பேட்டையில் பலவகை பெரிய - சிறிய தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றன. ஏதேனும் ஒரு தொழிற்சாலை பற்றி நேரில் கண்டெழுதக் கருதிச் சென்ற நமக்கு, வளர்ந்தவைகளை விட வளர்ந்து வருபவைகள் பற்றிக் கவனம் திரும்பியது. எதிரே தெரிந்தது 'இலவசப் பல்பொடி' தயாரிக்கும் ஒரு சிறு தொழிற்சாலை.

'சிட்கோ' உதவியோடு அதை நிறுவியிருக்கும் திரு டி. தரணிபதி பி.ஈ., நிர்வாகத்தின் கீழ் உள்ள அதில், பெண்கள் 12 பேர்களும் இரண்டு ஆடவர்களும் பணியாற்றி வருகிறார்கள். கையில் உறை, தலையில் துணிக் குல்லாய், முகத்தில் சுவாசத் தடுப்பு ஆகியவைகளோடு அவர்கள் பணியாற்றுவதை நாம் பார்க்கிறோம்.

திரு டி. தரணிபதி. ''முதலமைச்சரின் இந்த அரிய திட்டம் ஏழை எளிய மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது'' என்றும் கூறினார்.

அவற்றைப் பக்குவமாகக் கலந்திடப் பயன்படுத்தப்படும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் இயந்திரங்களையும் நம்மோடு வந்து காட்டி, அவைஇயக்கப்படும் விதம் பற்றியும் விவரித்தார் அவர்.

''தொடர்ந்தாற்போல் எங்களுக்கு வேலை தரப்படாததால் மாதத்தில் சில நாட்கள் வேலையற்றிருக்கிற நிலைமையும் ஏற்பட்டு விடும். தொடர்ந்து தரப்பட்டால் இன்னும் அதிகம் எங்களால் பல்பொடி தயாரிக்க முடியும்; அதனால் இன்னும் பல பேருக்கு வேலை வாய்ப்பளிக்கவும் வாய்ப்பிருக்கும்'' என்றும் அவர் கூறினார்.

ஒரு நாளைக்கு இந்தச் சிறிய தொழிற்சாலையில் தயாராகும் 400கிலோ பல்பொடி, 30 கிராம் தனிப் பாக்கெட்டுகளில் கை படாமல் அடைக்கப்பட்டு, அவற்றை இருபத்தைந்து இருபத்தைந்தாகத் தனிக் கட்டாக்குகிறார்கள் பிளாஸ்டிக் பேப்பர் உறைகளில்!

பெரியார் மாவட்டத்தில் இவர்கள் தவிர காவேரி கெமிக்கல்ஸ், ஸ்டாண்டர்டு கெமிக்கல்ஸ் என்ற வேறு இரு நிறுவனங்களும் கூட இலவசப் பல்பொடி தயாரிக்கின்றன.

பெரியார் மாவட்டத்திலே மட்டும் ஒவ்வொரு மாதமும், ஏறத்தாழ ஒரு இலட்சத்து 60 ஆயிரம் குழந்தைகளுக்கு இலவசப் பல்பொடிப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன.





# முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவில் பாலம் அமைப்போம்!

# பொதுமக்கள் நலன்காக்கும் பெரும் பணிகள் செய்து முடிப்போம்!

மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மன் கோயில் தெருவில் உள்ள பாலம் மிகவும் சிதலமாகியுள்ளதால்-அங்கே புதிய பாலம் ஒன்றை உருவாக்க வேண்டியது மிகமிக அவசியமாகி விட்டது. இதனை உணர்ந்த தமிழக அரசு பாலம் உருவாக்கும் பணியை நிறைவேற்ற முன்வந்திருக்கிறது. புதிய பாலத்துக்குரிய அடிக்கல் நாட்டு விழா 21.3.'84 அன்று மாலை நடைபெற்றது.

விழாவுக்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றுப் பேசிய சென்னை மாநகராட்சிச் சிறப்பு அதிகாரி திரு.கி.சந்திரசூடன் இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''இந்தப் பாலத்தை அமைப்பதற்கு 35 லட்ச ரூபாயை அரசு ஒதுக்கியுள்ளது. இதில் பாதித் தொகையை மானியமாகவும் பாதித்தொகையை மாநகராட்சிக்குக் கடனாகவும் வழங்கியுள்ளது அரசு. இந்தப் பாலம் 15 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும். இந்தப் பகுதி மக்களுக்கு இது வரப்பிரசாதமாக அமையும்!''

அடுத்து உரையாற்றிய மயிலைப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு டி.கே.கபாலி தெரிவித்தார்:

''இந்தப் பாலத்தின் அவசியத்தை உணர்ந்து இதனை உருவாக்குவதற்காகத் துரித நடவடிக்கையை எடுத்திருக்கும் அரசுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வருடத்திற்குள் பாலம் கட்டி முடிக்கப்பட்டால், இந்தப் பகுதி மக்கள் பெரிதும் நலம் பெறுவர்''.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப.குழந்தைவேலு அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''சென்னை மாநகராட்சியினர் பல்வேறு பணிகளைச் சீராகவும் சிறப்பாகவும் வேகமாகவும் விருப்பாகவும் ஏற்பாடு செய்து வருகின்றனர். இந்தப் பகுதியில் வாழும் மக்களின் நீண்ட நெடிய நாள் கோரிக்கை வெற்றி பெற்றிருக்கிறது என்பதை இந்த விழா எடுத்துச் சொல்கிறது.

''முன்பெல்லாம் எதுவும் குறித்த காலத்தில் நடைபெற்றது கிடையாது. இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு காலவரையீடு செய்து,திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

''3 கோடி ரூபாய் செலவில், சென்னையில் பல்வேறு பாலங்களைப் புதுப்பித்தும்- புதிதாக அமைத்தும் வருகிறோம்.

''சென்னை மாநகராட்சி ஏழை மாநகராட்சி. 10 ஆண்டுகளுக்கு முன்பு என்ன வரி இருந்ததோ அதேதான் இன்றும் உள்ளது. வரியை ஏற்ற வேண்டாம் என்று புரட்சித் தலைவர் கட்டளையிட்டார்.



''சென்னை, தமிழகத்தில் மிகப் பெரிய மாவட்டம் ஆகும். கல்கத்தாவில் 1 கோடிப் பேர் வாழ்கின்றனர். பம்பாயில் 80 லட்சம் பேர் வாழ்கின்றனர். சென்னையில் 40 இலட்சம் பேர் வாழ்கின்றனர். உலகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க மாநகராட்சிகள் 52. அவற்றில் சென்னை மாநகராட்சியும் ஒன்று.

''இந்தப் பாலத்தை ஓராண்டுக்குள் கட்டி முடித்துவிட வேண்டும் என்று மாநகராட்சிச் சிறப்பு அதிகாரியையும் பொறியாளர்களையும் கேட்டுக்கொள்கிறேன்''

பாலத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''திருமயிலை,சென்னை மாநகரின் முக்கியப் பகுதிகளில் ஒன்றாகும். 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகமான ஊர் மயிலை. இடநெருக்கடியை அதிகமாக்கிக் கொண்ட பகுதியும் இதுதான்.

''வள்ளுவர் தோன்றித் தமிழகத்திற்குச் சிறப்பைத் தேடித் தந்துள்ள பகுதி மயிலைதான். ஏசுநாதரின் 12 சீடர்களில் ஒருவரான செயிண்ட் தாமஸ் என்பவர் கி.பி.52ல் இந்தியாவுக்கு வந்து, அதிலும் தென்பகுதிக்கு வந்து, அதிலும் மயிலைப் பகுதிக்கு வந்து, இங்கேதான் குடியேறினார். அவர் பெயரால் தான் சாந்தோம் என்ற பகுதி வழங்கப்படுகிறது.

''பழம் புகழ் கொண்ட பகுதி, இது. புகழ் பெற்ற வழக்கறிஞர்கள், அதிகாரிகள், நீதிபதிகள் வாழ்ந்த பகுதி இது.ராவ்பகதூர், ராவ் சாகிப் போன்ற பலர் இங்கு வாழ்ந்திருக்கின்றனர்.

''எந்தப் பணியை ஆற்றினாலும் அதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.இது போன்ற விழாக்களில் பொது மக்கள் தரவேண்டிய ஒத்துழைப்பைக் குறித்து விளக்கம் தர முயற்சிசெய்கிறோம்.அதற்காகத்தான் இதுபோன்ற விழாக்களில் நாங்கள் பங்கு கொள்கிறோம்; நாங்கள் வந்து அடிக்கல் நாட்டினால்தான் அடிக்கல் சரியாக அமையும் என்பதற்காக அல்ல! பழுதுபட்ட பாலத்தைப் புதுப்பித்து,புதுப் பொலிவு பெற்ற பாலமாக-வலிவு பெற்ற பாலமாக விளங்க வேண்டும் என்ற முறையில் திட்டம் தீட்டிச் செயலாற்ற முற்பட்டிருக்கிறோம். இதனைச் செம்மைப் படுத்த வேண்டும் என்று புலர் விடுத்த வேண்டுகோள் - செயல்வடிவம் பெறுகிறது''

சென்னை மாநகராட்சி உதவி ஆணையர் (தெற்கு) திரு எஸ். ரகுபதி நன்றி கூற விழா இனிது நிறைவுற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு :
தமிழ்ப்பித்தன்

# அரசுத் தேர்வுத் துறையின் அரிய சாதனைகள்

அரசுத் தேர்வுத்துறை மொத்தத்தில் 41 அரசுத்தேர்வுகளை நடத்தி வருகிறது. இவைகளில், மேல்நிலைத் தேர்வு, இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ் பொதுத் தேர்வு, ஆங்கிலோ இந்தியன் பள்ளியிறுதித் தேர்வு, மெட்ரிகுலேஷன் தேர்வு மற்றும் இடைநிலைப் பள்ளியாசிரியர்களுக்கான டிப்ளோமா தேர்வு ஆகியவை மாநில அளவில் நடத்தப்படும் பெரிய தேர்வுகளாகும்.

மாநிலத்தின் கல்வி வளர்ச்சி காரணமாக, ஆண்டுதோறும் புதிதாகப் பல பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. இதன் விளைவாக, இத்துறையினால் நடத்தப்படும் தேர்வுகளுக்குக் குறிப்பாக, மேல்நிலைத் தேர்வு மற்றும் இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ் பொதுத்தேர்வு ஆகியவைகளுக்கு வரும் மாணவ மாணவிகளின் மற்றும் தனித் தேர்வர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. உதாரணமாக, கடந்த மூன்றாண்டுக் காலத்தில் இத்தேர்வுகள் எழுதியவர்களின் புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| காலம் | | இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ் பொதுத் தேர்வு | மேல் நிலைத் தேர்வு |
|---|---|---|---|
| 1981 | மார்ச் / ஏப்ரல் | 3,06,821 | 1,45,974 |
| | செப்டம்பர் / அக்டோபர் | 91,664 | 44,125 |
| 1982 | மார்ச் / ஏப்ரல் | 3,36,891 | 1,57,599 |
| | செப்டம்பர் / அக்டோபர் | 1,06,644 | 48,550 |
| 1983 | மார்ச் / ஏப்ரல் | 3,52,100 | 1,75,092 |
| | செப்டம்பர் / அக்டோபர் | 1,28,000 | 51,500 |

முன்னர், நீண்டகாலமாக, இத்துறை சார்நிலை அலுவலகங்கள் இல்லாத, மாநில அளவிலான ஒரு தலைமைத் துறையாக இயங்கி வந்தது. இந்நிலையில், இத்துறையினால் நடத்தப்படும் அரசுத் தேர்வுகள் சம்பந்தப்பட்ட விவரங்கள் வேண்டல், மற்றும் சந்தேகங்களை நிவர்த்தி செய்தல் போன்ற அனைத்துக் காரியங்களுக்கும், சென்னையிலுள்ள இத்தலைமையலுவலகத்துடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள வேண்டும் அல்லது நேரில் வரவேண்டும் எனும் நிலை இருந்தது.

ஆனால், சமீப காலத்தில் இந்நிலை மாற்றப்பட்டு, வளர்ந்துகொண்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட காலகட்டத்தில் செய்து முடிக்கப்பட வேண்டிய அவசரத்தன்மை வாய்ந்த தேர்வுப் பணிகளைச் செம்மையாக நடத்த உதவும் பொருட்டும், மாநிலத்தில் கிராம மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் சிரமமின்றி அரசுத் தேர்வுகள் சம்பந்தமாகத் தேவைப்படும் விவரங்கள் அறிய வழிவகை செய்யும் பொருட்டும், வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இத்துறையின்கீழ் மதுரை, கோவை மற்றும் திருச்சி மாவட்டங்களில் மண்டல அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, சீரான முறையில் இயங்கி வருகின்றன.

இம்மண்டல அலுவலகங்கள் இத்துறையின் பணிகளைச் செம்மையாகச் செய்வதற்கு உதவுவதோடு, ஊரகப் பகுதியில் வாழும் மக்களுக்குப் பெருமளவில் உதவியாக அமைந்துள்ளன.

தவிர, மிகப் பெரிய தேர்வுகளான இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ்ப் பொதுத் தேர்வு, மற்றும் மேல்நிலைத்தேர்வு எழுத வரும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துக் கொண்டு வருவதால், அவர்களுக்குத் தேர்வு எழுத வசதி ஏற்படுத்தும் பொருட்டு, வளர்ச்சித் திட்ட அடிப்படையில், 1983 மார்ச் முதல் ஆண்டுதோறும் கூடுதலான புதிய தேர்வு மையங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம் சிறப்பாக ஊரகப் பகுதிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் பெருமளவில் உதவுவதற்காக வகுக்கப்பட்ட திட்டமாகும்.

இதுதவிர, கடந்த ஆண்டுவரை இடைநிலைக்கல்வி இறுதிச் சான்றிதழ்ப் பொதுத் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வு எழுத வரும் தனித்தேர்வர்களுக்குத் தேர்வு மைய நுழைவுச் சீட்டு, தபால் மூலமாக அனுப்பப்படும் முறை பின்பற்றப்பட்டு வந்தது.

சமீப காலத்தில் இக்குறிப்பிட்ட தேர்வுகள் எழுதவரும், தனித்தேர்வர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே வருவதால், பல ஆயிரக்கணக்கான தனித்தேர்வர்களுக்கு அவர்களது தேர்வு மைய நுழைவுச் சீட்டுகள் தபால் மூலம் குறுகிய காலத்தில் அனுப்புவதில் சிரமங்கள் ஏற்பட்டன. மற்றபடி, கடைசி நேரத்தில் சிலரிடமிருந்து அவர்களது தேர்வு மைய நுழைவுச் சீட்டுகள், காலத்தில் கிடைக்கப் பெறவில்லையெனப் புகார்கள் கிடைக்கப் பெற்று வந்தன.

பல ஆயிரக்கணக்கான தனித்தேர்வர்களுக்கு நுழைவுச் சீட்டு அனுப்பும் சம்பந்தப்பட்ட பெரும் அளவிலான பணியினைச் சீர்படுத்தும் பொருட்டும், தேர்வு எழுத வருபவர்களுக்கு அவர்களது நுழைவுச் சீட்டுகளைச் சிரமமின்றிக் காலத்தில் பெற வழி செய்யும் பொருட்டும், இவ்வினத்தின் கீழ்த் தேர்வு எழுதவருபவர்களுக்கு, ஆங்காங்கே, தேர்வு மைய நுழைவுச் சீட்டு வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டு, அம்மையங்களின் மூலம் நுழைவுச் சீட்டுகள் நேர்முகமாக வழங்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.



# பச்சையப்பர் நினைவு விழா

பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனரின் நினைவு விழா 22.3.84 அன்று பச்சையப்பன் கல்லூரிஅரங்கில் நடைபெற்றது.

பச்சையப்பன் அறக்கட்டளை குழு உறுப்பினர் திரு பி.முருகன் வரவேற்புரை ஆற்றினார்.

பச்சையப்பன் அறக்கட்டளை குழுவின் தலைவர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப., நிர்வாக ஆண்டு அறிக்கையைப் படித்து தொடக்க உரை ஆற்றினார்.

விழாவில் அவர் பேசுகையில், இப்பரந்த ஞாலம் அழிந்து படாது நிலைபெற்றிருக்கக் காரணம், தன்னலம் கருதாத மேன்மக்கள் சிலர் வாழ்வதனால் என்றும், கொள்கைச் சான்றோர்களின் நினைவைப் போற்றுவதிலும் அவர்தம் தொண்டின் சீர்மையை எண்ணி வியப்பதிலும் சமுதாயம் பின்னடைவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் காஞ்சிக்கு அருகிலுள்ள பெரியபாளையம் ஊரில் பிறந்து அயராத உழைப்பால் அரும்பொருள் சேர்த்து இச்சமுதாயம் அறிவு ஒளி பெற்றுயர வழி வகுத்துச் சென்றவர் பச்சையப்பன் என்றும் அவர் நினைவுகூர்ந்தார்.

வள்ளுவர் கண்ட ஈகைப் பண்பும், மகாகவி பாரதியார் வலியுறுத்திய அறச் சிந்தையும், வடலூர் வள்ளலாருக்கு இருந்த அருள் உள்ளமும் கொண்ட **பெருந்தகை வள்ளல் பச்சையப்பன்** அவர்கள்.

பச்சையப்ப வள்ளலின் அறிவாலயத்தில் கல்வி பயின்று நாட்டின் பெருமைமிக்க பதவிகள் பலவற்றில் பணியாற்றிய சிறப்புமிக்கவர்களைப் போன்றே, வெற்றி பெற்ற மாணவமணிகள் பெருகி பச்சையப்பல் புகழைப் பரப்பிட வேண்டும் என்ற தம் அவாவைத் தெரிவித்தார்.

விழாவிற்குத் தலைமைவகித்து பல்வேறு அறநிறுவனங்களின் சார்பில் வழங்கப்பட்ட பதக்கங்களையும், புத்தகங்களையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் மாணவர்களுக்கு வழங்கிப் பேசுகையில், ''ஆண்டுதோறும் இனி பச்சையப்பன் நினைவுவிழா நடைபெறும் என்று நம்புகிறேன். ஓர் ஆண்டுக் காலத்தில் பொறுப்புக் கழகம் தேர்தல் ஏற்படுத்தி பொறுப்புக் கழகத்தின் சார்பில் விழா நடத்த உள்ளோம். அரசே இதை ஏற்று நடத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அடுத்த ஆண்டு இதே நேரத்தில் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மூலம் நடைபெறும் என்று நம்புகிறேன்.

''கடந்த இரண்டு ஆண்டுகளாக கட்டுப்பாட்டுடன் மற்றவர்கள் வியக்கும் வண்ணம் உள்ளது பாராட்டத்தக்கது. என்னுடைய ஆசையெல்லாம் இன்றைக்கு உள்ள பெருமையைவிட மேலும் பெருமையடைய வேண்டும் என்பதுதான். இங்கு உள்ள மாணவர்கள் பட்டப் படிப்புப் படிக்கிறார்கள் என்று இல்லாமல், ஆராய்ச்சிக்குரிய படிப்பையும் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். பச்சையப்பன் அவர்கள் 40 ஆண்டுகள் வாழ்ந்து இருந்தாலும் தொழில் செய்து சம்பாதித்த பணத்தைக் கல்விக்கு செலவிட்டதைப்பாராட்டுகிறேன்.

''இன்று தான் அவர் உயில் எழுதிய நாள். ஆனால் மற்றவர்களோ 90 வயதானாலும் முற்படுவதில்லை. பச்சையப்பன் செய்த சேவையை எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவரது பணி ஏழை, எளிய பிற்பட்ட மக்களுக்குப்பயன்படுகிறது. தொழில்கல்வி முக்கியத்துவம் என்று கருதி அரசு செயல்படுத்தி வருகிறது. 1984ல் தான் அமல் படுத்த முடியும் என்றாலும் அடுத்த கல்வி ஆண்டிலேயே ஒரு சில இடங்களில் ஏற்படுத்த உள்ளோம்.

''படித்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது. கால் பாகம் அரசு மானியம் அளிக்கிறது. அதைக்கூடப் பெற படித்த இளைஞர்கள் முன் வருவதில்லை. எனக்கு வேலை தான் வேண்டும் என்று கூறுகிறார்கள். நம் சமுதாயத்தில் மாணவர்கள் உணர்வோடும், பொறுப்போடும், தியாக மனப்பான்மையோடும் சமுதாய வளர்ச்சி நோக்கத்தோடும் வாழவேண்டும் என்று விரும்புகிறேன்''

பச்சையப்பன் அறக்கட்டளையின் உறுப்பினர் திரு என். அருணாசலம் நன்றி கூறினார்.



—அ. ம. விநாயகம்



# பெரியாரும் ஈரோடும்

பெரியார் மாவட்டத்தின் தலைமையிட மான ஈரோட்டுக்குப் பெருமை கிடைத்தது தந்தை பெரியாரால் என்றால் மிகையல்ல. ஈரோடு தொடர்புடைய அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் சில இங்கே தொகுத்தளிக்கப்படு கின்றன.

17—9—1879-ல், தந்தை பெரியார் ஈரோட்டில் பிறந்தார். 10 வயதில் பள்ளியை விட்டு நிறுத்தப்பட்டார். 12-வது வயதிலேயே தந்தையாரின் வியாபாரத்தில் பங்கேற்றார். 19-வது வயதில் நாகம்மையாரை மணந்து கொண்டார். 25-வது வயதில் துறவு பூண்டு கல்கத்தா, காசி முதலான இடங்களுக்குச் சென்று வந்தார். ஈரோடு வட்டம் தேவஸ்தான கமிட்டித் தலைவராகப் பல ஆண்டுக் காலம் இருந்தார். 1918ல், ஈரோடு நகரசபைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

ஈரோடு நகராட்சி பின்னர், தனது நூற்றாண்டு விழாவை நடத்தியபோது அதன் முதல் நகராட்சித் தந்தை என்பதற்காகத் தந்தை பெரியார் அவர்களுக்குக் கேடயம் அளித்துச் சிறப்பித்தது.

26—5—1919-ல், ஈரோடு சிதம்பரனார் பூங்காவில், தந்தை பெரியாரால் அமைக்கப்பட்ட மிகப் பெரிய குடிநீர்த் திட்டம் மூதறிஞர் ராஜாஜியால் துவக்கி வைக்கப்பட்டது. சில காலத்தின் பின், நகரசபைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்டுப் பெரியார்



காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். பல்வேறு பொது நிறுவனங்களிலே தாம் வகித்து வந்த 29 பதவிகளையும் ராஜினாமா செய்தார்.

*1921*—ல் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலைத் தாமே தலைமை தாங்கி நடத்தினார். 1922-ல் தன் மனைவி நாகம்மையாரோடும் சகோதரி கண்ணாம்மாளோடும் காந்தியாரே வியந்து போற்றிடும் அளவுக்குக் கள்ளுக் கடை மறியலை நடத்தினார்.

*2—5—1924*-ல் குடியரசு பத்திரிகையைத் தொடங்கி, அதன் மூலம் சுயமரியாதைக் கொள்கைகளை வலியுறுத்தி வந்தார். பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்த ஏட்டில் பொறுப்பேற்றுச் சிறப்புறப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. இராமாயண ஆராய்ச்சி, பெரியபுராண ஆராய்ச்சிகளில் முனைந்து நின்ற தந்தை பெரியார் அவற்றை வெளியிடலானார்.

*1930*—ல் ஈரோட்டில் சுயமரியாதை மாநாடு, பெண்கள் மாநாடு ஆகியவற்றைக்கூட்டினார். 1933-ல், ஈரோட்டில் தாம் கூட்டிய சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாட்டில் சமதர்மத் திட்டங்களைத் தீட்டினார்.

*11—5—1933*-ல் தந்தை பெரியாரின் துணைவியார் நாகம்மையார் மறைந்தார். 9—7—49-ல் மணியம்மையாரை மணந்தார்.






## நூலகப் பணி !.

பெரியார் மாவட்ட நூலக ஆணைக் குழுவில் மாவட்ட நூலக அலுவலகமும், மாவட்ட மைய நூலகமும் பொறுப்பிலிருந்து திருப்திகரமாகச் செயல்படுகிறார்கள்.

மைய நூலகத்தின் கவனிப்பில் இம்மாவட்டத்திலே 99 கிளை நூலகங்கள் இருக்கின்றன. இயங்கு நூலகம் ஒன்று ஜீவா போக்குவரத்துக் கழகம் அளித்த பேருந்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டம் முழுதுமுள்ள நூலகங்கள் அனைத்திலுமாக 667662 நூலகள் உள்ளன.

மாவட்ட மைய நூலகத்திற்கென ரூபாய் 16 இலட்சம் செலவில் தனிக் கட்டடம் அமைக்கும் பணி விரைவில் துவக்கப்படவிருக்கிறது. தாராபுரம் கிளை நூலகத்திற்கு 3.7 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்பட்ட புதுக்கட்டடப் பணி விரைவிலே முடிவுறும் நிலையில் உள்ளது.

நூலக வரியாக இந்த மாவட்டத்தில் சுமார் 6 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு வருகிறது. மகளிர் நூலகத்திற்கான அங்கிகாரம் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

1982-83ஆம் ஆண்டில் 6 கிளை நூலகங்கள் 'அ' தரத்திற்கும், 29 நூலகங்கள் 'ஆ' தரத்திற்கும், 3 கிளை நூலகங்கள் 'இ' தரத்திற்கும் உயர்வடைந்துள்ளன. பெரியார் மாவட்ட நூலகத்தின்மொத்த உறுப்பினர்கள் 60653 ஆவர். ஆண்டொன்றுக்கு நூலகத்திற்கு வருகை தந்திடும் வாசகர்களோ ஏறத்தாழ 15,21,672 பேர்!

*1954*—ல் ஈரோட்டில் புத்தர் மாநாடுகூட்டிய தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜியின் வர்ணாசிரம குலக்கல்வித் திட்ட ஒழிப்பு மாநாடும் நடத்தினார்.

*24—12—73*-ல் வேலூரில் உள்ள சி.எம்.சி. மருத்துவ மனையில் உயிர் நீத்தார்.

*17—9—1978*-ல், அந்தப்பகுத்தறிவுப் பகலவனுக்கு உரிய மரியாதை செலுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு 'பெரியார் நூற்றாண்டு விழா' வைத் தமிழ்நாடெங்கும் நடத்திடத் தொடங்கிற்று. அவரது நினைவாகப் பல மாவட்டங்களில் பெரியார் நினைவுத் தூண்கள் அரசால் எழுப்பப்பட்டன.



# நீண்டநாள் கனவு நனவாகிறது

கந்தசாமி நாயுடு கல்லூரியின் புதிய நிரந்தரக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா 23.3.84 அன்று அறிஞர் அண்ணா நகரில் நடைபெற்றது. திரு எஸ். ஆர். கருப்பண்ணன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றுகையில், "இவ்வளவு நாளாக கூரைக் கட்டடத்தில் நடத்தப்பட்ட இந்தக் கல்லூரி வகுப்புகள் இனிமேல் நல்ல கட்டடத்தில் நடைபெற உள்ளன. தற்பொழுது உள்ள பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனம் வீட்டு வசதி வாரியத்திடம் பேசி, கல்விப் பணி தடைப்படக்கூடாது என்று கருதி, பணத்தை முழுவதும் தவணை முறையில் செலுத்த உள்ளோம். இது மிகப் பெரிய சாதனையாகும்" என்றார்.

கணிதப் பேராசிரியர் திரு கே. பாபு, ஆசிரியர் அல்லாத ஊழியர் சங்கத் தலைவர் திரு. சபாநாயகம், கல்லூரி நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் திரு என். அருணாசலம், திரு பி. முருகன், டாக்டர் திரு. திருஞானசம்பந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பச்சையப்பன் அறக்கட்டளையின் தலைவர் திரு எஸ். டி. காசிராஜன், இ. ஆ. ப. அவர்கள் தலைமை வகித்து உரையாற்றுகையில், "நீண்ட நாட்கள் பாடுபட்டதற்கு இன்று பலன் கிடைத்துள்ளது. திருமூலர் வாக்குப்படி நடந்து வெற்றி பெற்றுள்ளீர்கள். இந்த அரசு கல்விக்காக, வரவு-செலவுத்திட்டத்தில் 25 சதவிகிதம் செலவழிக்கிறது. தமிழகக் கலாச்சாரம் உயர வேண்டுமானால் கல்வி வளர வேண்டும். இந்த அறக்கட்டளைதான் 1-ந் தேதி சம்பளம் வழங்குகிறது. பல இடங்களில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, வருமானம் உயர்ந்துள்ளது" என்றார்.

புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் உரையாற்றுகையில்,

"இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் ஆகும். கல்லூரியின் நிதி நிலைமை சரியில்லாமல் இருந்த காரணத்தால் பல்கலைக் கழகம் மூட இருந்தது. ஆசிரியர்கள், மாணவர்கள் போராடினார்கள். அரசு தலையிட்டு இக்கல்லூரி நிர்வாகம் முழுவதையும் ஏற்றுக் கொண்டது. பலர் பல மாதிரிச் சொல்வார்கள். ஆனால் இன்று கல்லூரிக் கட்டடம் கட்டும் அளவிற்கு ஏற்பட்ட நிலை பாராட்டத்தக்கதாகும். வர வேண்டிய வருமானம் வராததை கண்டுபிடித்து வசூலித்து வருவதைப் பாராட்டுகின்றேன்.

"இங்கு படிக்கும் மாணவர்கள் இலட்சிய உணர்வோடு இருக்க வேண்டும். நம்முடைய மாணவர்கட்குக் கலாச்சார உணர்வை ஊட்ட வேண்டும் என்று ஆசிரியப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

**"எங்கே சட்டம் ஒழுங்கு மீறப்பட்டாலும் பாதிக்கப்படுவது ஏழை, எளிய மக்கள் தான்.** இளைஞர்கள் எதையும் ஏற்றுக்கொண்டு நல்லவர்களாக வளர வேண்டும். தேசபக்தி, நாட்டுப்பற்று இளைஞர்கட்கு ஏற்பட வேண்டும்என்று விரும்புகிறேன்"

விழா இறுதியில் கல்லூரி முதல்வர் திரு எம். குமாரசாமி நன்றி கூறினார்.

—அ. மருது

# குடும்ப நலப் பயிற்சி முகாம்

தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறுவனத்தின் சார்பில், குடும்ப நலப் பயிற்சி முகாமின் நிறைவு விழா 30.3.84 அன்று செனாய் நகர் நீச்சல் குளக் குடியிருப்புப் பகுதியில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை திருமதி பத்மினி சிவசுப்பிரமணியன் வரவேற்று உரையாற்றுகையில், "இந்த நிறுவனத்தின் பயனாக 15 பேர் நுங்கம்பாக்கம் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர்" என்றார்.

குடும்பநலப் பயிற்சி முகாமினைப் பற்றிய அறிக்கையை திருமதி சுமதி எஸ்.ராவ் படித்தார். டாக்டர் திருமதி ரஷ்யா, டாக்டர் திருமதி ஹேமா பாலச்சந்திரன், திருமதிகே. ஆர். செல்வமணி ஆகியோர் பயிற்சி முகாமை பற்றி விளக்கிக் கூறினார்கள்.

அப்பகுதியில் உள்ள மக்களுக்கு மூன்று சக்கர வண்டி, காதுகேட்கும் கருவி, மூக்குக் கண்ணாடி, தையல் இயந்திரம், எவர்சில்வர் பொருள்கள், மாணவர்கட்கு உதவித்தொகைகள் மற்றும் பயிற்சி முகாமில் பணியாற்றிய ஊழியர்கட்குப் பரிசுகளும், பயிற்சி முகாமில் கலந்து கொண்ட தாய்மார்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிறைவு விழாச் சொற்பொழிவு நிகழ்த்திய பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் கபாலி பேசுகையில், "**திட்ட மதிப்பீட்டில் உள்ள 2,000 முகாம்களில் பத்தில் ஒரு பங்கை** இந்தத் தொண்டு நிறுவனத்தார் செய்துள்ளார்கள்" என்றார்.

விழா இறுதியில் திருமதி விஜயகுமாரி நன்றி கூறினார்.

—அ. ம.




# மாவட்டத் தொழில் மையம்

**பெ**ரியார் மாவட்டத்தில், 17-9-1979-ல் துவக்கப்பட்ட மாவட்டத் தொழில் மையத்தின் இயக்கம் வியக்கத் தக்கதாக இருக்கிறது.

தொழில் தொடங்க ஆர்வ முள்ளவர்களை இனம் கண்டு—தொழில் ஊக்குவிப்பு முகாம்கள், அச்சுத் தொழில் கருத்தரங்கு, தோல் தொழில் கருத்தரங்கு, தொழில் வளர்ச்சி வாரவிழா, பொருட்காட்சி, ஈரோடு சுழற் கழகம்—தொழில் மையத்தோடு இணைந்து தொழில் கருத்தரங்கு ஆகியவைகளை நடத்திப் பெரிதும் ஊக்குவித்து வருகிறது.

இந்தத் தொழில் மையம் துவக்கப்பட்டபோது பதிவு பெற்று இயங்கி வந்த சிறு தொழில்களின் எண்ணிக்கை 650 மட்டுமே. ஆனால் கடந்த பிப்ரவரி மாதம் வரை பதிவு பெற்றுத் தொடங்கப்பட்டுள்ள சிறு தொழில்களோ 1975 ஆகும்!

இப்படி வளரும் தொழில்களின் மூலம் இம்மாவட்டத்திலே இதுவரை 15,362பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இது தவிர உடல் ஊனமுற்றோர் 3750 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள், சாலையோரங்களிலே தாம் கற்றறிந்த தொழிலைக் கடைவிரித்திடும் கைவினை கலைஞர்கள் ஆகியோர் கடன் பெறவும் இம் மையம் பேருதவி புரிந்திருக்கிறது. வங்கிகளின் மூலம் அப்படிப்பட்ட 1875பேர் கடன் பெறப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறார்கள் இவர்கள். இதன் மூலம் மட்டுமே 3752 வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

புதிதாகத் தொடங்கப்பட வேண்டிய கைவினைத் தொழிலின் குறியீடு 1981-82ல் 146 தான். ஆனால் இவர்கள் அடைந்த இலக்கோ 282 ஆகும். 1982-83-ல் 343 குறியீடென்றால் இவர்கள் எட்டிப் பிடித்த இலக்கு 450 என்ற அளவில், மாவட்டத் தொழில் மையப் பணிகள் மகத்தானவைகளாக இருக்கின்றன. இந்த நிதியாண்டுக்கான குறியீடு 450 ஆகும். இதற்குள்ளேயே இவர்கள் 228-க்கு வந்து விட்டிருக்கின்றனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மாவட்டத் தொழில் மையத்தின் அரவணைப்பில், பெரியார் மாவட்டத்தில் - ஆப்பக்கூடலில் உள்ள 'சக்தி சர்க்கரை ஆலை' பவானிசாகரில் உள்ள 'பெரியார் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை' சித்தோட்டில் இருக்கும் 'தமிழ்நாடு பால் வள நிறுவனம்' ஈரோடு 'நடேசர் நூற்பு ஆலை' என்பவற்றைப் போலப் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் 16 உள்ளன. இவைகளின் மூலம் மட்டுமே ஏறத்தாழ 12 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

"இம்மையம் இங்கே உருவாக்கப்பட்ட நேரத்தில் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டே இரண்டுதான் இந்த மாவட்டத்தில் இருந்தன. இப்போதோ ஒன்பது இருக்கின்றன" என்று பெருமிதத்தோடு தெரிவித்தார் பொது மேலாளரான திரு. எம். சக்திவேல்.

சிறு தொழில்களுக்குத் தட்டுப்பாடில்லாமல் மூலப்பொருள் கிடைக்க அப்பொருட்களின் தேவைகளைக் கணக்கிட்டு, ஒதுக்கீட்டு முறையிலே அவை கிடைக்க ஏற்பாடு செய்வது, மட்டுமல்ல; வேறு சில பொருட்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கத் தேவைப்படும் சான்றிதழ்களும் வழங்கி வருகிறார்கள் இவர்கள்.

சுயவேலை வாய்ப்பினை உண்டாக்குவதன் மூலம், வேலையில்லாப் பிரச்னையின் வேரறுக்கப் பல்வேறு தொழில் பயிற்சிக்கும் இந்த மையம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்கென அரசு ரூ. 50 ஆயிரம் ஒதுக்கியிருக்கிறது. இந்த ஆண்டோ அத்தொகை 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் சிறப்புப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் இம் மையம் 1982-83ல் பரிந்துரை செய்து வழங்கிய நிதி உதவி மட்டும் ரூ. 56,450 ஆகும். வங்கிகள் மூலம் பெற்றுத்தந்த நிதி உதவியோ ரூ. 1,90,000.

ஈரோட்டிலுள்ள தொழிற் பேட்டையில் 14 தொழிற் கூடங்களும், 8 சின்னஞ்சிறு தொழிற் கூடங்களும் உள்ளன. இது தவிர தாராபுரத்தில் 32 சின்னஞ்சிறு தொழிற் கூடங்களும் கட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பிரதமர் அறிவித்த சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2000 பேருக்கு உதவலாம் என அரசு ஆணை பிறப்பித்ததென்றால், இவர்கள் அதன் மீதுள்ளஆர்வம் காரணமாக வந்த 2532 பேர்களைத் தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள்!






உள்நாட்டு மீன் உற்பத்தியில் பெரியார் மாவட்டம் முக்கிய அங்கம் வகிக்கிறது. இம்மாவட்டத்தில் பவானிசாகர் நீர்த்தேக்கம், உப்பாறு நீர்த்தேக்கம், குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கம், வரப்பட்டுப் பள்ளம் நீர்த்தேக்கம் ஆகியவை உள்ளன. இவை தவிர இன்னும் ஏராளமான நீர்ப்பாசன ஏரிகள், பெரிய குளங்கள், சிறிய குளங்கள், குட்டைகளும் உள்ளன.

பவானிசாகர் நீர்த்தேக்கம் தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்திற்கு நீண்டகாலக் குத்தகைக்கு மீன் வளப்பணிகள் செய்வதற்கும், மீன்களைப் பிடித்து விற்பனை செய்வதற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந் நீர்த்தேக்கத்தில் இப்போது ஆண்டொன்றுக்கு 250 டன் எடையுள்ள மீன்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மீன் பிடிப்பதனால் சில சமயம் ஏற்படும் இழப்பை ஈடுகட்டுவதற்காக ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் கட்லா, ரோகு மிர்கால் இனப் பெருங் கெண்டை மீன்கள் மற்றும் சாதாக் கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகின்றன.

உப்பாறு, வரட்டுப்பள்ளம், குண்டேரி பள்ளம் நீர்த்தேக்கங்கள் ஈரோடு மீன்துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இந் நீர்த் தேக்கங்களிலும் ஒடத்துறை மற்றும் தாலக்குளம் மீன்வளப் பணிகள் அவரால் கவனிக்கப்படுகின்றன. இவைகளில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் தரமான மீன் குஞ்சுகள் இருப்பு வைக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு 100 டன் எடையுள்ள மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இவைகளின் மதிப்பு ரூ. 3 இலட்சம் ஆகும்.

மீன் உற்பத்தி பெருக மீன் குஞ்சுகள் மிக அடிப்படைத் தேவையாகும். தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கு இம்மாவட்டத்தில் பவானிசாகரில் 1957ஆம் ஆண்டில் ஒரு தூண்டுதல் முறை மீன் குஞ்சு இனவிருத்தி நிலையம் அமைக்கப்பட்டது.

ஆண்டொன்றுக்கு இப்போது 200 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள் இந் நிலையத்தில் உற்பத்தி ஆகின்றன. இந்நிலையத்தில உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் அரசுக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்கள், குளங்கள் ஆகியவைகளில் இருப்பு செய்வதோடு மட்டுமின்றி, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆகியவைகளுக்கும் தனியார்களுக்குமே நியாயமான விலைக்கு விற்பனை செய்கிறது.

2.6.1982 முதல் இம்மாவட்டத்தில் ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை செயல்பட்டு வருகிறது. இம் முகமையானது, இம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் நிலைகளையும் அளவை செய்து மீன் வளர்ப்பிற்கு ஏற்றதைத் தேர்ந்தெடுப்பது; அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்நிலைகளை நீண்டகாலக் குத்தகைக்கு பெறுவது; கிராமப்புறத்தில், படித்து வேலையில்லாதிருக்கும் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள இளைஞர்கள், மீனவர் குலத்தைச் சார்ந்தவர்கள், பரதவர், ஆதி திராவிடர், மலை சாதி வகுப்பைச் சார்ந்தவர்கள் ஆகியவர்களை மீன் வளர்ப்போர்களாகத் தேர்ந்தெடுத்து மீன் வளர்ப்பில் தக்க பயிற்சி அளித்துக் குளங்களை ஒதுக்கீடு செய்தல்; மீன்வளர்ப்போர்களுக்கு, அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குளத்தில் நவீன முறையில் மீன் வளர்ப்புச் செய்திடத் தொழில் நுட்ப உதவிகளை இலவசமாகச் செய்வது; குளங்களைச் சீர்செய்வதற்கு, மீன் குஞ்சுகள், உரம், மீன் உணவு ஆகியவைகளை வாங்குவதற்கு வங்கிக்கடன் பெற்றுத்தர உவதவுதல் போன்ற பல நோக்கங்களோடு இயங்கி வருகின்றது.

## முறையான திட்டங்கள்

இம்முகமையின் தலைவராகப் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். முகமையின் திட்டங்களை முறையாகச் செயல்படுத்த ஆலோசனைகள் வழங்க என ஒரு நிர்வாகக்குழு உள்ளது. இதற்கும் மாவட்ட ஆட்சியாளரே தலைவர்.

பொதுவாக ஒரு எக்டேர் பரப்பளவு உள்ள குளத்தில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 250 கிலோ எடையுள்ள மீன்களே உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் முகமையின் ஆலோசனைப்படி ''கலப்பின மீன் வளர்ப்பு'' என்னும் நவீன முறையில் மீன் வளர்ப்புச் செய்தால் ஒரு எக்டேர் பரப்பளவு உள்ள குளத்தில் ஆண்டொன்றுக்கு 1000 முதல் 1500 கிலோ வரையில் மீன் உற்பத்தி செய்ய இயலும். இதனால் மீன் வளர்ப்பவரின் வருமானம் பன்மடங்காகக் கூடும்.

பெரியார் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை இதுவரையில் 101.7 எக்டேர் பரப்பளவு உள்ள 79 குளங்களை இத்திட்டத்தின் கீழ் ஏற்றுள்ளது. 52 மீன் வளர்ப்போர்களுக்குக் குளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 48 மீன் வளர்ப்போர்களுக்குக் குளங்கள் ஒதுக்கீடு செய்யப்படவிருக்கின்றன. 1983-84ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திலிருக்கும் 49 குளங்களில் 2,89,375 மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 17 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவை தங்களின் எல்லையில் அமைந்துள்ள குளங்களில் மீன்பிடிப்பு உரிமையைக் குத்தகைக்குப் பெற்று, உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கிறது.

தமிழக அரசு, மீன்பிடிப்பு உரிமையை மீனவர் கூட்டுறவுச்சங்கங்களுக்குத்தான் கண்டிப்பாகக் குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளது.

மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்கள் வாங்குவதற்கு நீண்டகால, மத்தியகால மற்றும் குறுகிய காலக் கடன்களை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசே கொடுக்கிறது. மீனவர்கள் வெள்ளம் மற்றும் தீ விபத்து போன்றவைகளினால் பாவிக்கப்படும்போது நிவாரண உதவிகளும் செய்யப்படுகின்றன. மீன்பிடிக்கும்போது மீனவர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழும் நிதி உதவி பெற்றுத் தரப்படுகிறது.

பெரியார் மாவட்டத்தின் மீன்துறையும், மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையும், தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகமும் மீன் வளத்தை அதிகரிக்க மீன் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்த மீன் உற்பத்தியைப் பெருக்க, மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாள்தோறும் பாடுபடுகின்றன.



# நடமாடும் கால்நடை மருந்தகம்

டாக்டர்
ஜி. கில்பர்ட் ராஜ்குமார்
உதவி இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,
பெரியார் மாவட்டம்.

**கா**ல்நடைச் செல்வங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பேணும் சிறந்த விவசாயப் பெருங்குடி மக்களைக் கொண்டது பெரியார் மாவட்டம்.

உழைக்கும் திறன்மிக்க சிறந்த காங்கேயம் இன மாடுகளின் தாய் விடு பெரியார் மாவட்டம் ஆகும். இந்த அரிய காங்கேய இனம் அழிந்து போகாமல் வம்சா வழியாகத் தொடர்ந்து பேண அதிக கவனம் செலுத்தி வருவது இம் மாவட்டவிவசாயிகளிடம்காணும் சிறப்பு மிக்க-பாராட்டப்படக் கூடிய அம்சமாகும்.

இதுபோன்றே இம் மாவட்டத்தில் பெரிதும் விரும்பிப் பேணப் படுபவை எருமைகள் ஆகும். காங்கேயம் கால்நடைகள் குறைவான பாலினைத் தருகின்றன. உழுவதற்கும் சுமையினை இழுத்துச் செல்வதற்கும், போக்குவரத்திற்கும், அதன் கழிவுகள் உரத்திற்கும் இன்னும் பிற பணிகளுக்கும் விவசாயிகளுக்கு உற்ற துணைவனாக விளங்குகின்றது.

பெரியார் மாவட்டத்தில் அதிகமாகப் பால் உற்பத்தி செய்யப் படுகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. கறவை எருமைகள், பசுக்களிலிருந்து கிடைக்கும் உபரி பால் சென்னை மற்றும் இதர இடங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

பால் உற்பத்தியினை அதிகப் படுத்துவதற்கும், கறவைப் பசு, எருமைகளின் தரத்தை உயர்த்துவதற்கும், உயர்ரகப் பொலி காளை விந்துகள் கருத்தரிப்புக்குப் பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

முர்ரா உயர்ரகப் பொலி காளைகளின் விந்து எருமைகளுக்கும், ஜெர்சி, ப்ரீசியன் பொலிகாளை விந்துகள் பசுக்களுக்கும், செயற்கைமுறைக் கருவூட்டலுக்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன. தரம் உயர்த்தப் பட்ட கால்நடைகளின் பராமரிப்பில், அதற்கு அளிக்கப்படும் தீவனம்முக்கியப் பங்கு வகிக்கின்றது. அதன் வளர்ச்சி, அதிகப் பால்தரும் திறன், 10 முதல் 18 மாதத்தில் கிடாரிகள் கருத்தரிக்கும் நிலைக்கு வர, நல்லுணவு அவசியமாகின்றது. பராமரிப்புக்கு அடுத்தபடியாக, நல்ல ஆரோக்கியத்துடன் நோய் நொடியின்றிக் கால்நடைகள் இருக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

## மானியமும் கடனும்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கறவை எருமைகள், பசுக்கள், எருதுகள், ஆடுகள், விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் ஆகியோருக்கு மானியத்துடன் கடன் வசதி அளித்து அவைகள் கொடுக்கப்பட்டு, அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேல் கொண்டு வரத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவற்றில் ஒரு நல்ல திட்டம் நடமாடும் கால்நடை மருத்துவ மனை ஆகும்.

பெரியார் மாவட்டத்தில், ஈரோடு, கோபிசெட்டி பாளையம் மற்றும் தாராபுரம் ஆகிய 3 இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் செயல்படுகின்றன.

ஈரோடு வட்டத்தில் 5 முதல் 10 கிலோ மீட்டருக்குள் ஒரு கால்நடை மருத்துவமனை அல்லது கிளை நிலையம் உள்ளது. இங்கு செயற்கைக் கருவூட்டல்-சிகிச்சை முதலியன செய்ய எல்லா வசதிகளும் இருப்பினும், கால்நடைபராமரிப்புத் துறையின் நடமாடும் கால்நடை மருத்துவ மனைக்கு அதிக ஆர்வமும், உற்சாகமும் பொதுமக்களிடையே நிலவுகின்றது என்பது உண்மை.

ஏன் மக்களிடையே அதிக வரவேற்பு உள்ளது?

ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தில் அதிகம் கால்நடைகள் கொடுக்கப்பட்ட, மருத்துவவசதி பெற முடியாத கிராமங்களுக்கு வாரம் ஒரு முறை குறிப்பிட்ட நேரத்தில் அவை செல்கின்றன. ஒரு நாளில் 5 முதல் 6 கிராமங்கள் வீதம் வாரத்தில் 5 நாட்கள் தனித்தனித்தடங்களில் செயல்படுகின்றது. அது மட்டுமல்ல. திட்டத்தில் அல்லாத கால்நடைகளுக்கும் வேண்டிய மருத்துவ உதவி, கருவூட்டல் செய்யப்படுகின்றன.

## வாரம் ஒரு நாள்

16-8-82 முதல் நடமாடும் கால்நடை மருத்துவமனை செயல் படுகின்றது. கிழமைதோறும் கீழ்க்கண்ட இடங்களுக்கு இது செல்கின்றது:

திங்கட்கிழமை :
ஈரோடு, சின்னியம்பாளையம், பாரபாளையம், செல்வநகர், வடுகப்பட்டி, அஞ்சுராம்பாளையம், 88. வேலம்பாளையம்.

செவ்வாய்க்கிழமை :
அண்ணுடையாம்பாளையம், வேங்கியம்பாளையம், பெரிய செம்மாண்டாம்பாளையம், கருக்கம்பாளையம், ஒத்தக்கடை, நகப்பாளையம், அனைக்கவுண்டன்புதூர்.

புதன்கிழமை :
கதிரம்பட்டி, வேலம்பாளையம், ஆதியூர், எல்லக்கடை, நடுப்பட்டி கம்பிளியாம்பட்டி.

வியாழக்கிழமை :
அண்ணாநகர், கவுண்டச்சிபாளையம், மேட்டுப்பாளையம், கனகபுரம், மயிலாடி, சென்னியங்கிரிவலசு, பெருந்துறை, ஆர்.எஸ். புங்கம்பாடி.

வெள்ளிக்கிழமை :
இந்திரபுரம், விருமாண்டாம்பாளையம், பூலப்பாளையம், எல்லீஸ்பேட்டை, ஆட்டையாம்பாளையம், வில்லரசம்பட்டி.

நமது கால்நடைகள் நோயால் பிடிக்கப்பட்டால் அதே இடத்திற்கு வந்து சிகிச்சை அளிப்பது எவ்வளவு ஏற்றது என்பதை அவர்கள் அனுபவ பூர்வமாகக் கண்டுள்ளனர். அதுவும் இலவசம் என்றால் இரட்டிப்பு மகிழ்ச்சி அல்லவா? நமது தேவை பூர்த்தி செய்ய அதிக அக்கறை எடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதிக தூரம் நோயுற்ற கால்நடைகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் அவசியமும் இராது. அங்கும், இங்கும் நடக்கடிக்காமல் இருக்கவும் உதவுகிறது. நாட்டுமுறையில் அளிக்கப்படும் முரட்டுச் சிகிச்சை செய்ய அவசியமில்லாமல்ஆகிறது. அதில் பணி புரியும் மருத்துவரும் ஆய்வாளரும் பணியாளர்களும் இன்முகத்துடன் விவசாய மக்களிடம், கலகலப்பாகவும் சரளமாகவும் பழகுவதால் ஒருவருக்கொருவர் அன்பால் பிணைக்கப்பட்டுள்ளதால் மக்களுக்கு அது அதிக ஆர்வத்தையும், ஊக்கத்தையும் அளிக்கிறது என்பது தெளிவு.

கால்நடைகள் நல்ல சுகத்துடன் இருந்தாலும், குறிப்பிட்ட நாட்களில் நடமாடும் கால்நடை மருந்தகம், சிறிய அவ்வூருக்குச் செல்வதால் அதிக பணிபுரியும் மருத்துவரைக்கண்டு சிறிது பராமரிப்பு மற்றும் சந்தேகங்களைத் தெளிவாக்க, பேசிவிட்டு வரலாம் என்ற எண்ணம் விவசாய மக்களிடம் நிலவிவிட்டது. மேலும் இதற்காக அவர்கள் தங்கள் வேலை நேரம் வீணாக்காமலும், ஒரு சிறிய இடைப்பட்ட நேரத்தில் சிறந்த ஆலோசனைகளைப் பெற முடிகிறது.

**எளிதில் சிகிச்சை**

பொதுமக்கள் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க மருத்துவர் சிரமப்படாமல், மாட்டிடம் உதைபடாமல் சிகிச்சை அளிக்க ஏற்ற கிட்டிகளும் தயார்செய்து கொடுத்துள்ளனர் பல கிராமங்களில். இந்த நடமாடும் கால்நடை மருத்துவமனை ஆண்டிற்கு 3,000 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க 'ஆண்டு நிர்ணயம்' அளிக்கப்பட்டு உள்ளது. அதாவது ஒரு மாதத்திற்கு 250 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும். நமது ஈரோடு வட்டத்தில் மாதத்திற்கு 605 கால்நடைகள் சிகிச்சை பெறுகின்றன. அதேபோல் குடல்புழு நீக்கம் மாதம் 1,000 கால்நடைகளுக்குச் செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1630 கால்நடைகள் மாதந்தோறும் குடல்புழு நீக்கம் செய்யப்படுகின்றன. செயற்கைக் கருவூட்டல் மாதம் 50 கால்நடைகளுக்குச் செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் செய்யப்படுவது மாதம் ஒன்றுக்கு 335. சினை ஆய்வு செய்ய நிர்ணயிக்கப்பட்டது மாதத்திற்கு 10; செய்யப்படுவது மாதம் 400. மலட்டுத் தன்மை நீக்கம் செய்ய உள்ள நிர்ணயம் மாதத்திற்கு 50; செய்வது 80. காயடிக்கப்பட்.. நிர்ணயிக்கப்பட்ட குறியீடு மாதத்திற்கு 100; செய்யப்படுவது 100-க்கும் மேல். இதுபோலத் தடுப்பூசி இட நிர்ணயிக்கப்பட்டது மாதத்திற்கு 2000. இவை தவிர்த்து தீவனப் பயிர்வகைகள் போன்றவைகளையும் அவர்கள் விநியோகிக்கின்றனர்.

எல்லாப் பணிகளிலும் இப்படி குறியீட்டுக்கு மேல் செயல்படுகிறது. அதாவது மக்கள் இதனை நல்ல முறையில் பயன்படுத்துகிறார்கள். மேலும் ஒரு வாரத்தில் ஈரோடு பெருந்துறை தாலுக்காவிலும் எங்குதொற்றுநோய்கள் உள்ளன இயற்கைச் சீற்றத்தில் கால்நடைகளுக்கு ஏதாவது அபாயம் நேர்ந்துள்ளதா' போன்றவை உடன் தெரியும். எங்கு கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் உள்ளதோ அங்கு நடமாடும் கால்நடை மருந்தகம் செல்வதால் நன்கு பயன் அளிக்கிறது.



**பெண்களின் பங்கு**

பெரும்பாலும் பெண்கள்தான் கால்நடைகளைக் கவனிக்கிறார்கள். அவர்கள் இதில் நன்கு கலந்து கொள்கின்றனர். கால்நடைகளைப் பேணும்பெண்கள், நேரடியாகத் தங்களது கால்நடைகளுக்குச் செய்ய வேண்டியதை மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறார்கள். அதே போல் கருவூட்டல் செய்வதில் காலதாமதம் ஆகாமல் பார்த்துக் கொள்கின்றனர்.

இம்மருத்துவமனை நன்கு செயல்பட தேவையானமருந்துகள், விந்து முதலியன போதுமானதாக இருக்கின்றதா என்பது அவ்வப்போது திடீர் ஆய்வு செய்யப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

முக்கியமாகக் கால்நடை வைத்திருக்கும் விவசாயிகள் உயர்ரக விந்தினை வைத்து கருத்தரிப்புக் கேட்பதும், கன்றுகளுக்குப் பூச்சி மருந்து கொடுக்கக் கூறுவதும் 'வெட் ஏ' ஊசிபோடுங்கள் என்று கூறுவதும் அவர்களது ஆழ்ந்த அனுபவத்தையும் முன்னேற்றப் பாதையில் செல்கிறார்கள் என்பதையும் மட்டுமல்ல, கால்நடை பராமரிப்புத் துறையினர் எப்படி ஆர்வமாக ஈடுபடச் செய்துள்ளார்கள் என்பதும் தெரியும்.

நல்ல அனுபவமும், திறமையும் தகுதியுமுடைய கால்நடை உதவி மருத்துவரது பணியும், சுமுகமாகப் பழகும் தன்மையும், பொதுமக்களிடையே உள்ள ஆர்வமும், அவர்கள் இருப்பிடத்திலேயே அளிக்கப்படும் உதவிகளும், அதனால் அவர்கள்பெறும் நன்மைகளும் கணக்கில் அடங்கா.

எனவே பெரியார் மாவட்டத்தில், நடமாடும் கால்நடை மருத்துவமனையால் மக்கள் பெரிதும் கவரப்படுகின்றனர்.

நடமாடும் மருந்தகம் வந்த பின் கால்நடைகளைக் கொண்டு வரும் நிலைமை சில கிராமங்களில் உள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் இருக்கும்படி பணி திட்டமிடப்பட்டுள்ளதால், தங்களது கிராமத்தில் வரும் நேரத்திற்கு 5 முதல் 10 நிமிடம் முன்னதாக கால்நடைகளைக் கொண்டு வர விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும்.



# சங்கரன் கோவில் நகராட்சி தன்னிறைவுத் திட்டம்..

சங்கரன்கோவில் நகராட்சி, இரண்டாம் நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி இந்நகரின் மக்கள் தொகை 42,084 ஆகும். இந்நகரின் பரப்பளவு 11ச.கி.மீ.ஆகும். தமிழ்நாடு அரசு 1982-83-ஆம் ஆண்டுத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 25 லட்சம் ரூபாயில் ரூ. 23.35 மான்யமாகவும் ரூ. 1.65 லட்சம் கடனாகவும் வழங்கப்பட்டு தன்னிறைவுத் திட்ட வேலைகள் கீழ்க்கண்டவாறு செய்து முடிக்கப்பட்டன. தன்னிறைவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகள் அனைத்தும் 27.12.83 அன்று மாண்புமிகு ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**குடிநீர் வசதி**

இந்நகராட்சிப் பகுதியில் கோடை காலத்தில் கோட்டை மலையாற்றிலிருந்து வரும் குடிநீர் அளவு குறைவதால், குடிநீர் விநியோகம் சரியான முறையில் கொடுக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 2,80,000 செலவில், தண்ணீர் தலைமை இடத்தில் 2 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து 10 குதிரை வேகத்தில் மோட்டார் அமைத்துத் தினமும், 16,00,000 லிட்டர் தண்ணீர் இந்நகராட்சிப் பகுதிக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சிப் பகுதிகளில் நான்கு இடங்களில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, அதில் 1 குதிரைவேகமுள்ள மோட்டார் அமைக்கப்பட்டு வெளிச் செலவுக்கான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1. அம்பேத்கார் நகர் தெரு, 2. கழுகுமலை ரோடு 3. சங்கர் நகர் 2ம் தெரு 4. மாதா கோவில் தெரு.

**சாலைகள் அமைத்தல்**

இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகள் செப்பனிடப்பட்டும், புதுரோடுகள் அமைக்கப்பட்டும் இத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 10 வேலைகள் செய்யப்பட்டன. அமைக்கப்பட்ட தார்தளத்தின் நீளம் 7.6 கி.மீ. இதற்கான செலவுத் தொகை ரூ. 5,43,966 ஆகும்.

**சிறுபாலங்களும், வடிகால்களும் அமைத்தல் :**

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மழைநீர் ஓடை மற்றும் தடுப்புச் சுவர் கட்டும் வேலைகள் 12 செய்யப்பட்டன. இதற்கான மொத்தச் செலவுத் தொகை ரூ. 4,71,654 ஆகும்.

**ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும், இடுகாடுகளுக்கும் பாதை அமைத்தல் :**

இத்திட்டத்தின் கீழ் பல ஆண்டுக் காலமாகச் செப்பனிடப்படாத கீழ்க்கண்ட வேலைகள் 58,801 ரூபாய் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பட்டாத்தூர் மயானப்பாதை அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானப் பாதை அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானத்தில் எரிப்பு செட், தங்கும் விடுதி அமைத்தல்.

அருந்ததியார் மயானத்தில் எரிப்பு செட், தங்கும் விடுதி அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானத்தில் எரிப்பு செட், தங்கும் விடுதி அமைத்தல்.

**பள்ளிக்கூடங்கள் கட்டுதல், தாய் சேய் நல விடுதி:**

இத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் புதிதாக 3 பள்ளிக் கட்டடங்கள் ரூ. 2,80,925 செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணசாமி நகரில் (கக்கன் நகரில்) இரண்டு பள்ளிகள் கட்டுதல். மேலும் தாய் சேய் நல விடுதிகள் ரூ.1,74,480 செலவில் கக்கன் நகரிலும் மாட்டுத் தொழுவிலும் கட்டப்பட்டுள்ளன.

**பொதுச் சுகாதாரம்**

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கழிப்பிட வசதிகள் இல்லாத பகுதிக்குத் தண்ணீர் வசதியுடன் கூடிய 8 அறைகள் கொண்ட நவீனக் கழிப்பிடங்கள் 5 இடங்களில் கட்டப்பட்டுள்ளன. பழைய கழிப்பிடங்கள் நவீன கழிப்பிடமாக 2 இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

சாலை மின் விளக்குகள் அமைத்தலுக்குப் பதிலாக,இதர விளம்பரத்திற்கும் சேர்த்து ரூ. 12,623 செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மாட்டுத் தாவணிப் பகுதியில் சுகாதாரப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு செய்வதன் பொருட்டு 10 பிளாக்குகள் (20 வீடுகள் )ரூ. 45,000 செலவில் தட்டப்பட்டுள்ளன.

குடிநீர் வழங்கல், சாலைகள் அமைத்தல், சிறுபாலங்களும் வடிகால்களும் அமைத்தல், ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் இடு காடுகளுக்கும் பாதை அமைத்தல், பள்ளிக் கூடங்கள் கட்டுதல், பொதுசுகாதார வசதிகள், தாய்சேய் நல விடுதிகள், சாலை மின் விளக்குகள் அமைத்தலுக்குப் பதிலாக இதர விளம்பர அயிட்டங்களுக்கும் பயன்பட்டது, சுகாதார ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்தல் ஆகிய பணிகளுக்கு ரூ. 25,55,963 செலவு செய்யப்பட்டுள்ளது. இவை பொதுமக்களின் அன்றாடப் பயன்பாட்டில் உள்ளன.

அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

# உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குங்கள்

## தேசீய சேமிப்புப் பத்திரம்

### 6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்



ஒவ்வொரு ரூ.100/-ம் ரூ.201-50 ஆக பெருகுகிறது

உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது. இப்பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!



தொடர்பு கொள்க :
இயக்குநர்,
**சிறு சேமிப்புத் துறை,**
143, அண்ணா சாலை, சென்னை-600 002
அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.

DIPR-609/83-EP







**கோ** ஆப்டெக்சின் 30-வது கைத்தறிகண்காட்சியினை மேதகு ஆளுநர் திரு. எஸ். எல். குரானா அவர்கள் 12.4.84 அன்று சென்னையில் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: கிராமங்களில் வாழும் எண்ணற்ற கைத்தறி நெசவாளர்களின் துன்பத்தைப் போக்க அரசு பாடுபட்டு வருகிறது. நாடு முழுவதும் ஏறத்தாழ 65 இலட்சம் பேர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அதில் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் ஏறத்தாழ 6 இலட்சம் பேர்.

விழாவிற்குத் தலைமைவகித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில், 'நெசவாளர்களுக்கு மாநில அரசால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதுபோல் மைய அரசும் கட்டித் தர வேண்டும்' என்றார்.

கோ ஆப்டெக்சின் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம், எம்.எல்.சி. கோஆப்டெக்சின் தனி அலுவலர் திரு எம். தேவராஜ் ஆகியோர் உரையாற்றினார்கள்.

கைத்தறித் துறை இயக்குநர் திரு வினயஜா இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

**அ. மருது**

# நெசவாளர் பயன்பெற....

**கை**த்தறித் துணிகளின் பெரும் பகுதி விற்பனை, தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய இவ்விரண்டு திருவிழாக் காலங்களில் நடக்கிறது.

பொங்கலுக்கு அடுத்து, 9 அல்லது 10 மாதங்களுக்குப் பிறகுதான் தீபாவளி வருகிறது. இருந்த போதிலும், நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புத் தருவதற்காக பொங்கலுக்கும், தீபாவளிக்கும் இடைப்பட்ட காலத்தில் தயாராகும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு ஒரு கண்காட்சியோ அல்லது ஒரு பொருட்காட்சியோ நடத்தப்பட வேண்டுவது மிக அவசியத்தேவை என்று கைத்தறித் துறை உணர்ந்து, கைத்தறிக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இப்பொழுது சென்னை, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர் கோவில், திண்டுக்கல், விருதுநகர் போன்ற இடங்களில் 12.4.'84 முதல் தொடங்கியுள்ள கண்காட்சிகள் 30 நாட்கள் நடைபெறும்.

கர்நாடகமும் பாண்டிச்சேரியும் இக்கண்காட்சியில் பங்கு கொள்ளும் இதர மாநிலக் கைத்தறி அமைப்புகளாகும். மொத்தம் 254 ஸ்டால்கள் இரகவாரியாக அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சியில் 1980ல் ரூ.125 இலட்சமும் 1981ல் ரூ. 236 இலட்சமும், 1982ல் ரூ. 273 இலட்சமும், 1983ல் ரூ. 283 இலட்சமும் துணிகள் விற்பனையாகியுள்ளன. இவ்வாண்டு ரூ. 300 இலட்சம் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மற்றும் மாவட்டத் தலைநகர்களில் அமைக்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் ஸ்டால்கள் மற்றும் அனைத்துக் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் நடைபெற்ற விற்பனை விவரம்: 1980ல் ரூ. 376 இலட்சம், 1981ல் ரூ. 827 இலட்சம், 1982ல் ரூ.1,230 இலட்சம் 1983ல் ரூ.1,492 இலட்சம். இவ்வாண்டுக் கண்காட்சிக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் விற்பனை ரூ.1,800 இலட்சம்.

கண்காட்சித் திடலில் அமைக்கப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் ஸ்டால்களிலும், மற்றும் அனைத்துக் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் 20 முதல் 40 வரையிலான சிறப்புத் தள்ளுபடி இந்த நாட்களில் வழங்கப்படுகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடம் ரூ.70 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணிகளும் மற்ற பிரதம சங்கங்களிடம் ரூ. 30 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணிகளும் தேங்கி இருக்கின்றன. இவற்றில் 4ல் ஒரு பங்கு துணிகள் வரை இந்தக் கண்காட்சி மூலம் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரியார் மாவட்டம்:

# சாண எரிவாயுத் திட்டம்...

## 20 அம்சம்



சாண எரிவாயு, சமையலுக்குப் பேருதவி புரிகிறது என்று கேள்விப் பட்டிருக்கிறோம்; அதைக் கொண்டு மின் விளக்கேற்றலாம், வயல் வெளிகளுக்கு நீர் இறைக்கும் மோட்டார் எஞ்சினையும் இயக்கலாம் என்பது தெரியுமோ?

பெரியார் மாவட்டத்தில் இந்த வகையில் மிக நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது.

பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் 12 ஆம் அம்சமான இது பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டு சாண எரி வாயுத் திட்டம் பெருமளவில் செயல்படுத்தப்படும் கொடுமுடி, மொடக்குறிச்சி, கோபி ஆகிய கிராமங்களுக்குச் சென்று பார்த்தோம்.

கிராமங்களிலே மட்டுமல்ல; நகர்ப்புறங்களையும் இத்திட்டம் வெகுவாகக் கவர்ந்து வருகிறது.

ஈரோடு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள பெரியசேமூர் என்ற இடத்தில், பழனிச்சாமி கவுண்டர் மகன் சுப்பிரமணியன் என்பவருக்குச் சொந்தமான வயல்வெளியில் இத் திட்டம் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

1982 டிசம்பரில் இருந்து, சாண எரிவாயுத் திட்ட அமைப்பின் உதவியால் 8 எச்.பி. எஞ்சின் ஒன்றை ஓட்டி வயலுக்கெல்லாம் நீர் பாய்ச்சி வருகிறார்கள் இங்கே!

20 சதவீதம் டீசலும் 80 சதவீதம் சாண எரிவாயும் அந்த எஞ்சின் ஓடப் போதுமானதாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள் அவர்கள். நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் ஓடுகிறதாம் அது!

3 மீட்டர் விட்டமும், 15 கியூபெக்மீட் கொள்ளளவும் உள்ளதாக இருக்கிறது அந்த 'டிரம்'. இதை அமைக்க அரசு மூலம் ரூ. 4,420 நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 15 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது.

''செலவு என்னங்க செலவு, அடுப்பெரிக்க மாத்திரமில்லாமெ வெளக்கெரிக்கவும், தண்ணீர் பாய்ச்சவும் இது ரொம்ப ஒதவுதுங்களே; மின்சாரம் இருந்தாலும் இல்லாட்டாலும் நாங்க கவலைப்பட வேணாம்பாருங்க?' என்று மகிழ்வோடு கூறினார் அதை வைத்துள்ள திரு. சுப்பிரமணியம்.

இப்போதைக்கு இன்னும் 250 இடங்களிலிருந்து, சாண எரிவாயுத் திட்ட அமைப்பை உருவாக்கித் தருமாறு விண்ணப்பங்கள் வந்துள்ளன இம்மாவட்டத்தில்.

**தில்லை கோவிந்தன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**



பெரியார் மாவட்டத்தில் சாண எரிவாயு திட்டம் 1981-82-ல் தொடங்கப்பட்டு 205 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டு ரூபாய் 2,37,600 மான்யமாக வழங்கப்பட்டது. 1982-83-ல் 654 கலன்கள் கட்டி முடிக்கப் பட்டு ரூபாய் 13,44,450 மான்ய மாக வழங்கப்பட்டது.

மேலும் 1983-84ல் இத்திட்டத்தில் இம்மாவட்டத்திற்கு அரசு நிர்ணயித்த இலக்கு 800-க்கு மேல் சாதனையாக 1336 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் 159 கலன்களுக்கு மட்டும் ரூபாய் 4,89,450 வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1177 கலன்களுக்கு மான்யம் வழங்கப்பட உள்ளது.

இம்மாவட்டத்தில் சாண எரிவாயுத் திட்டத்தின் மூலம் இது வரை 25 இடங்களில் ஆயில் இன்ஜின்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் விசைப் பம்பு இயக்க 15 சாதனங்களும், அந்தியூர், கோபி, பவானி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்களில் கரும்புச் சாறு பிழியும் இயந்திரம் இயக்க 8 சாதனங்களும், நசியனூர் கிராமத்தில் விசைத்தறி இயக்க ஒரு சாதனமும், காடபாளையம் கிராமத்தில் விசைச் செக்கு இயந்திரம் இயக்க ஒரு சாதனமும் பயன்படுத்தப்பட்டு நன்கு இயங்கி வருகின்றன. இவை மூலம் விவசாயிக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூபாய் 15 முதல் 25 வரை டீசல் செலவு குறைகிறது.

மொடக் குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒலப்பாளையம் கிராமத்தில் உள்ள விவசாயி இல்லத்தில் சாண எரிவாயு சாதனம் அமைக்கப் போதிய இடம் இல்லாத காரணத்தால், வீட்டு முற்றத்தில் தரைக்குக் கீழே சாதனத்தை அமைத்து, மீண்டும் அந்த இடத்தை முன் போல் பயன்படுத்தி வருகிறார்கள்.

மொத்தத்தில், பெரியார் மாவட்ட மக்கள் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான இத்திட்டத்திற்கு மிக நல்ல வரவேற்புத் தருகிறார்கள்.



# எண்ணெய் வளம்

பெரியார் மாவட்டத்தில் கிராமப்புறப் பகுதிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் சுமார் 250 எண்ணெய் பிழியும் ஆலைகள் இயங்கி வருகின்றன.

இந்த ஆலைகளின் மூலம் ஆண்டு ஒன்றிற்குச் சுமார் 75,000 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் இங்கே உபயோகிக்கப்படுகின்றன. இந்த ஆலைகளின் மூலம் சுமார் 7,500 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இம்மாவட்டத்தில் இந்தத் தொழில் வளர்வதற்கு முக்கியமான காரணம் தொழிலாளர்கள் குறைந்த கூலி ஊதியத்தில் கிடைப்பதும், போக்குவரத்து வழி சிறந்த முறையில் அமைந்திருப்பதும், எல்லாவற்றிற்கும் மேலாக இத் தொழிலுக்குத் தேவைப்படும் தட்ப வெப்ப நிலை சாதகமாக இருப்பது போன்றவைகளுமே ஆகும்.

இத்தொழிலுக்குத் தேவைப்படும் முக்கிய மூலப் பொருட்களான எண்ணெய் வித்துக்கள் நமது மாவட்டத்தில் கிடைத்த போதிலும் வெளி மாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலும் எண்ணெய் வித்துக்கள் கொள் முதல் செய்யப்படுகின்றன. இவ்வாறு தயாரிக்கப்படும் எண்ணெய் பல மாநிலங்களுக்கும் அனுப்பப் படுகிறது.




காவிரி யாறது கரைக்குள் அடங்கிக்
கவின்மிகு அலைகள் பாடிவரும்
பூவிரி சோலைகள் பூத்திட எங்கும்
புகழ்மிகு நொய்யல் ஓடிவரும்
நாவிரிக் கும்வர லாறுகள் கொண்டது
நல்அம ராவதி எங்கள்நதி
பாவிரி புலவர்கள் பரவும் பவானி
பாய்வது பெரியார் மாவட்டம்!

கொங்கிரு பத்து நாலெனும் நாட்டில்
கூடிய ஒன்பது நாடுகளே
இங்கொன் றாக இணைந்துமே இனிதே
இலங்கும் பெருமை கொண்டிடுமே
காங்கயம் பூந்துறை வடகரை தென்கரை
காஞ்சிக் கூவல் அரையம்ஒடு
வங்கம் குறுப்புடன் மணநா டதுவும்
வாழ்வது பெரியார் மாவட்டம்!

சீர்மிகு சங்க வேளிர்கள் மன்னர்கள்
சிறப்பாய் ஆண்டு முடிந்தவுடன்
பார்மிகு ரட்டர் கங்கர் சோழர்கள்
பாண்டியர் சேரர் ஒய்சளரும்
ஏர்மிகு விசய நகர்மா மதுரை
ஏறிய நாய்க்கர் மைசூரார்
போர்மிகு கம்பெனி ஆட்சி வரைபலர்
புகுந்தது பெரியார் மாவட்டம்!

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
முன்தந்த கொடையின் மூத்தகொடை
இல்லாள் தாலியை இரவலர்க் களித்த
எம்சர்க் கரைமன் றாடியாரும்
பல்லவ ராயர் உலகில்மன் றாடி
பார்புகழ் வேணா வுடையாரும்
நல்லவர் காங்கய மன்றாடி விளங்குவர்
நலமிகு பெரியார் மாவட்டம்!

அன்னியர் ஆதிக் கம்தனை எதிர்த்தே
ஆர்ப்பரித் தெழுந்தனர் பலரிங்கே
முன்னவன் தீரன் சின்ன மலையவன்
முனைப்புடன் தோன்றும்ஓ டாநிலையும்
தன்னுயிர் நீக்கினும் தாங்கிய கொடியைத்
தரமாட் டேன்என்ற வீரமகன்
சென்னி மலைதனில் திருப்பூர்க் குமரன்
தோன்றிய பெரியார் மாவட்டம்!

கைத்தறித் துணியும் கவின்மிகு தோல்வளம்
கடலை எண்ணெய்யும் ஈரோட்டில்
ஊத்துக் குழிதனில் பால்வளப் பொருளுடன்
உயர்மா துளம்பழம் விளைந்திடுமாம்
பூத்திடும் புதுமைகொள் படுக்கை விரிப்புகள்
புகழும் பவானி சென்னிமலை
காத்திடும் கால்நடை காங்கயம் அளிக்கும்
கவின்மிகு பெரியார் மாவட்டம்!

அறச்ச லூரிலே இசைத்தமிழ் எழுத்துடன்
அமைந்துள்ள சமணர் குகையுண்டு
திறமுடன் விசய மங்கலம் சமணர்
திகழ்ந்திடு தமிழ்ச்சங் கமுமுண்டு
சிறப்புள பூந்துறை திங்க ளூரினில்
சீனா புரம்வெள் ளோடுதனில்
உறவுகள் சொல்லும் சமணர் கோயில்கள்
உள்ளது பெரியார் மாவட்டம்!

பெருங்கதைக் காப்பியம் தோன்றிய தும்தமிழ்
பேணும் சிலப்பதி காரத்தின்
அரும்உரை செய்அடி யார்க்குநல் லாரின்
அணிசெய் ஊராம் நிரம்பைநகர்
இருந்தமி ழுக்கே இலக்கண நன்னூல்
எழுதிய பவணந்தி மாமுனியும்
பெரும்புல வர்பலர் இலக்கியம் செய்ததும்
புகழ்மிகு பெரியார் மாவட்டம்!

—புலவர் செ. இராசு



**பெரியார் மாவட்டம் :**

**பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி**

**கோ**வை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, பெரியார் மாவட்டம் துவங்கிய பின்னர், கோயம்புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து பிரிந்து செயல்பட்டு வருவது 'பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடட்'.

திரு ஆர். ரங்கசாமி, எம்.எல்.ஏ. தலைவராக உள்ள இந்த வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 4 கோடி ரூபாய் ஆகும்.

''3.2.82ல் 15 கோடி ரூபாயோடு துவக்கப்பட்ட எங்கள் வங்கி இப்போது 22 கோடி ரூபாய் உள்ள அளவுக்கு வளர்ந்திருக்கிறது'' என்று பெருமையோடு குறிப்பிட்டார் வங்கிச் செயலாளர் திரு கே. கே. பழனிச்சாமி.

நிரந்தர டிபாசிட்டுகள், பொற்குவியல் டிபாசிட்டுகள், சிறப்பு ரெக்கரிங் டிபாசிட்டுகள், மினி டிபாசிட்டுகள், நடப்புக்கணக்குகள் எனப் பல்வேறு டிபாசிட் திட்டங்கள் இந்த வங்கி மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

23 கிளைகளோடு செயல்படுகின்ற இவ்வங்கியில் மற்ற வங்கிகளைக் காட்டிலும் அரை சத விகிதக் கூடுதல் வட்டி அளிக்கப்படுகிறது. டிபாசிட் இன்ஸ்யூரன்ஸ் திட்டத்தின் மூலம் ரூ. 30 ஆயிரம் வரையில் வைப்புதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள் இவர்கள்.

905 கூட்டுறவுச் சங்கங்கள் இந்த வங்கியில் அங்கம் வகிக்கின்றன.

விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க் கடன்களும் அவர்கள் வருமானத்தை உயர்த்த கறவை மாடு வாங்கவும், கோழி வளர்க்கவும், ஆடு வளர்க்கவும் மட்டுமல்ல; வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான மருந்து தெளிப்பான், கட்டை வண்டிகள், டயர் வண்டி வாங்க, சாண எரிவாயு அடுப்பு அமைக்க எனப் பல வகைகளிலே பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி கடன் வழங்கி வருகிறது.

நெசவாளர் சங்கங்கள், பணியாளர் சங்கங்கள், பண்டகசாலைகள், விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலை ஆகியவைகளோடு நலிவடைந்த பிரிவினருக்கும் கடன் கொடுக்கிறார்கள் இங்கே. தனியார் நகைக்கடன் பெறும் வசதியும் உண்டு.

விவசாயிகள் கடன் பெற்று வாங்கிய ஆடோ, மாடோ, நோய்



**வங்கியின் தலைவர் சத்துணவு நிதி வழங்கல்.**

## பாடல் பெற்ற திருத்தலங்கள்

பெரியார் மாவட்டத்திலுள்ள கனகமலை, கொடுமுடி, பவானி சென்னிமலை, எட்டிமலை, கதித்த மலை, வட்ட மலை, காங்கேயம், ஊதியூர் ஆகியவை அருணகிரி நாதரால் பாடப் பெற்றுள்ளன.

பவானி திருஞான சம்பந்தரால் பாடப் பெற்றுள்ளது.

கொடுமுடி, தேவாரம் பாடிய மூவராலும், மாணிக்கவாசகராலும் பாடப்பட்டுள்ளது. சிறந்த சைவத் தலமெனக் கூறப்படும் இந்த ஊர், இசைக்குயில் கே. பி. சுந்தராம்பாள் பிறந்த ஊரும் ஆகும்.

## பெரியார் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்



### அரச்சலூர் :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சமணர்கள் தங்கி அறம் வளர்த்த அறச் சாலையூரே அரச்சலூர் ஆயிற்று. இவ்வூர் மலையின் வடசரிவில் உள்ள ஆண்டிப்பாறையில் இயற்கையான குகையும், சமணர்களின் கல் படுக்கைகளும், தென் பிராமியில் வடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் உள்ளன. மணிய வண்ணக் கண் தேவன் சாத்தன் காலத்து இசை பற்றிய தொன்மையான கல்வெட்டும் இங்குள்ளது.

### பழமங்கலம் நடுகல் :

பழமங்கலத்தில் நத்தக்காட்டின் அருகே உள்ள இட்டேறியில் உள்ள நடுகல்தான் இதுவரை கிடைத்துள்ள நடுகற்களிலேயே கவிதை வடிவத்தில் செய்து வடிக்கப்பட்டுள்ளது. இதோ அந்தச் செய்தி:—

''வாய்த்தபுகழ் மங்கலத்து
வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்தமகன் வென்ற
சயம்பெருக — சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப்
பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேஉலகில்
தான்''

### ஊராட்சிக்கோட்டை :

பதிற்றுப்பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலருக்கு நாடு கொடுத்த இடம் இது. திருஞான சம்பந்தர் பாடலில் 'நணா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பிற்காலப் பாடல்களில் நண்ணாவூர் என்று கூறப்பட்டுள்ள இடமும், இதுவே.

### தாராபுரம் :

தலைக்காட்டுக் கங்கர்கள் கொங்கு நாட்டைப் பிடித்து ஆண்டபோது 'ஸ்கந்தபுரம்' எனப் பெயரிட்டு ஆண்டது தாராபுரத்திற்கருகிலுள்ள கொங்கூர்தான், சோழர்கள் காலத்தில் 'பராந்தகபுரம்', 'இராசராசபுரம்' என்றும் விஜயநகர காலத்தில் 'ராராபுரம்' என்றும் கூறப்பட்ட இது தான் நாளடைவில் தாராபுரம் ஆயிற்று. சேரர் இவ்வூருக்குப் பெருவஞ்சி எனப் பெயரிட்டுள்ளனர். 'கொங்கும், குடந்தையும், கோட்டியூரும் பேரும்' எனப் பெரியாழ்வார் பாடலில் வரும் கொங்கு இந்த ஊர்தான். எனவே, இவ்வூர் ஆழ்வாரின் மங்களா சாசனம் பெற்ற ஊராகும். 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்றான இங்குள்ள பெருமாள் ராஜ்ய அபிஷேக விண்ணகரம் பெருமாள் எனப்படுகிறார். இங்கே அரசராக அபிஷேகம் செய்து கொண்டால்தான் இவர் கொங்கு நாட்டு அரசர் ஆகலாம் என்ற நிலை இருந்திருக்கிறது.

### காலிங்கராயன் அணை :

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் வெள்ளோட்டில் பிறந்த வீரபாண்டியனின் அமைச்சனாகவும் தளபதியாகவும், உத்தர மந்திரியாகவும் உயர்ந்த காலிங்கராயனால் கட்டப்பட்ட அணை இது.



> இலக்கியமும் அரசியலும் ஒன்றை மற்றொன்று தழுவிச் செல்லுகிறபோதுதான் முறைப் படியான ஜனநாயகம் அமையும்!
>
> —பேரறிஞர் அண்ணா

வங்கிச் செயலாளர் திரு கே. கே. பழனிச்சாமி

காரணமாகவோ விபத்தாலோ இறந்து போனால்-இன்ஸ்யூரன்ஸ் நிறுவனங்கள் கடன் தொகையை ஈடு செய்திட இவ்வங்கி வகை செய்கிறது. அரசு குறிப்பிட்ட பகுதிகளில் பயிர்களுக்கு இன்ஸ்யூரன்ஸ் செய்யப்பட்டுவிளைச்சல் பாதிக்கப்பட்டால் ஈடு செய்யும் திட்டமும் இருக்கிறது. வைப்புதாரர்களுக்கு விபத்துப்பாதுகாப்புத் திட்டம் ஒன்று இங்கே அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வங்கியின் தலைமையகத்திலும், கிளைகளிலும் மொத்தமுள்ள பணியாளர் எண்ணிக்கை 257 ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 8001 நிதியைப்பெரியார் மாவட்டத்திலேயே முதன் முதலாகத் தந்த பெருமையுடையது இந்த 'பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்'!

பெரியார் மாவட்டம்:

# உயிருள்ள உலோகச் சிற்பங்கள்



பெரியார் மாவட்டம் - ஈரோட்டில் உள்ள 'பூம்புகார் விற்பனைக் கூடத்திற்குச் சென்றிருந்த நாம். அங்கே வைக்கப்பட்டிருந்த சிறிய - பெரிய உலோகச் சிற்பங்கள் உயிருள்ளவை போலக்காட்சி தருவது கண்டு வியந்துபோனோம்!

'அவை எங்கிருந்து தருவிக்கப்படுகின்றன?' என்று அதன் நிர்வாகி திரு ஏ.கே. பெருமாளிடம் கேட்ட போது 'இவைகளைச் செய்தவர் இங்கேதான் இருக்கிறார்' என்று கூறி முகவரி தந்தார் அவர். போய்ப்பார்த்தோம், கைவினைக் கலைஞர் திரு எல். இராதாகிருஷ்ணனை.





33 வயதேயுள்ள இளைஞரான அவர், நுணுக்கம் மிகுந்த உலோகச் சிற்பங்களைச் செய்யும் திறமை காரணமாக இரண்டு முறை தமிழ்நாடு அரசின் முதல் பரிசுகளைப் பெற்றிருக்கிறார். தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆயக்காரன் புலத்தில் தனது பரம்பரையினர் இந்த வகையில் மேம்பட்டுத் திகழ்ந்ததன் தாக்கமே தன் கைவன்மைக்குக் காரணம் என்ற அவரிடம் ''நீங்கள் இதற்கென முறையாக யாரிடம் பயிற்சி பெற்றீர்கள்?'' என்று கேட்டோம். ''சுவாமி மலையில் உள்ள அரசு உலோகச் சிற்பப் பயிற்சி நிலையத்தில் மூன்றாண்டுக் காலம் படித்தேன். ஆனாலும் அதற்கு முன்னாலும் இது பற்றி ஓரளவுக்குப் பயிற்சி பெற்றிருந்தேன்.'' என்றார். தனது தந்தையார் ஆர். இலக்குமணன் காரைக்காலில் நகைத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈரோட்டிலுள்ள அனைத்திந்தியக் கைவினைக் கலை மையத்தார் இவரை டில்லி, பம்பாய் போன்ற பெரு நகரங்களில் நடந்த சிற்பக் கண்காட்சிகளுக்கெல்லாம் அழைத்துப் போய் சிறப்புச் செய்திருக்கிறார்கள். இவர் செய்த மீனாட்சி கல்யாணம் உலோகச் சிற்பம் மட்டும் ரூ. 22,000க்கு விலை போயிருக்கிறது.

முருகன், பிள்ளையார், சரஸ்வதி, லட்சுமி, அர்த்தநாரீசுவரர் போன்ற விக்கிரகங்கள்இவர் கைத்திறனில் மிக அற்புதமாக உருவாகியுள்ளன.

''கோயில் எதற்காவது நீங்கள் இதுபோல விக்கிரகங்களைச் செய்து தந்ததுண்டா?'' என்றோம்.

''ஏன் இல்லை?'' என்றுகேட்ட திரு எல். இராதா கிருஷ்ணன் - திருப்பூர் ஈஸ்வரன் கோயில், பவானி வர்ணாபுரம் கோயில், பூந்துறை ஈஸ்வரன் கோயில், அரச்சலூர் கோயில், ஈரோடு பெரிய மாரியம்மன் கோயில், மகிமாலீஸ்வரன் கோயில், ரயில் காலனி ஐயப்பன் கோயில் ஆகியவற்றுக்கும் இன்னும் பல கோயில்களுக்கும் உலோக விக்கிரகங்கள் செய்து கொடுத்திருப்பதைச் சற்றே இறுமாப்புடன் தெரிவித்தார். மலேசியாவில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு கோயிலுக்கும் இவரை அழைத்துப்போய் விக்கிரகம் செய்து வாங்கியிருக்கிறார்கள்.

பூம்புகார் விற்பனை நிலையம் போன்றவற்றுக்காக மூவகை உலோகங்களில் மக்களைக் கவரும் விக்கிரகங்களைச் செய்து வரும் இவர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக உதவி கேட்டிருப்பதாயும், அது கிடைத்த பின் இன்னும் பெரிய அளவிலே தனது தொழிலை விருத்திசெய்யவிருப்பதாகவும் கூறினார்.

–பீ. எல். ஆர்.



# மாமனிதர் மோகன் மல்ஜி சோர்டியா

சென்னை ஸ்ரீ எஸ். எஸ். ஜெயின் சங்கத்தின் தலைவராகவும், சென்னை ஜெயின் கல்லூரி நிர்வாகக் குழுவின் ஆயுள் தலைவராகவும் விளங்கிய திரு மோகன் மல்ஜி சோர்டியா 5-2-1984 அன்று மறைந்தார்.

பல அறப்பணிகளையும் மருத்துவ உதவிகளையும் கல்விப் பணிகளையும் பொது மக்களுக்கு வழங்கிய அன்னாரின் மறைவுக்கு, சென்னை மாநகர மக்களின் சார்பில் மாநகர ஷெரிப் திருமதி சரோஜினி வரதப்பன் 21-3-84-ல் சென்னை இராஜாஜி மண்டபத்தில் இரங்கல் கூட்டத்தை நடத்தினார்.

திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் உரையாற்றுகையில், ''ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்னர் மோகன்மல்ஜி சோர்டியா குடும்பம் தமிழகம் வந்து தமிழக மக்களுக்காக நல்ல பொதுப் பணிகளையாற்றி வருகிறது'' என்றார்.

முன்னாள் தமிழக முதல்வர் பெரியவர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் உரையாற்றுகையில், ''சென்னையைச் சொந்த ஊராகக் கருதிச் செயல்பட்டு வந்தார் சோர்டியா. அவர்களுடன் சுதந்திரப் போராட்டத்தின்போது எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. தேசபக்தி உள்ளவர் திரு சோர்டியா'' என்றார்.

திருமதி ருக்மணி அருண்டேல் பேசுகையில், ''அகிம்சைக்காகப் பாடுபட்டவர்; காந்திஜி வழியில் பணியாற்றியவர்; யார் எங்கு கஷ்டப்பட்டாலும் எவர் என்று பாராமல் உதவக் கூடியவர்'' என்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு எம். சாந்தப்பா அவர்கள் உரையாற்றுகையில், ''தன்னுடைய இறுதிக் காலம் வரை மக்களுக்காகப் பாடுபட்டவர். இவருடையபணி தமிழகத்தில் மட்டுமல்லாது வங்காளம், டெல்லி, ராஜஸ்தான் மாநிலங்களிலும்பரவி இருந்தது'' என்றார்.

டி. வி. எஸ். குரூப் நிறுவனத்தைச் சார்ந்த திரு டி.எஸ். சந்தானம் அவர்கள் பேசுகையில் ''சாதாரண குடும்பத்தில் பிறந்த சோர்டியா அவர்கள் கல்வி, மருத்துவம் போன்ற பொதுப் பணிகளில் ஈடுபட்டார்'' என்றார்.

ஜெயின் கல்விக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. எஸ். மோகன் சந்த் தாதா பேசுகையில் ''சோர்டியா பெயரில் பொறிஇயல் நிறுவனம் நிறுவப்படும்'' என்றார்.

தினமணி துணை ஆசிரியர் திரு. கருப்பையா அவர்கள் பேசுகையில், ''கோடிக்கணக்காகச் சம்பாதித்ததைக் கோடிக் கணக்கில் அள்ளிக் கொடுத்தார். ஆனால் கொடுத்ததை விளம்பரம் செய்யாமல் கொடுத்தார் என்பதைப் பாராட்ட வேண்டும்'' என்றார்.

சென்னை தலைமை நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமை உரையாற்றுகையில், ''உண்மையில் சைனராகத் திகழ்ந்தார்; வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அடித்தள மக்களுக்கு உதவி புரிந்தார்'' என்றார்.

சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு க. இராசாராம் அவர்கள் உரையாற்றுகையில், ''1000 பிறைகண்டு, சிறந்த தொண்டு செய்து, சமுதாயம் எண்ணிடும் வகையில் வாழ்ந்தார். தமிழகத்தைத் தாய் நாடாகக் கொண்டு வாழ்ந்தார். சென்னையில் 22 இடங்களில் சிறு மருத்துவமனைகளைத் திறந்து வைத்துள்ளார். இந்தக் காரியத்திற்காகத் தந்தை பெரியார் அவர்களும் பாராட்டியுள்ளார்.

''சோர்டியா படித்தவர் அல்ல; தான் பெற்ற இன்பத்தை மற்றவர்கள் பெற வேண்டும் என்று கருதிச் செயல்பட்டார். கொடுப்பது மட்டும் மகிழ்ச்சி அல்ல. அதைப் பெறுபவன் மகிழ்ச்சியடைவதே சிறப்பு என்று கருதி செயல் பட்டார்'' என்று குறிப்பிட்டார்.

மைய அரசின் பாசனத்துறை அமைச்சர் திரு. ராம்நிவாஸ் மிர்தா அவர்கள் பேசுகையில், ''நான் பிறந்த பகுதியில் சோர்டியா அவர்களும் பிறந்தார். இங்கு வாழ்ந்த சோர்டியா குடும்பம் இங்கு உள்ள மக்களுடன் கலந்து நல்லமுறையில் வாழ்கின்றது. இங்குள்ள மொழியையும் பேசுகிறது; உதவி ஸ்தாபனங்கள் மூலம் மக்களுக்கு உதவி புரிந்து வருவதும் பாராட்டத்தக்கது'' என்றார்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இரங்கல் உரையாற்றுகையில், ''சோர்டியாவுக்கு இரங்கல் தெரிவிக்கிறோம் என்றால் அவரது பாதையைப் புரிந்து கொண்டு நடக்க முற்படுகிறோம் என்றுதான் அர்த்தம். யாரையும் வேற்று மதத்தினராக நான் கருதுவதில்லை. எல்லோரும் எனக்கு ஒரே மதத்தினராகத்தான் படுகிறார்கள். எனவேதான் நான் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையைக் கொண்டு இருக்கிறேன்.

''சைன தத்துவத்தின் வழி நின்று தொண்டாற்றிய மோகன் மல்ஜி சோர்டியாவின் மறைவுக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

**அ. மருதவிநாயகம்**

பெரியார் மாவட்டம்:

# காவல் துறை

வீட்டு நலம் காப்பதைவிட நாட்டுநலம் காப்பதே மேலானது என்று கருதி, இரவு பகல் பாராமல், 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்று பாடுபடுவோர் காவல் துறையினர் ஆவர்.

பெரியார் மாவட்டக் காவல் துறையினர் இவ்வகையில் பெருமைக்குரிய பணியாற்றிவருகிறார்களென்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

திரு என்.அப்பாதுரை, ஐ.பி.எஸ்., மாவட்டக் கண்காணிப்பாளராக உள்ள இம் மாவட்டத்தில் 1141 காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். துணைக் கண்காணிப்பாளர்களாக அறுவரும், ஆய்வாளர்களாக 32 பேர்களும், உதவி ஆய்வாளர்களாக 81 பேர்களும் உள்ளனர்.

மாவட்டம் முழுமைக்குமாக 35 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அத்தனையும் தனித் தொலைபேசி வசதி உடையவை.

''பெண் காவலர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?'' என்று நாம் கேட்க, சற்று விரிவாகவே பதிலைச் சொன்னார் திரு. என். அப்பாதுரை, ஐ.பி.எஸ்.

''ஈரோடு காவல் நிலையத்திலே பத்துப் பேரும், கோபி காவல் நிலையத்தில் பத்துப் பேரும் இருக்கிறார்கள். அங்கே ஒரு உதவி ஆய்வாளர் இங்கே ஒரு உதவி ஆய்வாளர் உண்டு. போக்குவரத்தை ஒழுங்கு செய்வது; பொதுக் கூட்டம் போன்றவைகளில் பெண்கள் பகுதியில் அமைதி நிலைநாட்டுவது; பெண் கைதிகளைக் காவல் நிலையத்திற்கோ, வழக்கு மன்றத்திற்கோ கொண்டு வருவது, காவல் நிலையத்தில் அவர்களைப் பரிசோதிப்பது, கண்காணிப்பது போன்றவைகளில் பெண் காவலர்களின் பணி சிறப்பாகவே தேவைப்படுவதாக இருக்கிறது!''

ஈரோட்டில், காவல்துறை சிறப்புப் பிரிவு, கண்ட்ரோல் ரூம், வயர்லஸ், கைரேகை ஆய்வுப் பிரிவு, புகைப்படப் பிரிவு எல்லாவற்றிலுமே மிகவும் திறமையாளர்கள் அங்கம் வகிக்கின்றனர். காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம் எல்லா வசதியோடும் ரூ. 14 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

போக்குவரத்தைச் செம்மைப்படுத்துவதற்கெனத் தனியே இரு உயர் அதிகாரிகள், 2 தலைமைக் காவலர்களோடு 16 காவலர்கள் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர்.



'சடுகுடு' போட்டியில் பெற்ற பரிசுகள்

ஈரோட்டிலுள்ள காவலர் குடியிருப்பில் 36 வீடுகள் இருக்கின்றன. இதன் கட்டுமானச் செலவு ரூ. 22 இலட்சம் ஆகும்.

இம் மாவட்டத்திற்கெனப் புதிதாக வழங்கப்பட்டுள்ள படைப் பிரிவில் 60 பேர் - ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றனர்.

''அண்ணா விருது பெற்றவர்கள் யாரேனும் உண்டா?'' என்ற நம் கேள்விக்கும் சிரித்தவாறே ''இருபது பேர் இருக்கிறார்கள் சார்'' என்றார் காவல்துறை கண்காணிப்பாளர்.

''தங்கள்காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வழக்கு நிகழ்ச்சிகள் ஏதாவது சொல்லுங்களேன்?'' என்றோம்.

1981ல் கோவை, ஈரோடு, சேலம் பகுதிகளில் வீடு புகுந்து திருடுவதே தொழிலாகக் கொண்டிருந்த தாதா சங்கர்என்பவனைக் கைது செய்து, அவனிடமிருந்து மூன்றரை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள்-பணம் ஆகியவற்றைக் கைப்பற்றியது; 1982-83ல் ஊதியூர், நம்பியூர், காவல் சரகங்களைச் சேர்ந்த கோயில்களில் நடந்த சிலைத் திருட்டுகளைக் கண்டு பிடித்தது; மக்கள் கவனத்தைத் திசைதிருப்பி கைப்பொருளையே கவரும் திருச்சி ராம்ஜி நகர் தொம்ப நாயக்கன்கள், திருவெறும்பூர் கேப்மாறிகள் பலபேரை மடக்கிப் பிடித்தது; கைரேகைத் தடயத்தைக் கொண்டே பிரபல திருடன் கண்ணனைப் பிடித்தது; வெள்ளித் திருப்பூர் காவல் நிலையச் சரகத்தைச் சேர்ந்த நாச்சிமுத்துக் கவுண்டர் என்பார் மருத்துவ மனையில் 'அட்மிஷனி'ல் இருந்து கொண்டே வெளியே போய்த் தந்திரமாக ஒருவரைச் சுட்டுக் கொலை செய்ததைக் கைரேகைத் தடயத்தால் கண்டு பிடித்ததோடு அதற்கு முன் அவர் செய்திருந்த கொலைகளையும் ஆதாரத்தோடு நிரூபித்தது போன்ற சில நிகழ்ச்சிகளைப் பெருமிதத்தோடு அடுக்கிக் கொண்டே போனார் திரு. என். அப்பாத்துரை, ஐ.பி.எஸ்.


தமிழரசு தமிழரசு தமிழரசு தமிழரசு

## "தமிழரசு"
## சந்தா விவரம்

தமிழ் இதழ்—

ஓர் ஆண்டிற்கு ரூ. 18/-

அரையாண்டிற்கு ரூ. 9/-

ஆங்கில இதழ்—

ஆண்டுச் சந்தா ரூ. 9/-

(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :

சர்குலேஷன் மானேஜர்,
"தமிழரசு"
சென்னை - 600 002.

தமிழரசு தமிழரசு தமிழரசு தமிழரசு




காவல் துறையினருக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கிடும் அரசுத் திட்டத்தால் இம் மாவட்டத்தில் 1223 பேர் பயன் பெற்று வருகின்றனர்.

''எத்தனை வழக்குகள் பதிவாயின, கண்டு பிடிக்கப்பட்டன என்று ஓராண்டுக் கணக்குத் தர முடியுமா'' என்றோம்!

''தாராளமாக'' என்றவாறு விவரம் தெரிவித்தார் தலைமைக் கண்காணிப்பாளர்.

**திரு என். அப்பாதுரை, ஐ.பி.எஸ்.,**



"1983ல் 1,189 குற்றங்கள் பதிவாகியுள்ளன. அதில் 469 குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளனர். 372 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு நீதி மன்றத்திலே வழக்கு நடந்து வருகிறது. மேலும் 20.3.'84 வரை இந்த மாவட்டத்தில் 201 குற்றங்கள் பதிவானதில், 15ல் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளனர். 78 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, குற்றவாளிகளை நீதி மன்றத்தில் நிறுத்தியிருக்கிறோம்''.

இம்மாவட்டக் காவல்துறையினர் 'சடுகுடு' விளையாட்டில் நிகரற்றவர்களாக விளங்குகிறார்கள். அப்போட்டியில் அவர்கள் பரிசாகப் பெற்ற கேடயங்கள், வெள்ளிக் கோப்பைகள் ஏராளமாக இருக்கின்றன.

திருமணமாகாத இளம் காவலர்களுக்கென 18 இலட்சம் ரூபாய் மத்திய நிதி உதவியில், தனிக் குடியிருப்பு ஒன்று ஈரோட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**- ராஜீவ்**

## முதல் - கடைசி அட்டைப் பட விளக்கம்

ஈரோட்டில் உள்ள பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், ரூ. 22 இலட்சம் செலவில் சுற்றுலாத் துறையால் சுற்றுப்புறம் விரிவாக்கப்பட்டு வரும் பவானி கூடுதுறை சங்கமேசுவரர் ஆலயம் மற்றும் பெரியார் மாவட்டக் காட்சிகள்.



*** பெரியார் மாவட்டத்தில், கடந்த ஆண்டில் மட்டும் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.**

*** பெரியார் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டிலே மட்டும் 18 ஆயிரம் குடும்பத்தார் பயன்பெற்றுள்ளனர்; அவர்களில் 6 ஆயிரம் பேர் ஆதிதிராவிடர்கள், இரண்டாயிரம் பேர் பெண்கள்!**

''இப்போது ஈரோடு தென்னாட்டு வார்தா எனக் கருதப்படுகிறது. இன்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி வார்தாவில் கூடியிருக்கிறது. வார்தாவில் நம்நாட்டுத் தலைவர் காந்தியார் வாழ்கிறார். இங்கரிலே தமிழர் தலைவர் பெரியார் வாழ்கிறார்.

—10.8 1939-ல் பெரியாருக்குப் பொன் முடிப்பு அளிக்கப்பட்ட விழாவில் என். ஆர். சாமியப்ப முதலியார் பேசியது.

**தென்னாட்டு வார்தா!**

# எம் கடன் பணி செய்து கிடப்பதே!



சமுதாயச் சீர்திருத்தம் காண அரும்பாடுபட்டவர் தந்தை பெரியார்; அவர் பெயரில் அமைந்திருக்கும் பெரியார் மாவட்டத்தில் சமூக நலத்துறை பணிகளும் சரியானபடியே நடந்து வருகின்றன.

அரும்புச் சிறுவர் சிறுமியர்களுக்கான குழந்தைகள் காப்பகங்கள், மாண்புமிகு முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் ஆகியவை பாங்குறச் செயல்படுகின்றன. இங்கே. தையல் எந்திரங்கள் 16 பேருக்கு வழங்கப்பட்டு, 'ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காண்' எனத் தொழில் கற்று வருகிறார்கள் அவர்கள்; 40 இளம் பெண்கள், உதவித் தொகையோடு இலவசத் தட்டச்சுப் பயிற்சியும் பெற்றுவருகிறார்கள்.

கணவனை இழந்த 40விதவைத் தாய்மார்களுக்குப் பிறந்த பெண்கள் மணவிழா காண, தலா ஆயிரம் ரூபாய் வீதம் இதுவரை 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. மறுவாழ்வு பெற்ற விதவை மகளிர் நால்வருக்கு இரண்டாயிரம் ரூபாய் தரப்பட்டிருக்கின்றது. தேசியச் சேமிப்புப் பத்திரங்களாக.

உடல் ஊனமுற்றோர் பள்ளியிலே பயிலும் 380 மாணவ மாணவிகளுக்குத் தலா ரூ. 25 வீதம் இதுவரை ரூ. 8,500 செலவிடப்பட்டு அவர்கள் சிந்தை குளிர்ந்திருக்கிறார்கள்.

விதவைப் பெண்கள் பெற்றெடுத்த குழந்தைகள் படிக்கப் புத்தகங்கள் பெற இதுவரை மாவட்டச் சமூக நலத்துறை செலவிட்ட தொகை ரூ. 9,400.

பெரியார் மாவட்டம் முழுதுமுள்ள 800 மகளிர் மன்றங்கள் மணம் பெறவும் மலர்ச்சி பெறவும் என ரூ. 80 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

செவி கேளாதோர் பள்ளியிலே படிக்கும் 40 பேர் உணவு பெறவும் உறைவிடம் பெறவும் கற்றுயரவும் ரூ. 2 இலட்சத்து 28 ஆயிரம் வரை அளித்திருக்கிறார்கள். தையல் தொழில் மற்றும் எழுது பொருட்கள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் இரண்டு நடைபெற்று வருகின்றன. அதன் வளர்ச்சிக்கென ரூபாய் 79 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

சமூக நலத்துறை அரசின் ஓர் அங்கமே எனினும், தனியார் நடத்தும் தொண்டு புரியும் அமைப்புகளைத் துச்சமாகக் கருதுவதில்லை. 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற வகையில் இந்த மாவட்டத்திலே, அவ்வாறான சேவை இல்லங்கள் பலவற்றுக்குமாக ரூ. 1,04,335 ஆண்டு முழுமைக்குமாகச் செலவிட்டு வருகிறது.

## உள்ளம் சிலிர்க்கும் உண்மை!

பல ஆண்டுகளுக்கு முன் ஈரோடு நகரை 'பிளேக்' நோய் தாக்கியது. அதன் கடுமை கண்டு அஞ்சிய மக்கள்-குறிப்பாகச் செல்வந்தர்கள், வசதி பெற்ற நடுத்தர வர்க்கத்தினர் ஊரைக் காலி செய்து வெளியிடங்களுக்குச் சென்று விட்டனர்.

எங்கும் போக வாய்ப்பும் வசதியும் அற்ற எளிய மக்கள் மட்டுமே ஊரில் இருந்து வந்தனர். அவர்கள் அந்த நோயால் பாதிக்கப்பட்ட போது பெரியார் அவர்கள்-பெரும் குடும்பத்தில் பிறந்து-செல்வமும் செல்வாக்கோடும் இருந்த அந்த நாளிலும் தன் தோழர்கள் சிலபேருடன் ஏழை எளியமக்கள் வாழும் பகுதிகளுக்குத் துணிவோடு சென்று அவர்களுக்குத் தேவையான பல உதவிகளைச் செய்தார். நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியும் கிடைக்கச் செய்தார்.

அதுமட்டுமல்ல; நோயால் இறந்து போன ஏழைய எளிய மக்களது சடலங்களைச் சுடுகாடு வரை தானே சுமந்து கொண்டு போய் உதவி செய்திருக்கிறார். கேட்கவே உள்ளம் சிலிர்க்கிறதல்லவா?

—சாமி சிதம்பரனார் எழுதிய 'தமிழ்த் தலைவர்' என்ற நூலிலிருந்து.

சித்திரைத் திங்கள் முதல் நாள். சென்னை வள்ளுவர் கோட்டம்புதுப்பொலிவுபெற்றுத் திகழ்ந்தது. சிறந்த திரைப்படங்கள்-கலைஞர்கள் ஆகியோருக்கு விருது வழங்கும் விழாவின் காரணமாகத் தான் அந்தப் புதுப் பொலிவு உருவாகியிருந்தது.

விழாவுக்கு மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் தலைமை ஏற்றார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர் தெரிவித்தார்:

''ஆண்டுக்கு ஒருமுறை கலைஞர்களைப் பாராட்டுவதற்கு இந்த விழா நடைபெறுகிறது. பேரறிஞர் அண்ணாவின் காலத்தில் தொடங்கப்பட்ட இவ்விழா இடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது நிறுத்தப்படக் கூடாது, தொடரப்படவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

தேர்ந்தெடுத்த குழுவின் தலைவரான மாண்புமிகு நீதிபதி திரு ஆர்.செங்கோட்டுவேலன் அவர்கள், படங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்ற விதத்தை எடுத்துரைத்தார்.

பாராட்டுரை வழங்கிய தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் திரு எஸ்.எஸ்.இராசேந்திரன் குறிப்பிட்டார்:

''மாண்புமிகு முதல்வர் எம்.ஜி. ஆர். அவர்கள் முழுக்க முழுக்க அரசியலில் இறங்கிவிட்டாலும் கூட, கலை உலகத்தினரின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வருகிறார். கலை உலகினர் எந்த அளவுக்குப் பாராட்டப்படவேண்டும், உற்சாகப்படுத்தப்படவேண்டும் என்பதில் அவருக்கு அக்கறை உண்டு.

அடுத்து பாராட்டுரை வழங்கிய இந்திய திரைப்பட சம்மேளனத்தின் தலைவர் திரு. டி. இராமானுஜம் தெரிவித்தார்.

''புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தான் திரையுலகம் மிகவும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. முன்பு 1500 திரையரங்குகள் இருந்தன. இப்போது 2500 திரையரங்குகள் உள்ளன. முன்பு ஆண்டுக்கு 50 படங்கள் தான் உருவாகின. தற்போது 150 படங்கள் உருவாகி வருகின்றன. முதல்வர் அவர்கள் அளித்துள்ள சலுகைகளினால் தான் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.''

தென்னிந்திய திரைப்படவர்த்தக சங்கத்தின் தலைவர் திரு ஏ.ஆர். ராஜு தமது பாராட்டுரையில் கூறினார்.

''தமிழகத்தைப்போலவே ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களும் விருது வழங்கிக் கலைஞர்களைச் சிறப்பித்து வருகின்றன. கர்நாடக மாநிலத்தில் கன்னட மொழியில் தயாரிக்கப்படும் படங்களுக்கு 50 சதவிகிதம் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. அதுபோல் தமிழகத்திலும் தமிழ்மொழிப் படங்களுக்கு 50 சதவிகிதம் வரிவிலக்கு அளித்தால் நல்லது''

தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு ஜி.அனுமந்தராவ் தமது உரையில் தெரிவித்தார்:

''திரைப்படத் தொழிலுக்குத் தமிழ்நாடு அரசு மிகுந்த ஆதரவு-ஊக்கம் தருவதை நான் பாராட்டுகிறேன்.''

தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு. வலம்புரி சோமநாதன் தமது உரையில் குறிப்பிட்டார்.

''இங்கு பாராட்டப் பெறும் கலைஞர்கள் சாதாரணக் கலைஞர்கள் இல்லை. இவர்கள் தினமும் மக்களால் நினைக்கப்படுகிற கலைஞர்கள்''

அடுத்து, மேதகு ஆளுநர் தமது உரையை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர் கலையின் பெருமையையும், அது சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டிய அவசியத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்.



''கலை உலகில் பாடுபடும் கலைஞர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றிக் கவலைப்படாமல் கலை உலகில் வாழ்பவர்கள்-கலைக்குத் தொண்டாற்றுபவர்கள் என்ற முறையிலே - தமிழக அரசு அவர்களை மதிக்கிறது''.

சிறந்த படங்களைத் தேர்ந்தெடுத்த தேர்வுக் குழுவின் தலைவரான மாண்புமிகு நீதிபதி திரு பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் அவர்கள்-படங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டமைக்குரிய காரணங்களை எடுத்துரைத்தார்.

தமிழக அரசின் ஒரு லட்ச ரூபாய் உதவித் தொகையைப் பெறுவதற்குரிய படங்களைத்

''கலைத்துறை பொழுது போக்கு அம்சத்தை மட்டும் கொண்டதல்ல, சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரையும் ஈர்க்கக் கூடிய சிறந்த துறை அது. தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் அம்சங்கள் அடங்கிய திரைப்படங்களைத் தயாரிப்பாளர்கள் உருவாக்க முன்வரவேண்டும்''.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்புரை ஆற்றினார். (உரை பிறிதோர் இடத்தில்)

# திரைப்படங்கள் கலைஞர்கள் விருது பெற்ற விழா

உரையாற்றிவிட்டுச் சிறந்த திரைப்படங்கள், சிறந்த கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகளையும் உதவித் தொகை பெறுதற்குரிய திரைப்படங்களுக்கு இலட்ச ரூபாய் உதவித்தொகையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்தார். ராஜா சாண்டோ நினைவுப் பரிசை நகைச்சுவை நடிகர் திரு கே. சாரங்கபாணிக்கு அளித்தார்.

திரு கே.சாரங்கபாணி தமது நன்றியுரையில் தெரிவித்ததாவது:

''ராஜா சாண்டோ சிறந்த நடிகர், இயக்குநர் ஆவார். பல்லாண்டுகளுக்கு முன்பே திரை உலகில் பணியாற்றிச் சிறப்படைந்தவர் அவர். கலைஞர்களுக்குப் பெருமை தேடித்தந்த கலைஞர் அவர். அவர் பெயரில் கலைஞர்களுக்கு இந்த விருது வழங்கும் தமிழக அரசுக்கு நன்றி.

அடுத்து, திரைப்படஇயக்குநர் முக்தா திரு.சீனிவாசன் குறிப்பிட்டதாவது:

''விருது வழங்கி, பணமும் கொடுத்துப் பாராட்டும் வழங்குகிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். தனிநபர் ஒழுக்கம் வளர்ந்தால்தான், சமுதாய ஒழுக்கம் வளரமுடியும். அந்த வகையில் இது ஒழுக்க விரிவுரை விழாவாகத் திகழ்கிறது.''

அடுத்து திரைப்பட கதாசிரியர்-இயக்குநர் திருஏ.எஸ்.பிரகாசம், தமது உரையில் தெரிவித்ததாவது:

''எனது 'எச்சில் இரவு' படம் ரஷ்யாவில் நடைபெற்ற திரைப்பட விழாவில் பங்குபெற்றபோது அங்கு பலரும் பார்த்துப் பாராட்டினர். இன்று என்னுடைய தாயகத்திலே பெறுகின்ற பாராட்டைக் கண்ட பின்னர் தான் என் இலட்சியம் நிறைவேறியுள்ளது என்பகை உணருகிறேன்''

அடுத்து, திரைப்பட இயக்குநர்-கதாசிரியர் திரு. பாரதிராஜா உரையாற்றும்போது கூறினார்:

''எனக்கு அச்சத்தை ஏற்படுத்திவிட்டது இந்த விழா. இந்த ஆண்டு எனக்குப் பரிசு கிடைத்துள்ளது. இனி அடுத்த ஆண்டும் இதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலை இப்போதே ஏற்பட்டுவிட்டது''

அடுத்து, திரைப்பட நடிகர் கார்த்திக், ''சிறப்புப் பரிசு அளித்த தமிழக அரசுக்கும் முதல்வருக்கும் நன்றி'' என்றார்.

அடுத்து உரையாற்றிய திருமதி மனோரமா தெரிவித்தார்:

''அரசு அளித்த இந்தப் பரிசை நாங்கள் மனமுவந்து ஏற்றுக் கொள்கிறோம். இதுபோன்ற பரிசு பெறுவதற்கு எல்லாக் கலைஞர்களும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.''

அடுத்து, திரைப்பட நடிகை செல்வி.ராதா, ''ஒவ்வொரு ஆண்டும் கலைஞர்களுக்கு விருது வழங்கி உற்சாகப்படுத்தும் தமிழக அரசுக்கு நன்றி'' என்றார்.

அடுத்துப் பேசவந்த செல்வி ஸ்ரீதேவி, ''என் வாழ்நாளில் மறக்க முடியாதபடி அமைந்துவிட்டது இந்த விழா'' என்று கூறினார்.



அடுத்து, நகைச்சுவை நடிகர் திரு கே.ஏ. தங்கவேலு நகைச்சுவை ததும்பும் வகையிலும் தத்துவ முழக்கம் மின்னும் வகையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தமக்கும் 1935ஆம் ஆண்டிலிருந்தே இருந்துவந்துள்ள நட்புக்குறித்துச் சான்றுகளுடன் எடுத்துரைத்தார். அவர் மேலும் தெரிவித்தார்:

''இந்த அரசு எங்களுக்கு இந்த விருதை வழங்கியிருந்தாலும் இதனை வழங்கிய பெருமை

பொதுமக்களுக்கு உண்டு; ஏனென்றால் அவர்கள்தான் பல முறை படங்களைப் பார்த்து ரசித்து எங்களுக்குப் புகழைத் தேடித் தருகிறார்கள். அவர்களால்தான் எங்கள் புகழ் ஓங்குகிறது; எங்களுக்குப் பரிசுகளும் வந்தடைகின்றன''.

**உதவித்தொகை பெற்ற திரைப்படங்கள்**

- சுமை
- ஒரு வாரிசு உருவாகிறது
- அவள் ஒரு காவியம்
- எச்சில் இரவுகள்
- ராஜபார்வை

அடுத்து, கமலஹாசன் தமது உரையில், ''முதல்வர் அவர்கள் எங்கள் தயாரிப்பான ராஜபார்வை படத்திற்கு அளித்த உதவித்தொகையான ஒருலட்சரூபாயில், நான் 35 ஆயிரத்தை முதல்வர் அவர்களிடம் திருப்பி அளிக்கிறேன். அவரது அரிய திட்டங்களில் ஏதாவது ஒன்றிற்கு அந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

உடனடியாக 35 ஆயிரம் ரூபாய்க்குரிய காசோலையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார் கமலஹாசன்.

அந்தக் காசோலையைப் பெற்றுக்கொண்ட மாண்புமிகு முதல்வர் ''இந்தத் தொகை, நலிந்த கலைஞர்கள் நல்வாழ்வு நிதியில் சேர்த்துக் கொள்ளப்படும். ஏற்கனவே ஏவி.எம்.சரவணன் அவர்களும், பாரதிராஜா அவர்களும் 'இந்தத் திட்டத்திற்குப் பண உதவி செய்யமுன்வந்துள்ளனர். ஆகவே இந்த 35 ஆயிரம் ரூபாயை பாரதிராஜா அவர்களிடமே கொடுக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

இறுதியில், செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு :
—தமிழ்ப்பித்தன்

# வீட்டு வசதி



தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஒவ்வொரு சாதாரணக் குடிமகனுக்கும், அவரவர் பொருளாதார வசதிக்கேற்ப குறைந்த தவணை முறையில் வீடுகளைக் கட்டித் தந்து வருகிறது.

இந்த வகையில் 1977ஆம் ஆண்டு மே மாதம் பெரியார் மாவட்டத் தலைமையிடமான ஈரோட்டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் ஈரோடு வீட்டு வசதிப் பிரிவு துவக்கப்பட்டது. ஈரோடு நகரின் வீட்டு வசதிப் பிரச்னைகளைப் போக்குவதில் இங்கே இந்தப் பிரிவினரின் பணிகள் சிறப்பாகத் திகழ்கின்றன.

$55\frac{1}{2}$ ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரியார் நகரில் தவணை முறைத் திட்டத்தில் குறைந்த வருவாயினருக்கென 518 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இதில் தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கென 168 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வருவாய் ஆய்வாளருக்கென 16 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. கடைநிலை ஊழியர்களுக்கென 96 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கென 64 தனி வீடுகளும், 136 ஈரடுக்கு வீடுகளும், உயர் வருவாயினருக்கென 50 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. 88 மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இங்குள்ள மகாகவி பாரதி சமூகக்கூடம் ரூ. 9 இலட்சம் செலவில் அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பள்ளம் ஓடைக்கு வடபுறமும், மேட்டூர் சாலைக்கு இருபுறமும் காந்திரோடு வரை அமைந்துள்ளதுதான் பெரியார் நகர். ஆறடுக்குக் கட்டடங்கள் அணிசெய்திடும் இப்பகுதிக்கு மேட்டூர் சாலையிலும் காந்தி ரோட்டிலும் ரூ. 1.71 இலட்சம் செலவில் நுழைவாயில்கள் சிறப்புற அமைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு வீட்டுவசதிப் பிரிவினரால், காவல் துறையினருக்காக 36 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. அவற்றின் கீழே 24 கடைகள் இருக்கின்றன.

$45\frac{1}{2}$ ஏக்கர் பரப்பளவுள்ள சம்பத் நகரில் 672 உயர் வருவாய் வீடுகள் தவணை முறை திட்டத்திலே கட்டிமுடித்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கென 192 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் 108 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் தலைநகரான சென்னையிலே மட்டுமன்றி மற்ற மாவட்டங்களுக்கும் குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் விரிவு படுத்தப்படலாம் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை,முதன் முதலாகச் செயல் படுத்தப்பட்ட மாவட்டம் பெரியார் மாவட்டம்தான்.

அந்த வகையில்,குடிசைப்பகுதி மாற்று வாரியத்திட்டத்தின் கீழ், பெரும் பள்ளம் ஓடைக்கரையில் 400 வீடுகள் அடுக்கு மாடிக்கட்டடமாக அழகோடு உருவாக்கப்பட்டுள்ளது. பெரும்பள்ளம் ஓடைக்கரையிலே ரூ. 160 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 624 வீடுகளும், கருங்கல் பாளையத்திலே ரூ. 32 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 288 வீடுகளும் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.

2 அங்காடிக் கட்டடங்களையும் கட்டித் தந்துள்ள வீட்டு வசதி வாரியத்தார், கோபிசெட்டி பாளையத்தில் 210 மனைகளையும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தியுள்ளனர். —ராஜ

# சேலத்தில் ஒரு சாதனை




'திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்' என்ற கோட்பாட்டின்படி நாட்டில் உள்ள குடும்பங்கள் எல்லாம் வாழமுற்பட வேண்டும் என்ற நோக்கில் குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'அனைத்து அரசு ஊழியர்களும் திட்டமிட்டுக் குடும்பம் அமைத்து வாழ்வதன் மூலம் ஒளிமயமான வாழ்வு பெறலாம். அதற்காக 1985ஆம் ஆண்டைத் திட்டமிட்ட குடும்ப ஆண்டாகக் கடைப்பிடித்து, அந்த ஆண்டில் குழந்தைகளே பெற்றுக் கொள்வதில்லை என உறுதிமொழி ஏற்றுச் செயல்படுவது' என்று, கடந்த 24.2.'84ஆம் நாள் சென்னை தலைமைச் செயலகத்தில் கூடிய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அடங்கிய இருபத்தேழு சங்கங்களின் தலைவர்களும், பிரதிநிதிகளும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர்.

அதைத் தொடர்ந்து சேலத்தில் கடந்த 14.4.'84ஆம் நாள் 1985 திட்டமிட்ட குடும்ப ஆண்டு உறுதிமொழி ஏற்பு விழா, சீரும் சிறப்புமாக நடந்தேறியது. பின்னர் அரசு கடைநிலை ஊழியர்களின் ஊர்வலம்,

* 1985ஆம் ஆண்டில் குழந்தை பெற்றுக்கொள்ள மாட்டோம்!

* 33 வயதுக்குப் பிறகு குழந்தை பெற்றுக்கொள்ள மாட்டோம்!

* அதிகம் பெறாதே! அவதிப்படாதே!

என்பன போன்ற பல்வேறு குடும்பநல மொழிகளை முழங்கிக் கொண்டு வந்தது.

ஊர்வலம் நேரு கலையரங்கத்தை அடைந்ததும், கடைநிலை ஊழியர்கள் மாநிலச் சங்கத் தலைவர் திரு. ஏ.சிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கடைநிலை ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வரதராஜுலு, அரசு 2ஆம் செயலாளர் திரு டி.வி.அந்தோனி ஆகியோர் உரையாற்றிய பின்னர் அரசு கடைநிலை ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இறுதியாக மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராசன் அவர்கள் குடும்பநலத் திட்டத்தின் அவசியம் குறித்து உரையாற்றினார்.

மாலையில் அரசு இரண்டாம் செயலாளர் திரு டி.வி.அந்தோனி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வரவேற்புரையாற்றினார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர்.வரதராஜுலு அவர்கள்.

அரசு இரண்டாம் செயலாளர் திரு. டி.வி.அந்தோனி அவர்கள் தலைமை உரை ஆற்றினார்.

அடுத்த அரசு ஊழியர்கள் சங்கங்கள் பலவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் உரையாற்றி, 1985ஆம் ஆண்டைத் திட்டமிட்ட குடும்ப ஆண்டாக நிறைவேற்ற எல்லா வகையான ஒத்துழைப்பும் நல்குவதாக உறுதி கூறினர்.

சமூகநல வாரிய உறுப்பினர் திருமதி நாமகிரி தாமோதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பால்வளத் தலைவருமான திரு. கண்ணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கிருஷ்ணராஜ், சட்டமன்ற உறுப்பினர் திரு மு. ஆறுமுகம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி.பழனியப்பன் ஆகியோர் உரையாற்றினர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வரதராஜுலு அவர்கள் படிக்க அரசு ஊழியர்கள் உறுதிமொழி ஏற்ற நிகழ்ச்சி அடுத்து நிறைவேறியது.

பின், 1983-84ஆம் ஆண்டில் சேலம் மாவட்டக் குடும்பநலத் திட்ட வெற்றிக்கு மிகச் சிறந்த முறையில் பணியாற்றியவர்களுக்கு மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராசன் அவர்கள் பரிசு வழங்கிப் பேருரையாற்றினார்.

தொகுப்பு: எஸ். முத்துராமலிங்கம்






**த**மிழக அரசில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு ஊழியர்களின் இரண்டாவது மாநில மாநாடு சென்னை பொது மருத்துவ மனைத் திடலில் 25.3.84 அன்று நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை திரு வே.திருமலை வரவேற்றார். திரு எம்.வி.இலட்சுமி நரசிம்மன் தலைமை வகித்தார். பல்வேறு ஊழியர்களின் அமைப்பைச் சார்ந்த தலைவர்கள் மாண்புமிகு முதல்வருக்கு மாலை அணிவித்து சத்துணவுத் திட்டத்திற்கு நிதி வழங்கினார்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. அண்டே அவர்கள் மாநாட்டினை திறந்து வைத்துப் பேசுகையில், ''உங்களது குறைகளைப் படிப்படியாக நிறைவேற்றி வருகின்றோம். ஒரே ஒரு கோரிக்கையை உங்கள் மத்தியில் வைக்கிறேன். **உங்களது தேவைகளைப் போராடிப் பெறக்கூடாது, வாதாடிப் பெற வேண்டும்** என்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்திற்கு நல்ல பெயர் ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறவர்களை இந்த அரசு கைவிடாது. நல்ல முடிவினை அரசு உங்களுக்கு விரைவில் அறிவிக்கும்'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில், ''பெண்களுக்குச் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்று கூறுகின்றோமே அதை இங்கு காண முடிகிறது. எந்தக்கட்சியைச்சேர்ந்தவர்களானாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும், எல்லோரையும் நான் சமமாக நடத்துகிறவன். சத்துணவு சாப்பிடுவது யார் பெற்ற பிள்ளை என்று பாராமல் நன்கொடை அளித்துள்ளீர்கள்; அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

''மக்களின் வரிப் பணத்தை மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும். மக்களோடு இணைந்துவாழ், மக்களிடம்போ என்று அண்ணா சொன்னார்கள். அண்ணாவின் கூற்றுப்படி நடந்து வருகிறோம்.

''சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு, தற்காலிக இளநிலைப் பணியாளர்களை நிரந்தரமாக்குவது போன்ற கோரிக்கைகளை அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்'' என்றார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற, சட்டமேலவை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**தொகுப்பு :**

**அ. மருதவிநாயகம்**

## தங்கவேல், வெள்ளி வாள், கேடயம்.



**சென்னையில் 25-3-84 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசு அலுவலர் (C&D பிரிவு) கழக மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர்** டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் கோவை மாவட்டக் கிளையினர் தங்கவேல் ஒன்றும், மதுரை மாவட்டக் கிளையினர் வெள்ளி வாளும், வெள்ளிக் கேடயமும் வழங்கினார்கள். இந்தத் தங்கவேலும், வெள்ளி வாளும், கேடயமும் தமிழக ஆலயங்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது அறிவித்தார்கள்.

அதன்படி 29-3-84 அன்று அந்த தங்கவேலும், வெள்ளிவாளும். வெள்ளிக் கேடயமும், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டன. அமைச்சர் அவர்கள் அவற்றை இந்து சமய ஆட்சித்துறை ஆணையாளர் திரு. கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்கள். தங்கவேல், திருச்செந்தூர் ஆலயத்திலும், வெள்ளி வாள், வெள்ளிக் கேடயம் ஆகியவை திருவேற்காடு ஆலயத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட தங்க வேல் 6 பவுனில் தங்க முலாம் பூசியது. மதிப்பு ரூபாய் 10,500; வெள்ளி வாளும் கேடயமும் 2½ கிலோ, மதிப்பு ரூ 9,000.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண் : M. 6070

# தமிழரசு











